# தமிழ் நயம்

# '97



வெளியீடு:

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்

*With Best Compliments*

*From*

# JEYA BOOK CENTRE


**THE HOUSE OF LEARNING**
**AND LEADING IMPORTERS & DISTRIBUTORS OF**
**ALL TYPES OF**

**MEDICAL**
**ENGINEERING**
**COMPUTER**
**MANAGEMENT**
**SCHOOL TEXT BOOKS**

**CHILDREN'S BOOKS**
**DICTIONARIES**
**&**
**GENERAL BOOKS**

**91 - 99 U.G.FLOOR**
**PEOPLE'S PARK COMPLES**
**COLOMBO -11**
**TEL:438227 FAX: 332939**

**BRANCH:-**
**688, GALLE ROAD**
**COLOMBO -03**
**TEL:580594**



## சமர்ப்பணம்

அடக்குமுறையாளரை அடித்து
விரட்டப் புறப்பட்ட சிங்கம்.


தாயக மண்ணே தலையினும்
மேலென்ற தாயகத்தலைவன்.

"செய் அல்லது செத்து மடி" என்று
செருக்களம் புகுந்தவன்.

அன்னைத்தமிழின் தலைமகன் வன்னி நாட்டின் திருமகன்
பண்டாரகவன்னியன் என்றிடும் பைந்தமிழன்..!

வரலாறு உனை மறக்கலாம்-மறைக்கலாம்
வல்லோர் எம் வார்த்தைகள் மறவாது.

சுந்தரத் தமிழா! - உனக்கித்
தமிழ்நயம் சமர்ப்பணம்.



றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்
பெருமையுடன் வழங்கும்

# கலை விழா'97

காலம் : ஈஸ்வர வருடம் ஐப்பசித் திங்கள் 23ம்நாள் ஞாயிற்றுக்கிழமை
(9-11-97) மாலை 4.00மணிக்கு
இடம் : நவரங்கல மண்டபம்

இதழாசிரியர் : பா.வசீகரன்
இணை இதழாசிரியர்கள் : யோ. ஜெகதீஷ் ச. சஷிகாந்த்

ROYAL COLLEGE TAMIL LITERARY ASSOCIATION
PROUDLY PRESENTS

# KALAI VIZHA '97

Date : Sunday the 9th of November 1997
Time : 4.00 P.M
Venue : Navarangahala

Editor : B.T. VASEEKARAN
Asst.Editors : Y. JEGATHEESH
S. SASHIKANTH

# தமிழ் வாழ்த்து

அன்னைத் தமிழே வாழ்த்துகின்றோம் ~ எம்
ஆருயிர்த் தாயே வாழ்த்துகின்றோம்!
இன்னல் சூழ்ந்த வேளையிலும் ~ சீர்
ஈழத்தவர் நாம் வாழ்த்துகின்றோம்.

சங்கத் தமிழே வாழ்த்துகின்றோம் ~ நற்
சான்றோர் தாயே வாழ்த்துகின்றோம் !
சிம்மத்தவருங் கண்டஞ்சும் ~ தமிழ்ச்
சீரார் தாயே வாழ்த்துகின்றோம்.

பன்னூறாண்டு முன்தோன்றி ~ இவ்
வையமெங்கும் புகழ்படைத்தாய் !
பொன்னொப்பனைய எந்தாயே ~ உனைப்
போற்றி நாங்கள் வாழ்த்துகின்றோம்.


குண்டலம் மேகலை வளையோடும் ~ நற்
சிந்தாமணி சீர் சிலம்போடும் !
பொய்யா மொழியோன் வரியோடும் ~ புகழ்
ஓங்கி உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வஞ்சி, மதுரை, சோழத்தான் ~ மடி
வாழ்ந்து வளர்ந்தாய் வாழ்த்துகின்றோம்!
வெற்றி என்றும் நின் பக்கம் ~ நிற்க
வேத்தியர் நாம் வாழ்த்துகின்றோம்.

பா. வசீகரன்

*With Best Compliments*

*From*



**SAAI**

**TRAVELS & COMMUNICATION**

**NO:32, HAMPDEN LANE, WELLAWATTE,**
**COLOMBO-06**

**TEL:074-512836, 583918, 587932**
**FAX: 580804**

# ஏடு இட்டோர் இயம்பல்...!

**தமிழே! அமுதே! வணக்கம்**

**தாய்பிள்ளை உறவு உனக்கும் எமக்கும்.**

ஆம்! அமுதிலும் இனிய மொழியாம் எம் தமிழ்மொழியை இயம்பி இதழாக வெளியிடுவதில் நாம் பெருமகிழ்வடைகிறோம்.

தொன்மையான மரபில் வேரூன்றி நான்கு திசைகளிலும் கிளைபரப்பி நிற்கும் தமிழுக்கும், அதன் இலக்கியத்திற்கும் விழா எடுக்கும் இவ்வேளையில் இத் தமிழிலக்கியத்தின் இன்றைய நிலையை மாணவர்கள் மூலமும், அறிவுஜீவிகள் மூலமும் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக இம்மலர் இருக்கும் என்பது எமது நம்பிக்கை அதுவே எம் அவாவும் கூட!

**"ஈற்றிலே சுதந்திரம் அடைந்துவிட்டோம்.**

**அதனைக்கூரை முகட்டில் நின்று உரக்கக் கூவி மகிழ்வோம்"**

இத்தகையதொரு நிலையைத்தான் நாம் இவ்விதழ் கரங்களில் தவழ்ந்த போது பெற்றோம்.

தமிழை இதயக்கூண்டிலிருந்து விடுவித்த வெறி!

ஊரெல்லாம் கூடித் தமிழுக்கு உற்சவங்கள் நடத்துகையில் எம்மனங்களில் ஊர்க்கோலம் பூண்ட தமிழை இவ்விதழில் எழுத்துக்களாக கொட்டியதில் ஏற்பட்ட சந்தோஷ வெறி!


தமிழ்ச்சங்கப் பணிபுரியும் குழந்தைகளாகிய எமது இவ்விதழ் "அந்தரத்து சுந்தரி" போல் இல்லாமல் எம் நேச நெஞ்சங்களின் அபிமானத்தையும், ஆதரவையும் பெறும் என்று நம்புகிறோம்.

*ஏடுஇட்டோன்*
**பா. வசீகரன்**

*இணை ஏடு இட்டோர்*
**யோ. ஜெகதீஸ்**
**எஸ். சசிகாந்த்.**

*With Best Compliments*

*From*



**MANAGER & STAFF**

# National Savings Bank

**256/5, GALLE ROAD,**
**WELLAWATTE.**
**TEL : 503277**

# பிரதம அதிதியின்
# ஆசிச் செய்தி

றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் தனது அறுபதாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில், மேடையேற்றும் அதன் முப்பத்தைந்தாவது கலைவிழாவின் சிறப்புக்களை நீங்கள் இரசித்துக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வேளையில், என் மனமார்ந்த ஆசிச் செய்தி இந்த விழா மலரில் வெளிவருகின்றது.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தமிழ் இனத்தின் மேல் கொண்ட பற்றுதலினால் அதன் வளர்ச்சிக்கு என அயராது உழைக்கும் இந்த சின்னஞ்சிறார்களின் பணி பாராட்டுக்குரியது.


மாணவர் மத்தியில் தமிழ்மொழி அறிவை வளர்க்க வேண்டும் என்ற ஆவலினால் இவர்கள் முதலில் தம் பாடசாலைக்குள்ளும், பின்னர் மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையிலும் நடாத்திய தமிழ் மொழித்திறன் போட்டிகள் போன்று இன்று இவர்கள் அரங்கேற்றும் இந்தக் கலைவிழாவும் பெரு வெற்றியை ஈட்டித் தரவேண்டும் என்று இறைவனை வேண்டி ஆசிக்கின்றேன்.

நன்றி

செள. தொண்டமான்
*கால்நடை அபிவிருத்தி*
*பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு*

*With Best Compliments*

*From*



# ட்ரைஸ்மார்ட்

4-10 சேனநாயக்கா கட்டிடம்
காலி வீதி,
தெஹிவளை
போன் 731407 - 8

# MESSAGE FROM THE PRINCIPAL

I am happy to contribute this message to "Thamil Nayam" the souvenir published in connection with the annual "Kalai Vizha" organised by our Thamil Literary Association.

This student body has proved its worth by successfully implementing their programme of work the culmination of which is the "Kalai Vizha" They conducted a series of debates among Colombo schools and participated in the literary competitions organised by the Ministry of Education. Among their other achievements it is worthy of mention that they emerged winners of the Western Province Schools' Competition. The members of this Association have implemented their projects with much enthusiasm and dedication thus setting an example that would be worthy of emulation.

I thank the Master in charge Mr. S. Ratnasabapathy and Mr. R. Rajasooriyar who assisted him for guiding the activities of our Thamil Literary Association and stimulating its members to give of their best. I also thank those who were associated with the organisation of today's event for which I wish all success.

**S.H. Kumarasinghe**
***Principal***
***Royal College***

*With Best Compliments*

*From*



# MODERN BOOK CENTRE

**66, KOTAHENA STREET**

**COLOMBO -13**

# MESSAGE FROM THE VICE PRINCIPAL

The annual "Kalai Vizha" celebrations are round the corner, and we look forward to the "Thamil Nayam 97" publication., Since it is something special.

Just as much as the annual publication, let the annual activities of this society bear a very special imprint. May the day's programme bear the torch of learning and the deep and valued wealth of the Thamil culture. May the day's heavy load of learning, duties and obligations be lightened, by the end of the day.

May peace, calm, goodwill emanate from the cultural activities of the day and envelope all races and religions and load to strong bonds of unity and brother hood.

With Best Wishes From

**Ranjith N. Edussuriya**

*Vice Principal*

*Royal College*

*With Best Compliments*

*From*

# M/S Abeyaratne Hardware Stores

**DEALERS IN :**

**HARDWARE, HAND TOOLS, ELECTRICAL ITEMS, CEMENTS "L&T", CEMENT "DOUBLE HILL", ROOFING SHEETS, ESTATE SUPPLIERS & TRANSPORT AGENTS**

**NO. 60, MAIN STREET,**
**BANDARAWELLA**
**PHONE : 057-2493**

# MESSAGE FROM THE VICE PRINCIPAL

It is with great pleasure that I write this message to the souvenir brought out to mark the "Kalai Vizha" to be celebrated on the 9th of November.

The Thamil Literary Association has a history of 60 years and had become an annual event in the college, and I greatly appreciate that the organisers have succeeded in celebrating "Kalai Vizha" this year too.

At a time when the younger generation in plagued by unruly elements and outside forces its really a pleasure to note that our youth have dedicated themselves to bring out the rich talents of the youth.

The Thamil Literary Association at Royal had held a number of school and inter-school activities creating an atmosphere to bring out the ora musical and dramatistic talents of our youth.

May the foundation laid by the society pave the way for the future development of our students, thereby moulding them to be the leading citizens of our nation.

I take this opportunity to say 'congratulation' to Mr. S. Ratnasabapathy and Mr. R. Rajasooriyar for the able guidance given to students, to make this event a success. 'Congratulations' to the student chairman and his committee too.

**A.P. Piyadigama**
Vice Principal
Royal College

*With Best Compliments*

*From*



**SURIYA TEXTILE MILLS (PVT) LTD**

32/34, 2ND CROSS STREET

COLOMBO -11

## உதவி அதிபரின் உள்ளத்திலிருந்து ...

**அன்புடையீர்,**

வணக்கம். றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் தமிழ் அன்னைக்கு மீண்டும் ஒருமுறை முடிசூட்டிச் சிறப்பிக்கும் இத்தினத்தில் "தமிழ் நயம்" சஞ்சிகையினூடு உங்களைச் சந்திப்பதில் நான் பேருவகை கொள்கின்றேன்.

மூவேந்தர் வழியில் முத்தமிழுக்கு விழா எடுப்பது றோயல் கல்லூரி மரபு. எமது பாடசாலையின் பெயரை "வேத்தியர் கல்லூரி" என மொழிபெயர்க்கும் முயற்சிகள் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டன. இது எனது ஒப்புதலைப் பெறத் தவறிவிட்ட போதிலும் எம் அன்னையாம் தமிழ் மொழியைப் போற்றிப் பூஜிக்கும் விதத்தில் எம் இளவல்கள் செங்கோல் பிடித்த மாமன்னர்களின் தரத்திற்கு உயர்ந்துள்ளனர் என்றால் மிகையாகாது.

தமிழ் எங்கள் உயிர், தமிழ் எமது உதிரம், தமிழ் எமக்கு அமிழ்தம் என்றெல்லாம் பாடிய கவிஞர்கள் எமது சிறார்களின் தமிழ் ஆர்வத்தை தூரதிருஷ்டிப்பார்வை மூலம் கண்டு மனமகிழ்ந்தே கவிதை பாடினார்கள் என்றுதான் எண்ணத்தோன்றுகின்றது. றோயல் கல்லூரியின் "கலைவிழா" ஆண்டு தோறும் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலம் வரை தமிழன்னையும் சீரும்சிறப்பும் பெற்று வாழ்வாள் என்பது எனது நம்பிக்கை.

இவ்விழாவை நடாத்தும் "தமிழ் இலக்கிய மன்றம்" பற்றி இவ்விழாவில் பங்கு பெறுபவர் அனைவரும் அறிவர். எமது மாணவர் மத்தியில் பல போட்டிகளை நடாத்தி அவர்களின் தமிழார்வத்தைப் பெருக்குவதுடன், பிற பாடசாலை மாணவர்களையும் அழைத்து அவர்களின் மொழிப்பற்றையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வகையில் எமது நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் தமிழ் மன்றங்களினது தாய்ச்சங்கம் எமது தமிழ் இலக்கிய மன்றம் தான் என்று கூறுவதே பொருத்தமானது.

மன்றப் பொறுப்பாசிரியர் திரு. சி. இரத்தினசபாபதி மற்றும் அவருக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றும் திரு. ஆர். இராஜசூரியர் ஆகியோரின் தன்னலமில்லாச் சேவையை நான் பாராட்டுகின்றேன்.

இலக்கிய மன்றத்தின் தலைவர் செல்வன் ஜி.எஸ். சேதுகாவலர், இணைச் செயலாளர்கள், செல்வன். பி. திருவரங்கன் மற்றும் செல்வன் எஸ். சுதர்சன், பொருளாளர், செல்வன். எம். விக்னாகரன், இதழாசிரியர் செல்வன் பா.வசீகரன் ஆகியோருக்கும் ஏனைய விழாக்குழு உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுகள் உரித்தாகட்டும்.

இறுதியாக, ஆனால் முக்கியமாக, இலக்கிய மன்றப்பணிகள் மட்டுமல்லாது தமிழ் மொழி மூலம் கல்விபயிலும் மாணவர்களில் அனைத்து நலன்களிலும் மிகுந்த அக்கறை செலுத்தும் கல்லூரி அதிபர் திரு. எஸ்.எச்.குமாரசிங்க அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் எனக்குறிப்பிட விரும்புகின்றேன்.

**அன்புடன்**
**வி. சிவானந்தநாயகம்**
***உதவி அதிபர்.***

# பொறுப்பாசிரியரின் பொன்மனதிலிருந்து...

தமிழுக்கும் தமிழ்க்கலைக்கும் விழா எடுக்கும் இந்நாட்களில் மீண்டும் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். முத்தமிழையும் வளர்ப்பதே எம் மன்றத்தின் தலையாய நோக்கம். இதற்காக கட்டுரை, நாவன்மை, விவாதப் போட்டிகள் மாகாணமட்டத்தில் நடாத்தி பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

அழிந்து கொண்டு இருக்கும் எங்கள் கலைக்கு புத்துயிர் அளிக்க எண்ணற்ற இன்னல்களுக்கு மத்தியில் எம்மாணவமணிகள் முத்தமிழுக்கு முடிசூட்டும் முயற்சியில் மலர்ந்த இக்கோலாகலக் கலைவிழா இனிதே நிறைவுற என் ஆசிகள். அவர் தம் முயற்சிகளின் குற்றங்குறைகளை மாசற்ற மனதுடன் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

சி. இரத்தினசபாபதி
*பொறுப்பாசிரியர்*

*With Best Compliments*

*From*



# Sri Kumaran's (Pvt) Ltd.

**EXPORTERS, IMPORTERS,**
**TRANSPORTERS**
**GOVERMENT TRANPORT CONTRACTORS,**
**CUSTOMS CLEARING**
**FORWARDING AGENTS.**

## COLOMBO - JAFFNA SHIPPERS

**NO:190 1ST FLOOR**
**GAS WORKS STREET**
**COLOMBO -11**

**TEL:440513, 435188, 074-717799**

# மாணவத் தலைவரின்

# எழுச்சி முழக்கம் ...!

''தலையைக் கொடுத்தும் தமிழை வளர்ப்போம்'' என்ற திடவுறுதியுடன் அலையலையாக வந்த தடைகளையெல்லாம் மலைபோல எதிர்கொண்டு வெற்றியின் விளிம்பினை தொட்டுவிட்ட றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் தனது அறுபதாவது வயதில் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் அரங்கேறும் அதன் முப்பந்தைந்தாவது கலைவிழாவின் சிறப்பு மலராம் 'தமிழ் நயம்97' ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எமது பாடசாலை மாணவர்களின் தமிழ் அறிவினை வளர்க்குமுகமாக நாம் பாடசாலைக்குள் நடத்திய போட்டிகள் மிக சிறப்பாக நடந்தேறியதைத் தொடர்ந்து ''பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்'' என்ற எமது மகுட வாக்கியத்துக்கமைய நாம் ஏழாவது வருடமாகச் சக பாடசாலைகளிடையேயான தமிழ் மொழித்திறன் போட்டியை இவ்வருடமும் சிறப்பாக நடாத்தி முடித்தோம். இப்போட்டியில் இவ்வருடம் புதுமையானதொரு பொது நுண்ணறிவுப் போட்டியையும் நாம் அறிமுகப் படுத்தியுள்ளோம்.

நாட்டின் சகஜமற்ற சூழ்நிலைக்கு மத்தியிலும் சக பாடசாலை மாணவர் எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நான் நன்றி கூறும் அதேவேளை உங்கள் உதவியை நீங்கள் தொடர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்ப் பணியை தம்பணியாக ஏற்றுக் கொண்டு உதவிபுரியும் எம் ஆசிரிய பெருந்தகைகள் எம்மை ஊக்குவிக்கும் என் பழைய மாணவர்கள், எம்முடன் உழைக்கும் எம் சக மாணவர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

என் பாடசாலையின் தமிழ் மாணவச் செல்வங்கள் தம் மன, மத வேறுபாடுகளைக் களைந்து ஒன்று கூடி மேடையேற்றும் இவ்விழாவின் சிறப்பு உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே இங்கு நீங்கள் கண்ட, கேட்ட குற்றம் குறைகளை கருத்து விடுத்து நிறைகளை மட்டும் உங்கள் நினைவில் நிறுத்திச் செல்லுமாறு உங்களை வேண்டி நிற்கிறேன். தமிழின் தாயை தரம்போற்றும் எம் மாணவமணிகளின் மகத்தான முயற்சி வெற்றி பெற பிரார்த்திக்கும் உங்கள் பிரார்த்தனை சித்திக்கும் என்ற எதிர்பார்ப்புடன் விடை பெறுகிறேன்.

''பாடையில் படுத்து நல்கி
பவனிவரும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை
கேட்க வேண்டும்
ஓடையில் என் சாம்பல்
கரையும் போதும் உன்
தமிழே சலசலத்து ஓட வேண்டும்''

G.S.சேதுகாவலர்

*மாணவத் தலைவன்*

*தமிழ் இலக்கிய மன்றம்*

# செயலாளரின் அறிக்கை

"தென்பாண்டி நதி பிறந்த செந்தமிழ்
அது எங்கள் நாவில் தவழும் இனிய தமிழ்"

சோதனைக்கு மத்தியிலும் வேதனைக்கு மத்தியிலும் நாம் அன்னைத் தமிழை அழியாது காப்போம் என்று திடச்சங்கற்பம் பூண்டு "பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்" என்னும் உறுதிமொழி எடுத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளை எமது மன்றத்தால் முப்பத்தைந்தாவது வருடமாக நடாத்தப்படும் இக்கலைவிழா நிகழ்ச்சிகளை முன்னிட்டு வெளிவிடப்படும் தமிழ் நயம் இதழினூடு உங்கள் இதயங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இயல், இசை, நாடகம் ஆகியவற்றை வளர்க்க பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து நிற்கும் கல்விமான்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மற்றும் சக மாணவர்களுக்கும் தமிழ் இலக்கிய மன்ற செயலாளர் என்ற வகையில் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

கலைவிழா தனைக்காண தவறாது வந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைக் கூறி விடை பெறுகிறேன்.

'பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்'

பிரணவம் திருவரங்கன்
சிவமூர்த்தி சுதர்சன்
*செயலாளர்கள்*
*தமிழ் இலக்கியமன்றம்.*

*With Best Compliments*

*From*



# M.J.P.FERNANDO & CO LTD

**31, ABDUL JABBAR MAWATHA.**

**COLOMBO -12**

## MESSAGE FROM THE ENGLISH LITERARY ASSOCIATION

It is with great pleasure we pen these few words to the souvenir which is being brought out on the occasion of **"Kalai Vizha"** organised by the Royal College Thamil Literary Association.

"Literature is a universal song written by earth's loveliest notes to be sung by men all sorts kinds and faiths castes and creeds, tempers mood and minds".

To keep in true with this sweet song Thamil Literary Association has contributed a lot of literary and cultural things to this school. **"Kalai Vizha"** is just one colourful annual event of high standard.

We wish them continued success in the years to come.

**Senior Vice President,**
*English Literary Association*

*With Best Compliments*

*From*



# Mangal Deep

**WHOLESALE DEALERS IN TEXTILES**

**CRYSTAL SUPER MARKET,**
**100/1-19, KEYZER STREET,**
**COLOMBO - 11**
**TEL : 337363**

# MESSAGE FROM THE SINHALA LITERARY ASSOCIATION

I am very much pleased to Contribute this message for "Royal College Thamil Cultural Festival"

Sinhala Literary Society and Thamil Literary Society of Royal College hold their festivals annually and this practice provides our children a chance of improving their talents and presenting their artistic visions.

This great tradition has helped to produce many arts-scholars who are in high positions working in Sri Lanka as well as abroad bringing glory to their Alma Mater and Country

Thamil Literary Society while keeping to that "Royal Tradition", is also blessed with a unique feature of giving a graphic picture of their glorious culture in all their arts work.

The Sinhala Literary Association greatly value the efforts of the Thamil Literary Association and wish **"Kalai Vizha 97"** a Tremendous success.

**Siri Koralearachchi**
*Vice President*
*Sinhala Literary Association.*

*With Best Compliments*

*From*



**LANKA SERVICE STATION**

**267 GALLE ROAD,**
**BAMBALAPITIYA**
**COLOMBO 4**

**T.P.581819**

*With Best Compliments*

*From*

# LAUNDROMAT (PVT) LTD

**PROFESSIONAL DRY CLEANERS**
**AND LAUNDERERS**

**126, REID AVENUE,**
**COLOMBO - 04**
**TEL : 582766**
**(Thummulla Junction)**

**COLLECTION CENTRE**

**193, STANLEY**
**THILAKARATNA, M.W.**
**NUGEGODA**

**171, KYNSEY ROAD,**
**COLOMBO -08**

*With Best Compliments*

*From*



SIVASHANMUGARAJAH & CO.

GENERAL MERCHANTS COMMISSION AGENTS
& CO- OPERATIVE SUPPLIERS

45, 4TH CROSS STREET

COLOMBO -11, SRI LANKA.

T'PHONE:436077

*With Best Compliments*

*From*



**GOPY**

**E/E/E**

*With Best Compliments*

*From*



# Eswaran Bros

**ESWARAN BROTHERS MARKETING (PVT) LTD.**

**267, SEA STREET,**
**COLOMBO -11**
**TEL:435842, 432599**

*With Best Compliments*

*From*



# CHANDRA STORES

**IMPORTERS, EXPORTERS, GENERAL MERCHANTS & WHOLESALE DEALERS**

60, NEW MOOR STREET, COLOMBO -12
TEL:01-448420. FAX: 01-436108

**207, COLOMBO ST. KANDY**
**TEL :08-232756**

*With Best Compliments*

*From*

# CEY TRADERS

**DEHIWALA**

*With Best Compliments*

*From*

# INKARAN CENTRE

ஐங்கரன் சென்ரர்

**GENERAL MERCHANTS & COMMISSION (RICE) AGENTS**

**155/C, 5TH CROSS STREET,**
**COLOMBO - 11.**
**T'PHONE : 440563**

*With Best Compliments*

*From*

# CEYLINCO INSURANCE (LTD)

**CEYLINCO LIFE CENTRE**
**134 GALLE ROAD,**
**COLOMBO -6**

**PHONE : 324338, 398395**

*With Best Compliments*

*From*

THILAKK AGENCY

**General Merchants & Commission Agents**

**127, OLD MOOR STREET,**
**COLOLMBO 12**
**TEL : 431893**

*With Best Compliments*

*From*

**EKHANTHAN CO., (PVT) LTD.**

**GENERAL RICE MERCHANTS & COMMISSION AGENTS**

**29, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**

# தமிழ் மொழியின் சிறப்பு

உலகில் வழங்கும் மொழிகளில் காலத்தால் மிகவும் பழமை வாய்ந்த மொழிகள் ஒரு சிலவற்றில் தமிழ் மொழியும் ஒன்று. இதனால் போலும் இம்மொழியினை இறைவனே தோற்றுவித்தான் என்ற வழக்கும் உண்டு.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே

முன் தோன்றி மூத்த மொழியெனத் தமிழ் மொழியினைக்

கூறுவர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த இலக்கியங்களையும், இலக்கண நூல்களையும் கொண்டு விளங்கும் மொழி தமிழ் மொழி. அந்த இலக்கியங்களும் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும் இற்றைக்கு மூவாயிரம் தொடங்கி ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தன.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த புகழ் தமிழிற்கு உரியது. உலகில் உள்ள மொழிகளில் தமிழ் மொழிக்கே சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த புகழ் உண்டு. கிறிஸ்த்துவுக்கு முன்பே பல நூறு வருடங்களுக்கு முன்பதாக தலைச்சங்கம் கண்டவர்கள் தமிழர்கள். அதன் பின்பு இடைச்சங்கம், கடைச்சங்கமென மூன்று சங்கங்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர். எந்த தமிழ் புலவனும் இயற்றும் பாடல்களும், நூல்களும் பல புலவர்களைக் கொண்ட இந்த சங்கத்தில் சமர்ப்பித்து, அச்சங்க புலவர்கள் அவற்றை ஏற்றாலன்றி அவை அரங்கேறமாட்டாது. இறைவனே எழுதிய பாடலில் பொருட்குற்றம் கண்ட பெருமை நக்கீரன் என்ற புலவனுக்கும் உண்டு. சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் காட்டியும் குற்றம் குற்றமே என்ற தமிழ்ப் புலவனின் பெருமை போல் வேறு எந்த மொழிக்கு இல்லை. அத்துணை பெருமை வாய்ந்தது தமிழ் புலமை என்று நாம் போற்றுதல் வேண்டும் தமிழ் பிழை பொறுக்காது அவற்றைக் கண்டும் கேட்ட போது எழுத்தாணியால் தனது தலையிலேயே குத்திய சீத்தலைச்சாத்தனார், பிழை தனை விட்ட புலவரின் காதினை வெட்டிய வில்லிபுத்தூரன் போன்றவர்கள் நல்ல இலக்கணத்தோடு கூடிய செந்தமிழை பேணி வளர்த்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

பக்தி இலக்கியங்கள் தமிழ் போல் பிறமொழிகளில் அவ்வாறு இனிமையானதில்லை. தேவார திருவாசகங்கள் ஆழ்வார்களின் திருப்பாசுரங்கள் உலகிலே மிகச் சிறந்த பக்தி இலக்கியங்கள் இவற்றுக்குப் பண் அமைத்துப் பாடினார்கள். இப்பண்களே இன்றைய கர்நாடக சங்கீதத்திற்கு அடிப்படையாக அமைந்தவை. தமிழ் முத்தமிழ் என அமைந்தது. இயல், இசை, நாடகம் என முப்பிரிவாக கொண்டு தமிழ் வளர்த்த சிறப்ப தமிழ் மொழிக்கு உண்டு. இப்படியான சிறப்பு வேறு எந்த மொழிக்கும் இல்லை. தமிழ் மொழியிலிருந்தே மற்றைய மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது போன்ற மொழிகள் தோன்றியதென ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். காலத்துக்கு ஏற்ற

வகையில் வளர்ந்த மொழி தமிழ். பழைமையானதோடு புதுமையும் மிக்கது. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாரதியார் பாடியிருக்கிறார்.

பக்தி இலக்கியம் படைத்த தமிழ் இசையோடு பாட இனிமையானது. தமிழோடு இசை பாட மறந்தறியேன் என்றும்! இசையோ வடிவானவாம்' இறைவன் என்றும் வழங்கும் கூற்றுக்கள் தமிழிசையில் பெருமையை உலகிற்கு பறைசாற்றுகின்றன. இறைவனும் தமிழும் ஒன்றென்றும், இறைவனே தமிழ் தந்தவன், தமிழ் வடிவானவர் எனத் தமிழைத் தமிழகங்கள் போற்றுவார்களாயின் இம்மொழியின் சிறப்பினை எப்படிப் போற்றுவது பண்ணோடு இசை பாடினால் இறைவனே பாட்டுக்குத் தோற்றுவாய் என்ற நம்பிக்கை தமிழர்க்கு உண்டு என்றால் அந்த நம்பிக்கை தமிழ்மொழியில் தகைமையால் பெற்றதொன்றாகும்.

ஆகவே பழமைக்குப் பழமையாகவும் பின்னர் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் சீரிய செந்தமிழ் மொழி ஆதியும் அந்தமும் இல்லாது இன்றும் விளங்குகிறது. உலகத்து ஆதிமொழிவன் பல அழிந்தொழிந்த நிலையில் இன்றும் வீறு கொண்டு வளரும் தமிழ் மொழியின் சிறப்பு கண்டு உலகு திகைத்து நிற்கிறதே இவையாவும் தமிழ் மொழியின் சிறப்பினை போற்றக் காரணங்களாக அமைகின்றன என்று நாம் பெருமிதம் கொள்வோம்.

**வி.ஐங்கரன்**
*ஆண்டு 9Q*

**இறந்து போனவர்களிடம் கொள்ளை அடிப்பவர்கள்; ஒன்று மோசமான திருடர்கள்; இல்லை என்றால் வெற்றிகரமான எழுத்தாளர்கள்**

- ஆஸ்டின் ஓ மாலி

**கொள்ளைக்காரர் உங்கள் உயிரை அல்லது பணத்தை கேட்கிறார்கள். பெண்களோ இரண்டையும் கேட்கிறார்கள்.**

- யாரோ

# அன்னைக்கு எனது நன்றி

நாம் இவ்வுலகிற் பிறப்பதற்குக் காரணமானோர் எமது அன்னையும், பிதாவுமாவர். எனவே, நாம் எமது அன்னைக்கும், தந்தைக்கும் மரியாதை செலுத்தி அவர்களுக்கு நன்றியுள்ள பிள்ளைகளாயிருக்க வேண்டும்.

பத்துமாதம் என்னைச் சுமந்து, என்னைப் பெற்றெடுத்து, தனது இரத்தத்தைப் பாலாக்கி, என்னை வளர்த்து, எனக்கு பாடம் கற்றுக்கொடுத்து, எனக்கு ஏற்படும் நோயையும் தனது நோயாகக் கருதி, எனது இன்பதுன்பங்களில் தானும் பங்கு கொண்டு, என்னை நல்வழிப்படுத்துபவர் எனது அன்னையே ஆவார்.

நான் என்னை இவ்வாறு தனது கண்ணிமைபோல் பாதுகாக்கும் எனது அன்னைக்கு நான் எப்பொழுதும் அநேகர் தங்கள் பெற்றோரை மதிப்பதே கிடையாது. அவர்கள் முதுமைக்காலத்தில் அவர்களைக் கவனியாது கைவிட்டே விடுகின்றனர்.

எமது அன்னைக்கும், தந்தைக்கும் நாம் செய்யும் நன்றிக்கடன் இதுதானா?

நாம் எமது தாய்க்கு ஏற்படுத்தும் ஒவ்வொரு துன்பமும் எமது வாழ்விலேற்படும் ஒவ்வொரு படிக்குறைவாகும். எமது தாய் எம்மை உயர்நிலைக்குக் கொண்டுவர பல துன்பங்களை அனுபவித்தே அந்நிலைக்குக் கொண்டுவருகிறார். ஒவ்வொரு தாயும் தனது மகன் படித்து உயர்நிலைக்கு வரவேண்டுமென இரவும், பகலும் கனவு காண்கிறார். அவரது கனவை நனவாக்க நாம் முயற்சி செய்தல் வேண்டும்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாள் தன்மகனைச்

'சான்றோன்' எனக் கேட்ட தாய்.''

என்ற திருக்குறள் வரிக்கிணங்க ஒரு தாய்க்குத் தனது மகன் படித்து ஒரு கல்விமானாகும் போது ஏற்படும் மகிழ்ச்சி, அவனைப் பெற்றெடுத்த போது ஏற்படும் மகிழ்ச்சியிலும் பார்க்கக் கூடியது.

''அன்னையைப் போன்றொரு தெய்வமில்லை - அவள்

அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை''

இது ஒரு முதுமொழியாகும். உண்மையிலேயே தன்னைப்பாடுபட்டு வளர்த்த தன் தாயை மதிக்காதவன் ஒரு 'மனிதன்' என அழைக்கப்படவே பாத்திரமற்றவன்.

''மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்'' என உலகநாதர் தனது ''உலக நீதியிலே செப்பியுள்ளார். ஆம்! நாம் நமது அன்னையை ஒவ்வொருநாளும் கடவுளின் ஸ்தானத்திலே வைத்திருக்க வேண்டும்.

''அம்மா என்றழைக்காத உயிரில்லையே;

அம்மாவை வணங்காது உயர்வில்லையே''

இவ்வாறு ஒரு கவிஞர் தனது பாடலிலே அருமையாகக் கூறியுள்ளார். இதன்படி நாம் எப்பொழுதும் எமது நடமாடும் தெய்வமான எமது அன்னையைப் போற்றி வாழ வேண்டும் ஆம்!

என்னைப் பெற்று, கல்விபுகட்டி, என்னை நல்வழிப்படுத்தி வரும் அன்னையை நான் ஒருபோதும் மறவேன். அவர் செய்த நன்மைகட்கெல்லாம் நன்றிக்கடனாக அவருக்கு நோயேற்படும் போது அவரைக் கண்போல் பாதுகாப்பேன்.

ஆக்கம்:-

வி.தனுஜன்

*ஆண்டு 7R*

புரிந்து கொள்ளாத போதும் பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான்

- சாக்ரடீஸ்

பேனாவை கையில் பிடித்தவர்களெல்லாம் புத்திசாலிகளில்லை. பிடிக்காதவர்கள் எல்லாம் முட்டாள்களுமில்லை.

- தான்தோன்றி

சிந்தனையின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு, புத்தகங்களைப் படிக்காமலே விமர்சனம் செய்வதுதான்.

- யாரோ

# ஆனந்தம்

அருவிகள் பாய்வது ஆனந்தம்
அன்பு வெள்ளம் ஆனந்தம்
அகத்தியன் தமிழும் ஆனந்தம்
ஆதவன் உதயம் ஆனந்தம்

இயற்கை அழகு ஆனந்தம்
இசைமழை என்றும் ஆனந்தம்
இலைகள் அசைவது ஆனந்தம்
இயலிசை நாடகம் ஆனந்தம்

கடல் குமுறுவது ஆனந்தம்
காற்று வீசுவது ஆனந்தம்
கல்வி கற்பது ஆனந்தம்
கவிதை படிப்பது ஆனந்தம்

நதிகளின் ஓட்டம் ஆனந்தம்
நட்சத் திரங்களும் ஆனந்தம்
நறுமலர்ச் சோலைகள் ஆனந்தம்
நறையை உண்பதும் ஆனந்தம்

பறவைகள் பறக்கையில் ஆனந்தம்
பட்டு ஆடைகள் ஆனந்தம்
பல்வகை மலர்கள் ஆனந்தம்
பஞ்சம் அற்றால் ஆனந்தம்

எங்கும் எதிலும் ஆனந்தம்
எண்ணம் முழுதும் ஆனந்தம்
என்னுள் எங்கும் ஆனந்தம்
இனிஉன்னுள் என்றும் ஆனந்தம்


இயற்றியவர்.
வி.விமலாதித்தன்
ஆண்டு 7R

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட மத்திய பிரிவிற்கான
கவிதை போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை

# நாளை நமதே

*எதிர்காலம் எமக்காக காத்திருக்கும் போது*
*ஏனடா நீ தூங்குகிறாய்? சமுதாயவிடிவுப்*
*புதிருக்க விடைகாண வேண்டிய நீ*
*ஏன் இப்படி வாழுகிறாய்?*

*சீ(!)தனம் ஏனோ வாங்குகிறாய்*
*கலாச்சாரம் என்று சொல்லி தப்புகிறாய் - மாதரின்*
*வேதனையை புரிந்து கொண்டு,*
*மனிதனாய் வாழ மாட்டாயா?*

*ஆலைகள் செய்வோம், கல்வி சாலைகள் செய்வோம்*
*என பாரதி சொன்னான் அப்போது -நீயோரு*
*வேலையும் இன்றி வெட்டியும் இன்றி*
*வீணாக அலட்டுகிறாய் இப்போது.*

*காவியுடையையும் நீண்ட சடையையும் நம்பி நம்பி*
*அவையெல்லாம் நீதிக்கு முன்பு வந்த -நின்று*
*ஆவிகுலைந்து, சிறையில் அடைபட்டபின்*
*ஏன் நிம்மதி நிலைக்காமல் வாடுகிறாய்?*

*குதிரை ஓட்டத்திலும், சூதாட்டத்திலும்*
*திரவியத்தை தண்ணீர்போல் செலவழித்து -ஒருகால்*
*கதிரையிலே உட்கார்ந்த பதட்டத்துடன் வாழ்கிறாய்*
*தன் மடத்தனம் எண்ணி உள்ளூர நகைக்கிறாய்.*

*திண்ணையிலே அமர்ந்து கொண்டு தோழர்களுடன்*
*தினம் தினமும் அரட்டையடித்து -வாழ்வில்*
*கண்மூடித்தனமாக வாழ்வதில் அர்த்தம்*
*சிறிதேனும் இல்லை நண்பா*

*காலைக் கதிரவன் உதிக்கும் போது*
*உன்மனம் ஏன் உதிக்கவில்லை - உனக்கு*
*நாளை நமதே என்ற எண்ணம் வரும் நாள்தான்*
*எம் சமுதாயத்திற்கு விடிவுகாலம்!*

**B.ராஜ்பிரகாஷ்**
*ஆண்டு 10R*

# மெழுகுவர்த்தி

மாணிக்கம் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தான். அவனது கைகள் கயிற்றை பிடித்து இழுத்தாலும் அவனது மனது இளம் கன்று பயமறியாது என்பதை உணர்த்துவது போல துள்ளிக் குதித்து கொண்டிருந்தது. ஏனெனில் அவனிற்கு நேற்றுத்தான் பேராதெனிய மருத்துவ பீடத்திலிருந்து அவனை மருத்துவம் படிக்க வருமாறு அனுமதி கடிதம் வந்திருந்தது. அவனது மனது மிகவும் வெண்மையானது. அவனிற்கு போர் இலட்சியம் இருந்தது, ஆனால் தற்பொழுது தனது இலட்சிய கதவு கட்டப்படுவதை உணர்ந்தவனுக்கு, கால்கள் நிலத்தில் நிற்கமறுத்தன.

அன்றிரவு மாணிக்கத்திற்கு தூக்கம் வரவில்லை அவனது எண்ணம் யாவும், தான் வைத்தியராக வர வேண்டுமென்றும், அவ்வூர் மக்களுக்கு வைத்தியம் செய்து பலஉயிர்களை காத்து அந்த வைத்திலிங்கத்தின்ர கையால மாலைபோட்டு தான் கௌரவிக்கப்படுதல் வேண்டுமென்றும் கனவு கண்டு கொண்டிருந்தான்.

அந்த வெள்ளை மனது எல்லோரையும் தன்னைப் போலவே நினைத்திருந்தது. வைத்தியலிங்கம் தான் அந்த ஊர் பஞ்சாயத்து தலைவர்.

இவரிற்கு எவனாவது நன்றாக படித்து உயர்ந்தால் பிடிக்காது. அதனாலோ என்னவோ அவரது ஆத்திரம் எல்லாம் மாணிக்கத்திற்கு எதிராக கொதித்தெழுந்திருந்தது.

இது எவற்றையும் அறியாத மாணிக்கம் அன்று பின்னேரம் கண்டிக்கு புறப்பட்டு கொண்டிருந்தான். அவனது தாயாரும் தந்தையாரும் அவனை வழியனுப்ப வந்திருந்தனர்..

மாணிக்கம் உயர்சாதியை சேர்ந்தவனல்ல ஆகவே அவன் படித்து நல்ல நிலையை அடைய உயர்சாதிக்காரர்களிடம் இருந்து பலத்த எதிர்ப்பு இருந்தது. அவர்கள் இவனை தமது வீட்டு வேலைகளைச் செய்ய அழைப்பதும், பின்னர் அவன் மேல் உள்ள ஆத்திரத்தால் சம்பளத்தை சரியாக கொடுக்காமல் தட்டிக் கழிப்பதுமாக தமது எதிர்பை தெரிவித்து வந்தனர்.

கண்டிக்கு செல்லும் பேரூந்து தரிப்பிடத்தை அடைந்தது. அதன் ஒவ்வொரு படிகளில் ஏறும்போதும் தான் தனது வெற்றிப்படிகளில் ஏறுவது போல உணர்ந்தான் மாணிக்கம். அனைவரது பிரியாவிடையுடனும் பேரூந்து புறப்பட்டு வேகமாக சென்று மறைந்தது.

காலம் யாருக்காகவும் தாமதித்திருப்பதில்லை. அது தனது பயணத்தை மிக விரைவாகவும் யாருக்கும் தெரியாமலும், சென்று கொண்டிருந்தது.

மாணிக்கம் தற்போது ஒரு வைத்தியன். அவனிற்கு அரசாங்கம் அவ்வூரில் சிறியவைத்தியசாலையும் கட்டிக் கொடுத்திருந்தது.

தன்னை அவ்வூர் மக்களின் சேவகன் என்றே மாணிக்கம் எண்ணினான். அதற்காகவே

தனக்கு அரசாங்கம் ஊதியம் தருவதாக கருதினான். இதனால் அவனது பெயர் அவ்வூரில் கொடிகட்டி பறந்து கொண்டிருந்தது.

ஆனாலும் மாணிக்கம் தனது சொந்தவாழ்க்கையை கோட்டை விடவில்லை. அவன் சுமதி என்றொரு பெண்ணை தனது உயிருக்குயிராக காதலித்தான். அந்த சுமதி வேறொரு வருமில்லை. அந்த வைத்தியலிங்கத்தின் ஒரே மகளும், அவரின் சொத்துக்கள் அனைத்துக்கும் வாரிசு அவள் தான்.

இதனையறிந்த வைத்தியலிங்கம் அவர்களது காதலுக்கு மறுப்பு தெரிவித்தார். இதனால் அவள் நஞ்சு அருந்தி விடுகிறாள். இ தேவேளை வைத்தியலிங்கம் மாணிக்கத்தின் வைத்தியசாலைக்கு குண்டு வைக்க ஆட்களை ஏவுகிறான்.

சுமதி நஞ்சு அருந்தியதை அறிந்த மாணிக்கம் வைத்தியசாலையை விட்டு வெளியேறி, சுமதியிடம் வருகிறான்.

பலரின் எதிர்ப்பையும் மீறி அவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கிறான். அப்போது அவனது மண்டையில் யாரோ எறிந்த கல்பட்டு இரத்தம் வருகிறது.

தனது காயத்தை நோவைப் பற்றிக் கவலைப்படாது சுமதியை வைத்தியசாலையில் சேர்த்து வைத்தியம் செய்தான். இறுதியாக ஒரு ஊசி போட முயன்ற போது வைத்தியலிங்கம் அங்கு வந்தவர் மகளை காப்பாற்றியதற்கு நன்றி கூறி மாணிக்கத்திடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டதோடு, வைத்தியசாலைக்கு குண்டு வைத்தது பற்றிய செய்தியையும் தெரிவிக்கிறார்.

உடனே சுமதியை தூக்கிக் கொண்டு மாணிக்கம் வெளியே வந்ததும் வைத்தியசாலை வெடித்து சிதறுகிறது.

உடனே கையிலிருந்த ஊசியை கீழே போட்டு விட்டு அந்த நெருப்பினுள் புகுந்து அத்தனை உயிர்களையும் காப்பாற்றுகிறான். எல்லோரையும் காப்பாற்றியவன் தன்னைக் காப்பாற்ற முடியாமல் சுமதியின் அருகே விழுந்தவன். அந்த ஊசியை காண்கிறான். அதனை எடுத்து சுமதிக்கு ஏற்றியவன் அப்படியே பிணமாகிறான்.

மாணிக்கத்திற்கு தனது இலட்சியம் யாவும் நிறைவேறிய பின்பே மரணித்தான் அவனை கௌரவிக்க வைத்தியலிங்கத்தின் தலைமையில் அவ்வூர்மக்கள் விழா எடுத்தனர். அதிலே மாணிக்கத்தின் படத்திற்கு வைத்தியலிங்கம் மாலை இட்டு கௌரவிக்கிறார். அவனது படத்தின் முன்னே ஒரு மெழுகுதிரி மிக பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறது.

''மாணிக்கம் ஒரு மிகப் பெரிய தியாகி. அவனது உடல் இறந்தது. ஆனாலும் அவனது புகழ் என்றும் உயிர்வாழும்.

பிறர் வாழ்வில் ஒளிவீச வேண்டுமென தன்வாழ்வை ஒரு மெழுகுவர்த்திபோல் எரித்துக் கொண்ட மாணிக்கம் உண்மையிலேயே ஒரு 'மாணிக்கம் தான்'' என்றார் வைத்தியலிங்கம். அவரது கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்தது.

**K.நாகராஜன்**

***ஆண்டு 10 R***

# சிறந்த குடும்பத்திற்கு ஒரு தாயின் பங்களிப்பு

தாய் என்பவள் இந்த உலகத்திற்கு முதன்மையாக இருக்கிறாள்.

*அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்*
*மாதா, பிதா, குரு, தெய்வம்*

போன்ற பழமொழிகள் அவ்வுண்மையை நமக்கு உறுதிப்படுத்துகிறது.

ஒரு குடும்பத்திலே தாயானவள் வகிக்கும் பொறுப்பு மகத்தானது. குடும்ப உறுப்பினர்களை கண்ணை இமை காப்பது போல் இரட்சிக்கின்ற தாயின் கடமைகள், உன்னதமானவை.

''தாயொடு அறுசுவை உணவு போகும்'' என்றார்கள் எமது சான்றோர்கள். இவ்வுலகத்திலே காணப்படுகின்ற முக்கிய பிரச்சினை உணவுப்பிரச்சினையாகும். ஒரு குடும்பத்திலே நிலவுகின்ற மிகப் பெரிய பிரச்சினைகளை தீர்க்கின்ற பக்குவம் குடும்ப விளக்கு எனப்படும் தாயிற்கே உரித்தாகின்றது.

தந்தை குடும்பத்தினது பொருளாதாரக் குறைவை நிவர்த்தி செய்வதற்கான பணத்தையும், ஆஸ்தியையும் சம்பாதித்துக் கொண்டு வந்தாலும், அவற்றை குடும்ப நலத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும், சிக்கனமாக செலவு செய்து குடும்பத்தின் நிதிநிலைமையை தாய் சீர்படுத்துகின்றார்.

''நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்'' என்பது யாமறிந்த உண்மை. ஆனாலும் அந்த குடும்பம், பல்கலைக்கழகம் ஆவதும், படலையற்ற ஆட்டு மந்தை ஆவதும் குடும்ப நலனில் கண்ணும் கருத்தும் வைக்கும் தாயின் பணியிலேயே தங்கியிருக்கின்றது.

குழந்தைகளை காலையில் துயிலெழுப்பி, குளிப்பாட்டி, பாடசாலைக்கு தயாராக்கி, உணவூட்டி, பள்ளிக்கூடத்திற்கு பரிவுடன் வழிகாட்டுகிறாள் அன்னை. அந்த பிள்ளைகளுக்கு கல்வியறிவையும் மட்டுமல்லாது ஒழுக்கம், பண்பு போன்றவற்றை அன்பினாலே உணர்த்துகிறாள் அன்னை.

'எங்கள் தமிழ்ச் சமுதாயத்திலே அன்னையை உலகத்தை இரட்சிக்கும் தாயாக, தெய்வமாக வழிபடும் வழமை வரலாற்றுக் காலம் தொட்டு இருந்து வருகிறது.

'அவையகத்திலே சிறந்த ஆயுதமானது.

மெய்யுணர்த்தும் அன்பு தான்'' என்ற கூற்று அன்பின் அற்புதத்தையும், முக்கியத்தையும் கூறுகின்றது. குடும்பத்தை அன்னையே அன்பினாலே அரவணைத்து நெறிப்படுத்துகிறாள் என்றால் அது மிகையாகாது. அழுது கொண்டிருக்கும் பிள்ளைக்கும், உழைத்துக் களைத்து வந்து அலுப்புடன் வந்த தந்தைக்கும் தாயானவள்

ஆறுதல் அளிக்கும் மருந்தாக திகழ்கிறாள்.

குடும்பமும், குடும்பத்தில் உள்ளவர்களும் தவறான பாதையில் செல்வதையும், சீரழிவதையும் கண்டு கவலைப்படுவது பெரும்பாலும் தாயாகும். கவலைப்படுவது மட்டுமன்றி, அந்த சீரழிவுகளை திருத்தி குடும்பத்தை நல்ல நிலைக்கு மாற்ற முயற்சி செய்வதும், அம் முயற்சியில் வெற்றி ஈட்டுவதும் தாயேயாகும்.

தாய் இல்லாத குடும்பம் ஒற்றைக்கால் மேசையை போன்றது. அன்னை இல்லாத பல குடும்பங்கள் சீரழிந்து பல கஷ்டங்களை உள்ளாகுவதை எமது நடைமுறை வாழ்க்கையில் நாம் கண்டும் கேட்டும் அறிந்த விஷயமாகும். தாயை இழந்த எத்தனை குழந்தைகள் அன்புக்காக ஏங்கிக் கிடக்கிறார்கள்.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான், மண்ணில் பிறக்கையிலே. அது நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே எனவே ஒரு குடும்பத்தை அன்னையானவள் சிறந்த குடும்பமாக்குவதற்கு வகிக்கும் பங்களிப்பு மிகவும் அளப்பரியது.

**B. ராஜ்பிரகாஷ்**
***ஆண்டு 10 R***

## நகைச்சுவைத் திடல்

ஆசிரியர் - உன் உச்சரிப்பில் தான் எவ்விளவு பிலை நீ தமிலையே கொலை செய்கிறாய் எனக்கும் உனக்கும் தமிலில் எவ்விளவு வித்தியாசம்

மாணவன்- நீங்கள் தெரிந்து கொலை செய்கின்றீர்கள். நான் தெரியாமல் செய்கிறேன். அதுதான் வித்தியாசம்.

*****

பேச்சாளர் : நம் நாடுகளுக்கு சுதந்திரம் வேண்டுமென அனைவரும் வீறு கொண்டெழ வேண்டும்.

ஒருவர் : நரகலோகத்திற்கு எப்போ சுதந்திரம் கிடைக்கும்?

பேச்சாளார் : இப்படி தங்கள் நாட்டின் சுதந்திரத்தில் இவரைப் போல அக்கறையாய் இருத்தல் வேண்டும்.

தொகுப்பு:- ஜெ.நிதர்சன்
ஆண்டு 7 **R.**

*With Best Compliments*

*From*

# E. SITTAMPALAM & CO.

25, OLD MOOR STREET,
COLOMBO - 12.
TEL : 432813, 338962

*With Best Compliments*

*From*

# Wijaya Trading Agency

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

229, 5TH CROSS STREET,
COLOMBO - 11.
PHONE : 433864, 435168

103 OLD MOOR STREET,
COLOMBO - 12.
PHONE : 436171

*With Best Compliments*

*From*

# THE MEDICAL CLINIC

**DR. (MRS) S. RAJESWARAN M.B.B.S (CEY)**

**CONSULTATION HOURS**

**WEEKDAYS 9.00 A.M.- 12.00 NOON**

**SUNDAYS 4.00 P.M. - 8.00 P.M.**

**12-D, ROHINI ROAD, (CDI FLATS)**
**WELLAWATTE,**
**COLOMBO - 6**

**PHONE : 594926**



*With Best Compliments*

*From*

# AMIEKO ENTERPRISE

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

**31, FOURTH CROSS STREET,**
**COLOMBO - 11.**

**TEL : 430772, 347306**

*With Best Compliments*

*From*

# Chandra Stores

**IMPORTERS, GENERAL MERCHANTS**
**& COMMISSION AGENTS**

**211-A, FIFTH CROSS STREET,**
**COLOMBO 11.**

**PHONE : 434349, 331724**

*With Best Compliments*

*From*

# SHASTHA TRADERS

**133, 5TH CROSS STREET,**
**COLOMBO - 11.**
**TEL : 438991**

*With Best Wishes From*

**RVG**

**ARVEGIE (PVT) LTD**

**IMPORTERS, EXPORTERS**
**DEALERS IN BEEDI LEAVES & TOBACCO**

169, WOLFENDHAL STREET
COLOMBO-13,
SRI LANKA.

T.PHONE:- 436380, 330491
FAX:- 438659,
T'GRAM:- EMPIRE

*With Best Wishes From*

**SRI LAXMI DIE WORKS**


**GOLDSMITH & DESIGNER**

**Prop:- P.V.K. NITHI**

**274**
**CHETTIAR STREET, COLOUMBU-11**

*With Best Compliments*

*From*




# Kalki Trade Centre

**Importers, Exporters, Commission Agents**
**Millers & Transporters**

**NO.85, OLD MOOR STREET,**

**COLOMBO -12**

**T'PHONE:342976, 438159**

**CABLE: KALKI SONS**

*With Best Compliments*

*From*

**PRASANTHI EXPORTS**

*With Best Wishes From*

# SAMAN CAFE

**74, KOTMALE ROAD,**
**NAWALAPITIYA**

# SHANTHY CAFE

**97, KOTMALE ROAD,**
**NAWALAPITIYA**

*With Best Wishes From*

# VEMAAL CO. (PVT) LTD.

**DEALERS IN COCONUT OIL ETC.**

**NO 1, DAM STREET,**
**COLOMBO-12.**

*With Best Wishes From*

**A Well Wisher**

K. MYLVAGANAM

49, SOYSAKELLA ROAD,
NAWALAPITIYA.

*With Best Wishes From*

LANKA MEDICAL ( PVT) LTD

NO:-15, D.S. SENANAYAKE VEEDIYA, KANDY.

A.K.M.THEVARA PILLAI & CO

254, GAMPOLA ROAD, NAWALAPITIYA

# யமனின் இராஜினாமா!

நம்ப முடியவில்லை!
நம்மை கலக்கிய யமன் கலங்கி மலங்கி
நிற்கிறான்!
என செய்தி அடிபட்டது.
ஊரார் திரண்டனர்
பொய்கள் உருண்டன
கேலிகள் நடமாடின
சந்தோசம் அலைபாய்ந்தன
காரணம்!
யமன் இராஜினாமா செய்யப்போகிறானாம்
ஆமாம்!
ஆடவரின் சிகரமே உருவான யமன்
தலைமை அலுவலகத்திற்கு கடிதம் வரைகிறார்
தலைமைப் பதவியை
தலைமுழுகப் போகிறாராம்
உயிரை எடுக்கும் யமனின்
உயிரை வாங்கிவிட்டானாம் மனிதன்.
அவன் யார்? யார் அவன்?
அவனே தான்!
அகிலத்தையே ஆட்டிவைக்கும்
கலியுக மனிதன்!
அன்றொரு நாள், யமனுக்கு மறக்கமுடியாத நாள்
கலி நாள்.
மனிதனின் உயிர் எமலோகம் செல்கிறது
மந்திரியான சித்திர குப்தனார் திறக்கிறார்
தினக் குறிப்பை!
வண்டவாளத்தை தண்டவாளத்தில்
அவிழ்த்து விடுகிறார்.
அடிமுதல் நுனிவரை பாவங்கள் யமனில்
செவியில் அடிபடுகிறது.

செய்த பாவங்களோ அப்பப்பா.....
கண்ணால் பார்த்த பாவங்கள் எத்தனையோ
காதால் கேட்ட பாவங்கள் எத்தனையோ
வாயால் பேசிய பாவங்கள் எத்தனையோ
மெய்யால் செய்த பாவங்கள் எத்தனையோ
அத்தனையும் கூறினார்
மெய்யில் சிறந்த யமனால் பொறுக்க முடியவில்லை!
மெய்தவறி, விடுபட்டு, மாசுற்று, நாசமுற்ற
மனிதபாவங்கள்
விஞ்சினவேயன்றி
மடியவில்லை!
மனிதன் தன்னையே அழிக்கிறான்
மா அறிவை ஒழிக்கிறான்
யுத்தம், சத்தம் செய்கிறான்.
சகிக்க முடியவில்லை!
சகிக்க முடியவில்லை!
காதடக்கம் செய்கிறார்
காதுகள் மரத்துவிட்டன
காலங்கள் மாறிவிட்டன
காலம் தனக்கில்லை! என்கிறார்
கலங்கி போய்விட்டார் யமனார்
கடிதம் கடவுளின் கருத்தில் கரைசேர்ந்து விட்டது?
கடிதத்திற்கு மறுமொழி உயிர்மொழி
கற்ற மனிதன்
கைகளிலே!

செ.செந்தூரன்
கணிதப்பிரிவு '99

*With Best Wishes From*


# PIYADASA & SONS

**34, QUARRY ROAD,**
**COLOMBO-12**
**T.P 440181.**

*With Best Wishes From*

# WELLAWATTA PHARMACY

VAN FOR HIRE



**222, GALLE ROAD,**
**COLOMBO-06.**
**PHONE OFF:- 583957**
**RES:- 734370.**

*With Best Wishes From*

**ALI BROTHERS**

**180, OLD MOOR STREET,**

**COLOMBO 12.**

**T.P: 329973.**

*With Best Wishes From*

**INSTITUTE OF**

**INFORMATION SYSTEMS**

**V.PREM**

**(COMMERCE AND ACCOUNTS)**

# பிச்சைபுகினும் கற்கை நன்று

''பிச்சைபுகினும் கற்கை நன்று'' என்பது ஔவையார் வாக்கு. உலகில் கல்விச்செல்வம், பொருட்செல்வம் என இரு செல்வங்கள் உண்டு. இவற்றுள் காலத்தாலும், இயற்கையாலும் அழியாதது கல்விச் செல்வமாகும். பொருட் செல்வமோ கள்வனால் கவரப்படலாம். மழை, வெள்ளத்தால் அழியலாம். மேலும் கல்விச் செல்வம் ஒரு மனிதனின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்து அவன் வாழ்நாள் முழுவதும் அவனை நல்வழியில் நடத்தும்.

ஒரு நாட்டின் மன்னனுக்கோ அவன் நாட்டில் மட்டுமே சிறப்புண்டு. ஆனால் கற்றோருக்கோ செல்லும் இடமெல்லாம் சிறப்புண்டு.

''கல்லாதவர் கண்ணிருந்தும் குருடர்'' என்பது திருவள்ளுவரது கூற்று. ஆம்! கல்வியில்லாதவர்களுக்கெல்லாம் கண்ணிருந்தும் இவ்வுலகம் இருண்டது போலிருக்கும். கல்வியறிவில்லாதோர் இவ்வுலகில் வாழ்ந்தும் பயனில்லை எனலாம்.

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பது பெரியோரது கூற்று. ஆம்! இக்கூற்று எவ்வளவு உண்மையானது! நாம் இளமையிற் கற்பது சிலையில் பதிந்த எழுத்துபோல் நிலையானதாயிருக்கும்.

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' எனும் பழமொழிக்கிணங்க கல்வி கற்றலுக்கு இளமைப்பருவமே சிறந்ததாகும்.

கல்வி கொடுக்கக் கொடுக்க குறையாததும் கொடுக்கக் கொடுக்கப் பெருகவே செய்யும். ஒரு விளக்கை ஏற்றி அதன் மூலம் ஆயிரக்கணக்கான விளக்குகளை ஏற்றுவதுபோல் ஒரு கல்விமானே பல கல்விமான்களை உருவாக்க ஏதுவானவன் ஆவான்.

இவ்வுலகில் தற்போது ஏற்படும் விஞ்ஞான புரட்சிகளுக்கு அடிப்படை கல்வியே காரணமாகும். கல்வி இல்லாவிடின் இந்நவீனயுகத்தில் முன்னேறுவது மிகக்கடினம் ஆகும். கல்வியின் பெரும் சிறப்பு யாதெனில், மக்களிடையில் காணப்படும் அறியாமை, மூடநம்பிக்கை போன்றவற்றை இல்லாது செய்யக் கூடியது கல்வி ஒன்றே ஆகும்.

நாம் நமது கல்வியை ஐயமில்லாது கற்க வேண்டும். இதையே திருவள்ளுவரும் ''கற்கக்கசடற....'' என கூறியுள்ளார்.

எனவே ''பிச்சை புகினும் கற்கை நன்று'' என்ற ஔவையார் கூற்றுக்கிணங்க நாம் நமது கல்வியைக் கற்போமாக.

ஆக்கம்:-

**வி. அஜந்தன்**

*ஆண்டு 6Q*

# அவனுக்கு அவன்

ஒரு ஊரில் ஒரு குழந்தை இறந்து விட்டது. புதைக்க சென்ற ஊரவர்களைப் பார்த்து பருந்தும் நரியும் பேசத் தொடங்கியது.

பருந்து:- பெரியோர்களே ஏன் அழுகின்றீர்கள். பிறந்தவர் இறக்க வேண்டும் என்பது நியதிதானே. சீக்கிரம் புதைத்து விட்டு வீட்டுக்குப் போங்கள்.

நரி:- குழந்தை உயிருடன் இருக்கும் பொழுது எவ்வளவு கொஞ்சினீர்கள். சூரியன் கூட மறையவில்லை. கொஞ்சம் முகத்தைப் பார்த்து விட்டுப் போங்கள்.

பருந்து:- அய்யோ புத்தி கெட்ட நரிப்பேச்சை கேட்க வேண்டாம். உலர்ந்த மரம் துளிர்க்குமா? உயிர் போன குழந்தை பிழைக்குமா? சீக்கிரம் போங்கள்.

நரி:- உங்களுக்கு இரக்கமே இல்லையா? எனக்கு என்னவோ அசைவது போல் தோன்றுகின்றதே

பருந்து:- காட்டில் எத்தனையோ ஆண்டுகளாய் உள்ளேன். செத்தால் பிழைப்பதுண்டா.

பருந்துக்கும் நரிக்கும் என் இவ்வளவு அக்கறை. பகல் முடிவதற்குள் பருந்து ஆகாரம் சாப்பிட வேண்டும். இருள் வந்தால் அதற்கு கண் தெரியாது. நரிக்கோ இரவில் பருந்தின் தொல்லை இல்லாமல் சாப்பிட வேண்டும்.

அவன் அவனுக்கு அவன் காரியம் நடக்க வேண்டும். அதற்கு விளக்கம் கொடுப்பதே அவன் அவன் வேலை.

S. அரவிந்த்

ஆண்டு 8Q



# விடியல்களுக்காய் ஓர் அழைப்பு.....!



காலத்தின் கட்டாயத்தில்
கட்டுப்பட்ட எம் உணர்வுகள்
சில வேளைகளில்
உண்மைகளைக் கூட
உடைத்தெறியப் புறப்படலாம்.

நாகரிகம் நாளுக்குநாள்
நாக்கை நீட்டும் -ஒரு
நவயுகத்தில் நாம்
வாழ்ந்து கொண்டிருக்கலாம்- ஆயினும்
நாகரிகங்கள் நலிந்து விட்டால் -எம்
நல்லுணர்வுகள் என்றும்
அநாகரிகங்கள் ஆகிடலாமா?!

பட்டங்கள் பதவிகளுக்காய்
எம்மிற் சில பச்சோந்திகளும்
பரவியுள்ளனர் - கேட்டால்
நாகரிகம் என்கின்றனர்....
சொத்துக்கள் சுகங்களுக்காய்ச்
சில சோம்பேறிகள் -இன்று
சத்தியத்துக்கே சாவுமணி
அடிக்கத் துவங்கியுள்ளனர்....!
வந்தது - எவ்வழியாற்
போவதென்றே தெரியாத
விட்டிற் பூச்சிகளுக்காய்
அவர்கள் விரித்த வலைகள்
அவர்களையே வேட்டையாடும்
என்பதையுமவர்கள்
எண்ணிப்பார்க்க வேண்டும்.....!

வரட்டு கௌரவங்களுக்காய்த் தம்
சொந்தங்களை
விரட்டியடிக்கம் சிலரும் - இங்கு
வராமலில்லை.
சொந்தங்களுக்காய்த் தவமிருக்கும்
சக்தியற்ற அனாதைகளை -இவர்கள்
இன்னமுமா இனங்காணவில்லை....?!

நாகரிகம் ஏறிவிட சமயநெறி
வற்றிவிடல்
தூயநெறி என்று சொல்லி
சாயம் போட்டு ஏமாற்றும்
பன்னாடைகள் -நாளை கூட
கந்தலாடைகள் ஆக்கப்படலாம்....!

சினிமா தனை வேண்டிச்
சித்தம் கலங்கிநின்று
வடிவான வாழ்க்கைதனை - பருவத்
துடிப்பால் தொலைத்துவிட்டுத்
தவிப்போரும், தரங்கெட்டுத்
துடிப்போரும்
சிந்திக்க வேண்டியோரே....!

தாமென்றும் கருத்தோலைகள்
என்றெண்ணித் - தத்தம்
காவோலைகளை -முதியோர்
மடங்களுக்குக் காணிக்கையாக்கும்
கயவர்கள் என்றும் ஒழிவதில்லையா....
ஏணியாய் நின்ற -தூண்களாய்த் தந்த
அவர்கள்
ஏன் பெற்றோம் என்றுதானா -நாணிக்
கூனுகின்றனர்.....?!

ப்ரியமானவனே
விடியல்கள் என்றும் ஒன்றுதான்
வடிவங்களில்தான் சில மாணவர்கள்
துடிப்புள்ள உன் உணர்வு
சிறப்புள்ள பயன்பெற
துடிப்புடன் இன்றே
செயற்படப் புறப்படு
சில விடியல்களுக்காய்....!

A.R.நிகாஸ்
ஆண்டு 12 L
உயிரியற் பிரிவு

**றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினால்**
**நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான**
**போட்டிகளில் வெற்றிபெற்றோர்...**

### மத்திய பிரிவு கவிதை

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - ஹஸானா ஹஷன் | - முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 4 |
| 2ம் இடம் | - விவேகானந்தன் மயூரன் | - இந்துக்கல்லூரி, கொழும்பு - 4 |
| 3ம் இடம் | - யோ. ஞானஸ்கந்தன் | - இந்துக்கல்லூரி இரத்மலானை. |

### மேற்பிரிவு - சிறுகதை

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - வி. ஆனந்தி | - நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு - 13. |
| 2ம் இடம் | - எம்.கே.எம். அரபாத் அலி | - ஹமீட்-அல்-ஹீ சய்னி, கொழும்பு 12. |
| 3ம் இடம் | - எஸ். கல்பனா | - புனித கிளாயர் கல்லூரி, கொழும்பு - 6 |

**றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் நடாத்திய**
**குரும்பசிட்டி பூ. சு. நடராசா**
**ஞாபகார்த்த பொது அறிவும் நுண்ணறிவும் போட்டியில்...**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - து. கஜன் | - இந்துக்கல்லூரி, கொழும்பு - 4 |
| 2ம் இடம் | - இரா. சந்தியா | - நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு - 13 |
| 3ம் இடம் | - டி. சுதாகரன் | - புனித அந்தோணியர் கல்லூரி, வத்தளை |
| | - சி. டிக்சன் | - புனித ஆசிர்வாத அப்பர் கல்லூரி, கொழும்பு - 13. |

# தென்னாசியப் பெண்களும்
# பெண்விடுதலையும்

கடல் சூழ்ந்த இந்த உலகத்திலே எத்தனையோ கோடி மக்களால் உச்சரிக்கப்படும் ஒரு வார்த்தை பெண்விடுதலை என்பதாகும். இவ்வார்த்தையை ஆண், பெண் என இருபாலாருமே உச்சரிக்கின்றனர். இந்த பெண்ணுரிமைக் கோட்பாடுகள் மற்றும் கருத்துக்கள் இற்றைக்கு எத்தனையோ வருடங்களுக்கு முன்னிருந்தே கூறப்பட்டு வந்துள்ளன.

இன்று பெண்கள் பல துறைகளில் முன்னேறியுள்ளனர். அன்று சமையற்கட்டில் இருந்த பெண் இன்று விமானம் ஓட்டுகின்றாள். விண்ணில் பயணம் செய்கின்றாள். பல நாட்டின் தலைவிகளாகவும் முக்கிய பிரசைகள் ஆகவும் பெண்கள் இருக்கின்றனர். உலக வரலாற்றை எடுத்து நோக்கினால் பல நாடுகளின் தலைவர்களாகவும் அரசிகளாகவும் பெண்கள் இருந்து வருகின்றனர். இன்றும் உள்ளனர். இலங்கையையும் வங்காள தேசத்தையும் தற்போது பெண்களே ஆண்டு வருகின்றனர் சூரியன் மறையாத சாம்ராஜ்யமான பிரித்தானியாவை பல நூற்றாண்டுகளாக பல மகாராஜாக்களும், மகாராணிகளும் ஆண்டு வந்துள்ளனர். இருப்பினும் பிரித்தானியாவில் மகாராஜாக்கள் பெறாத அளவுக்கு மதிப்பையும் மக்களாதரவையும் மகாராணிகள் பெற்றுள்ளனர். வரலாற்றில் முக்கியம் பெறுபவர்களும் அவர்களே. சமூகத் தொண்டுகளிலும் பெணகள் மிக முக்கியம் வசிக்கின்றனர். அன்னை தெரேஸா இதற்கு முக்கிய எடுத்துக்காட்டாக திகழ்ந்தார். அன்னையின் தொண்டுகள் பலப்பல. இவை எல்லாம் பெண் சமுதாய அந்தஸ்தினதும் சம உரிமையினதும் எடுத்துக் காட்டுகள்.

இப்படி எல்லாம் இருக்கும் போது கூட பெண் விடுதலை என்றால் என்ன? என்பதை பல பெண்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். இதனால் 'பெண்விடுதலை' பற்றி பல தப்பபிராயங்களை வளர்த்துக் கொள்கின்றனர். முக்கியமாக இந்த நிலைமை இலங்கை இந்தியா போன்ற தென்னாசிய நாடுகளில் அதிகம் காணப்படுகின்றது. பெண்களின் பல்வேறு எண்ணங்களும் செயல்களுமே பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன.

மாதர் சங்கங்கள் என்ற பெயரில் தொழிற்படும் பல சங்கங்கள் இன்று பல பெண்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளன. 'லேடீஸ் கிளப்' என்று நாகரீகமாக அழைக்கப்படும் சங்கங்களிலுள்ள பெண்கள் பலர் பணக்காரப் பின்னணி கொண்டவர்களாக இருப்பவர். தம்மைப் பற்றி விளம்பரம் செய்யவே சங்கங்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர். அவர்கள் பேசும் பேச்சுக் கூட நாகரீக ஆடைகளையும் நகைகளையும் பற்றியதாகவே இருக்கும். கிட்டத்தட்ட இது ஒரு விளம்பரம் தான்.

இன்னொருவகை பெண்கள் இருக்கின்றார்கள். இவர்களின் செயல்கள் அனைத்துமே ஆண்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாக செய்வார்கள். குறிப்பாக ஆண்கள் போல

உடையணிதல், தலையலங்காரம் செய்தல், விஸ்கியுடனும் சிகரெட் உடனும் உலாவருதல் ஆகியன. இவர்களை பொறுத்தவரை கீழைத்தேய கலாச்சாரம் மூடத்தனமான ஒன்றாகும். பண்பாட்டை மதித்து நடப்பவர்களை ''பட்டிக்காட்டுத்தனம்'' என்பார்கள். இவர்களின் இத்தகைய செயல்களால் பெண்சமுதாயத்தின் தனித்துவம் செயலிழக்கிறது. பண்பாடு, கலாச்சாரத்தை கட்டிப் பேண வேண்டிய பெண்களே அவற்றை தூக்கி எறிவதால் பண்பாடே அழிந்து போகும் வாய்ப்பு உருவாகிறது. நம் சூழலுக்கு ஒவ்வாத, கலாச்சாரத்துக்கு ஒவ்வாத உடைகளை அணிவதால் பல சீர்கேடுகள் உருவாகின்றன. இவை எல்லாம் ஆணின் செயற்பாடுகளின் பிரதி பிம்பமே தவிர பெண் சம உரிமை அல்ல. இதன் மூலமும் அவர்கள் ஆண்களையே மறைமுகமாக உயர்த்துகின்றார்கள்.

சில இடங்களில் பெண்களின் பிற்போக்குத் தளங்களும், சந்தேகங்களும் கூட பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன. ஒரு பெண் சில ஆண்களுடன் சகஜமாக பழகுகிறாள் என்றால் அவளைப்பற்றி இன்னொரு பெண்தான் குறைகூறிக் கொண்டு திரிவாள். வரதட்சணைக் கொடுமைக்கும் மூலகாரணம் பெண்களே. எம் சமுதாயத்தில் மாமியார்கள் தாமும் பெண் என்பதை மறந்து மருமகளை துன்புறுத்துகின்றார்கள். இங்கு பெண்ணைப் பெண்ணே துன்புறுத்துகிறாள். அதே மாமியாரே பெண்குழந்தையை தம் மருமகள் பெறும் போதும் அவளை துரத்துகிறாள். இங்கும் பெண்ணை பெண் வெறுக்கிறாள்.

ஒரு கணவன் முற்போக்குக் கொள்கையுடையவன். கல்யாணம் செய்த புதிதில் இருந்தே மனைவிக்கு பூரண சுதந்திரம் அளிக்கின்றான். அவள் அப்போது நினைப்பாள் புதுமனைவி என்பதால் இக்கரிசனை என்று. நான்கைந்து வருடங்கள் கழிந்த பின் அவன் அப்படி இருப்பான் ஆயின் அவள் இப்படி இவன் பயந்தாங்கொள்ளி பொம்பிளைக்கு பயப்படுபவன் என்று அல்லாவிட்டால் அவன் குறைபாடுடையவன் என நினைப்பாள். அவன் யாரோ பெண்ணுடன் தொடர்பு வைத்ததை மறைக்க அப்படி செய்கிறான் என நினைப்பாள்.

இவையனைத்தையும் பார்க்கத் தெரிவது என்ன? என்றால் பெண்கள்தான் பெண்ணுரிமையின் முக்கிய எதிரிகள் என்று. இதை தீர்க்க பெண்களால் தான் முடியும். ஆணைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி பெண்களால் சமஉரிமை பெறமுடியாது. புத்திசாலித்தனமாக பெண்களின் உரிமைகளை வென்றெடுக்க பெண்களால் தான் முடியும். புளோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் அன்று அத்தனை தடைகளையும் தாண்டி உழைத்திராவிட்டால் இன்று 'தாதி' என்றதும் வெண்ணிற சீருடை அணிந்த பெண் புன்முறுவலுடன் மனக்கண்முன் தோன்ற மாட்டாள். அவர் அன்று பலவற்றை இழந்து கஷ்டப்பட்டதால்தான் இன்று அரிய தாதிச் சேலை முன்னேற்றம் அடைந்துள்ளது. புத்திசாலித்தனமாக போராடினால் பெண்விடுதலை கூப்பிடு தூரத்திலேயே.

பெண் உரிமையை பெண்கள் புத்திசாலித்தனமான சிறந்த வழியில் பெறும் போது தான் நாளைய உலகிற்காகவும் மனித சமுதாயத்துக்காகவும் தோள் கொடுத்து உழைக்க முடியும்.

**S. கஜேந்திரன்**

*ஆண்டு 10Q*

*With Best Wishes From*

## ASIAN COMPUTER SYSTEMS
## ASIAN BUSINESS COLLEGE

250, 1st Floor, George
R.De Silva Mawatha,
Colombo-13.
Tel: 078-49234.

333, Galle Road,
Colombo 04.
Tel: 597252

*With Best Wishes From*

## ALLIED STEEL COMPANY

**IMPORTERS & SUPPLIERS, GENERAL HARDWARE MERCHANTS**

126, Maha Vidyalaya Mawatha,
Colombo-13.
T.P:- 332085, 324887.

*With Best Wishes From*

FROM AN OLD

**ROYALIST**

WELL WISHER

*With Best Wishes From*

**GLORCHEM ENTERPRISE**

**FOR DYES, ACID, INDUSTRIAL, CHEMICALS AND SOLVENTS**

141, BANKSHALL STREET, COLOMBO-11.

T.P:- 336201- 423288,

FAX:- 336201- 437611.

*With Best Wishes From*

**ASIAN ELECTRICAL**

**88-2/11, FIRST CROSS STREET,**

**COLOMBO-11.**

**T.P. 439142 / 439143**

*With Best Wishes From*

M

**Bodhiraja Aluminium**

No: 230,Bodhiraja Mawatha, Gasworks Street,
Colombo-11, Phone 422999, 342208, Fax: 547545.

**Lanka Aluminium Suppliers**

No: 34, Dam Street, Colombo-12,
Phone: 437448.

*With Best Wishes From*

# VIJAI & COMPANY

**EXPORTERS, IMPORTERS & MANUFACTURERS**
**REPRESENTATIVES**
**DEALERS IN**
**NYLON, KURULON, FISHING NETS,**
**TWINE ROPE, MACRAME GOODS**
**& OTHER FISHING GEARS**

**14, CHINA STREET**
**COLOMBO-11.. TEL:-334776.**

*With Best Wishes From*

## MR..C. MADASAMY
## &
## MR. C.M. PRATHEEPAN

*With Best Wishes From*

# SERENDIB TRADERS

FOR

BEST **TEA**

NO:- 77/A, FOURTH CROSS STREET, COLOMBO-11.

T.P:-447681- 324602, 334586, 344702, 449556, 327660,

FAX:-335756.

*With Best Wishes From*

# UNIROY GRAPHICS

**OFFSET & LETTERPRESS PRINTERS**

(Specialists in Hand Tag's & Body Cards)

**No:- 120, Devanampiyatissa Mawatha,**
**MARADANA, COLOMBO-10**

**T'Phone: 696354**
**Fax: 94-1-696354**

*With Best Wishes From*

## THREAD HOUSE

*Importes and Wholesale Dealers in*

*all kinds of Thread*

*Buttons, Laces Etc..*

*No:- 238, Second Cross Street*
*Colombo -11,*
*Phone:- 445108, Tele Fax:- 526049.*

*With Best Wishes From*

## THE AUTO PRINTER

**PRINTERS & DEALERS IN ACCOUNT BOOKS**

**122, CENTRAL ROAD,**
**COLOMBO-12.**
**T.P:-433351.**

# இறைவா: ஏன் படைத்தாய்?

படிப்பிலே வெறுப்பு வைத்தாய்
காதலில் நாட்டம் வைத்தாய்
பெண்ணிலே இன்பம் வைத்தாய்
உணர்வினை தூண்ட் வைத்தாய்

தாயிலே பாசம் வைத்தாய்
வளர்ந்த பின் மறக்க வைத்தாய்
நாட்டிலே போரை வைத்தாய்
வெளிநாட்டு மோகம் வைத்தாய்

இன்பத்தில் துன்பம் வைத்தாய்
வாழ்க்கையில் வருந்த வைத்தாய்
வேதனையில் சிரிக்க வைத்தாய்
சிரிப்பிலே அழுகை வைத்தாய்

மனிதினிலே சலனம் வைத்தாய்
அமைதியை இழக்க வைத்தாய்
நம்மை இங்கு ஏன் படைத்தாய்
என்று உன்னை கேட்க வைத்தாய்


ஏ.ஜ.எம்.றஸ்னா
ஆண்டு 12 L
விஞ்ஞான பிரிவு

**றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினால்**
**நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான**
**போட்டிகளில் வெற்றிபெற்றோர்...**

### மேற்பிரிவு கட்டுரைப்போட்டி

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - நஸ்ரீனா மொஹிடீன் | - முஸ்லிம் மகளிர் கல்லூரி கொழும்பு - 4 |
| 2ம் இடம் | - எம். றிஸ்லா | - முஸ்லிம் மகளிர் கல்லூரி கொழும்பு - 4 |
| 3ம் இடம் | - மு. பர்லராத் | - சாஹிரா கல்லூரி கொழும்பு - 10 |

### மத்திய பிரிவு கட்டுரைப்போட்டி

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - எப். நஷ்தியா | - களு / அளுத்கம வீதி, பெண்கள் தேசிய பாடசாலை |
| 2ம் இடம் | - ச. புரந்தன் | - நல்லாயன் கன்னியர் மடம் (தனியார்) கொழும்பு - 13 |
| 3ம் இடம் | - டி. பிரச்சன்னா | - பரிதோமாவின் கல்லூரி கல்கிசை |

### மேற்பிரிவு கவிதை

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - மு. பர்லராத் | - சாஹிரா கல்லூரி, கொழும்பு - 10. |
| 2ம் இடம் | - சு. அமுதா | - முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை, தர்காநகர் |
| 3ம் இடம் | - ரொஷான் எஸ். அமீர் | - முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 10. |

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விபீடத்தின் முன்னாள் விரிவுரையாளர் திருமதி பூமணி குலசிங்கம் அவர்கள் ஆக்கியளித்த 'இளைஞர் இன்று எதிர்நோக்கும் சவால்கள்' இவ்வாண்டுத் தமிழ் நயத்தின் சிறப்பு கட்டுரைகளில் ஒன்றாக இடம்பெறுகிறது. பல்வேறு கருமங்களுக்கு மத்தியில் இக்கட்டுரையை ஆக்கியளித்து எமக்கென நேரத்தை செலவிட்ட அவர்களுக்கு எமது நன்றிகள் கோடி.

# இளைஞர் இன்று எதிர்நோக்கும் சவால்கள்

ஒருநாட்டின் வளங்களுள் அடிப்படையானதும் இன்றியமையாததுமாக விளங்குவது இளைஞர்களேயாகும். இவ்வளத்தினைப் பேணிக்காத்து பராமரித்து, சமூகப் பொருத்தப்பாடுடையோராக்கி, நாளைய சமூகத்தினைக் கட்டி எழுப்பக்கூடிய தகைமைகளை மலரச் செய்யும் பொறுப்பு மூத்த சமூகத்திற்கே உரியதாகும். எனவே தாமும் முன்மாதிரியாக வாழ்ந்து, இவர்களுக்குத் தகுந்த பொறுப்புகளை வழங்கி, இளைஞர்களது சுய ஆற்றல்களை வெளிப்படுத்த சந்தர்ப்பங்களை மூத்தோர் ஏற்படுத்துவது அவசியம். அப்பொழுது இவர்கள் தன்னம்பிக்கையினைப் பெற்று மூத்தோர்மீது பரஸ்பர நம்பிக்கையும் மதிப்பும் கொள்வர். நவீன உலகில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் யாவும் சமூகப் பொருளாதார வாழ்வின் எல்லாக் கோணங்களிலும் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. இந்த மாற்றங்களுக்க இணங்கவும் வாழ்க்கையினை அமைத்துக் கொள்ள வேண்டியவர்கள் இளைஞர்களே. ஆனால் பாரம்பரிய முறைகளில் ஊறித் தம் மனப்பாங்கு விழுமியங்களை வளர்த்துக் கொண்ட மூத்தோர், இவற்றை முழுமையாக ஏற்கக் கூடியவர்களாயில்லை. இதனால் சிந்தையில், இலட்சியங்களில் மனப்பாங்கு, விழுமியங்களில் இரு சாரூருக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே இன்று இளைஞர் ''புறக்கணிக்கப்படும்'' ஒரு தொகுதியினராகக் காணப்படுகின்றனர். தாம் பிறந்து வளர்ந்த சமுதாயத்திலேயே ''அன்னியர்'' போல் தோன்றுகின்றனர். இந்த நிலையினை மாற்றியமைத்து சமுதாய ஒருங்கிணைப்பையும் ஐக்கியத்தையும் பெறுவதே இவர்கள் எதிர் நோக்கும் சவாலாக அமைகின்றது.

## இளைஞர்கள் யார்?

இன்று சர்வதேச நாடுகள் யாவும் 15 ற்கும் 24 ற்கும் இடைப்பட்ட வயதுடையோர்களையே இளைஞர் எனக் கருதுகிறது. பொதுவாக இப்பருவத்தில் முறைமைக் கல்வியை முடித்து இவர்கள் தொழில் நுழைவிற்கு ஆயத்தமாவர். இவ்வயதெல்லையிலேயே விவாகமும், குடும்பப் பொறுப்புகளை ஏற்கும் நிலையும் தோன்றும். பெரும்பாலான வளர்முக நாடுகளில் 15 - 24 வயதுடையோர் விகிதம் முழுக் குடித் தொகையில் 22% - 23% விகிதமாகக் காணப்படுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த விகிதம் 19% - 20% விகிதமாகக் காணப்படுகிறது. எமது நாட்டின் முழுத்தொகையில் சராசரி 22% - 24% விகிதத்தினர் இவ்வயதெல்லைக்குள் அடங்குவர். இன்றைய நிலையில் 24 - 35

வயதிற்குட்பட்டோரையும் இளைஞர் எனச் சேர்த்தோமாயின் இன்னும் 12 விகிதம் அதிகரிக்கும் போது முழுத் தொகையும் சுமார் 34% விகிதமாக அமையும். இது நம் நாட்டுக் குடித்தொகையில் 1/3 பங்காகும்.

## இளைஞர்களின் பண்புகளும் இயல்புகளும்

வளர்ந்தோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் உள்ள இவர்கள் ''அங்குமில்லை இங்குமில்லை'' என்ற நிலையில் காணப்படுகின்றனர் என உளவியல் அறிஞர் இஸ்டான்லி ஹால் கூறுகிறார். காரணம் வளர்ந்தோர் இவர்களைச் சேர்த்துக் கொள்ளாததும், தாம் பிள்ளை போல் இனிமேல் இருக்க முடியாத நிலையுமாகும். முற்காலச் சமூகம் இவர்களை ஓர் தனிப்பட்ட நிலையில் வைக்கவில்லை.

பாரம்பரிய சமூகங்களில், பொறுப்புள்ள பெரியோர்கள் செய்யக்கூடிய செயல்களை, இவர்களுக்கும் கொடுத்து வளர்ந்தோர் சமூகத்துடன் இவர்களைச் சேர்த்துக் கொள்ளாத ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது.

இப்பருவத்தில் உடல் வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, அறிவு வளர்ச்சிகள், இடம் பெற்று, சமுதாய வாழ்வு மலரவேண்டும் என்ற எண்ணமும் அதற்குத் தாம் தொண்டாற்ற வேண்டும் என்ற சிந்தனைகள் இலட்சியங்கள் தோன்றும். நீதி, நியாயம், ஒழுங்கு, ஒழுக்கம், அத்துடன் அறப்பண்புகளும் சமய நம்பிக்கையும் இக்காலங்களில் பிறக்கும். இப்பண்புகள் மலர்வதற்குச் சமூகம் வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். அத்துடன் இளைஞர்களுக்குப் பல தேவைகளும் உண்டு. அவையாவன காப்பு, உறவு, அன்பு, மதிப்பு, கணிப்பு, சுதந்திரம். இவை நிறைவேற்றப்படும் போதே இவர்கள் நிறை மனிதராகின்றனர். தொழில் குடும்ப வாழ்வு பற்றிய கவலைகளும் இக்காலத்தில் எழும், இவையாவும் நிறைவேறாத சமயங்களில் விரக்தி, மனமுறிவு, உளப்போராட்டங்கள் தோன்றி உளநலன்களைப் பாதிக்கும் சமுதாய ஒழுங்குகளும் அமைப்புகளும் இளைஞர்களின் மறைந்துள்ள இயல்புகளை வெளிக் கொணரக் கூடியதாக அமைவது அவசியம். இல்லையேல் இவர்கள் பிரச்சனைக்குரியோராவர். தம்மை உருவாக்கிய சமூகம் தம் தேவைகளை நிறைவேற்றி திருப்தியான வாழ்வை மேற்கொள்ள வழிநடத்த வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர். எதிர்பார்ப்புகள் சிதறும் போது சமூகத்தினை மாற்றியமைக்க வேண்டும் என அவர்கள் சிந்திக்கின்றனர்.

## நவீனத்துவமும் இளைஞர் அன்னியப்படுத்தப்படலும் (Alienation of Youth)

நவீன உலகில் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்களினால் பலவிதமான மாற்றங்கள் சமூகப் பொருளாதார வாழ்வில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இம்மாற்றங்களை வரவேற்றும், மதித்தும் ஏற்றும் அவற்றின் விளைவாகத் தோன்றியுள்ள

சகல மாற்றங்களுக்கும் ஏற்ப தம்மை அமைத்துக் கொள்ளும் மனப்பாங்குகளை உடையோராக இன்று இளைஞர் விளங்குகின்றனர். இதற்கு உடந்தையாகப் புதியகல்வி முறைகளும், வழிகாட்டலும், அறிவுரை பகர்தலும் காணப்படுகின்றன. ஆனால் பாரம்பரிய சமுதாய அமைப்புகள் வளர்முக நாடுகளில் முதியோரே அறிவைக் கடத்துபவர்களாயும், ஆலோசனை கூறுபவர்களாயும் இருப்பதனால் இந்த நிலையிலிருந்து இறங்குவது அவர்களுக்குக் கடினமாயுள்ளது. அத்துடன் சந்ததி இடைவெளி காரணமாக சில நவீனத்துவப் போக்கினை இவர்கள் ஏற்பதில்லை. ஆனால் நாளைய சமூகத்தைக் கட்டி எழுப்பும் பொறுப்புள்ள இளைஞர் தமது எதிர்கால வாழ்வினை இதற்கிணங்க அமைக்கும் தேவையினால் இதில் ஓர் கவர்ச்சி, உற்சாகம் ஆர்வமுடையோராகக் காட்சியளிக்கின்றனர். வளர்முக நாடுகளிலேயே, பாரம்பரியத்திற்கும் நவீனத்துவத்திற்கும் இடையில் வேறுபாடுகள் தோன்றி ஓர் இரட்டைப் போக்கினைக் காண்கிறோம். முற்போக்கு சமுதாய ஒருங்கிணைப்பைத் தடை செய்கிறது. இந்த நிலையில் இளைஞர் முற்போக்குடையோராகவும், மூத்த சமூகம் பாரம்பரியம் தழுவியதாகவும் காணப்படுவது இவர்களை வேறாக்கி ''அன்னியராக்குவதாக'' அமைகிறது.

இன்றைய இளைஞர்கள் தாம் பிறந்த சமூகத்திலேயே, அதற்குப் புறத்தே ஒன்றி ஒருங்கிணைந்து வாழமுடியாதவர்கள் என்ற உணர்வினையுடையவராகக் காணப்படுகின்றனர்.

என கொட்பிறி குணதிலக்கா **(Godfrey Goonathelake)** தன் ஆய்வில் கூறுகிறார். மேலும் இவர்கள் மூத்தோரது பாரம்பரியம் தழுவிய சமுதாய அமைப்புகளில் சேர்ந்து கொள்ள விரும்பாதவராயும், அவற்றை மறுத்து வினாக்களை எழுப்ப வலியவராயும் விளங்குகின்றனர். மூத்தோர் நடத்தையினையும் பெறுமானங்களையும் தகுதியற்றனவெனக் கூறவும் தயங்குவதில்லை என 1972 ம் ஆண்டு மார்கா **(Marga)** நிறுவக அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

நவீன சமுதாயம் சதா மாற்றங்களுக்கு உட்படுவது இயல்பு என மேலை நாட்டுச் சமூகவியல் அறிஞர் கூறுகின்றனர். மாறும் தன்மையுடைய சமூகத்தில் மக்கள் இணங்கி வாழத் தயாராக்கிக் கொள்வதும் அவசியம் எனவும் கூறுகின்றனர். அல்வின் டொல்ரல் **(Alvin Toffler)** தனது ''எதிர்கால அதிர்ச்சி'' **Future shock** என்னும் நூலில், விரைவான மாற்றமும் அவற்றைச் சமாளிக்கும் முறைகளும் மேலை நாடுகளில் தொடர்ச்சியாக நிகழ்வதனால் பழமை மறைந்துள்ளதெனவும் மாறாக வளர்முக நாடுகளில் பாரம்பரியத்திற்கும், நவீனத்திற்குமிடையில் பாரதூரமான வேற்றுமைகள் உள்ளதால்; இரட்டைப் போக்கு உருவாகி சமுதாய ஒழுங்கிணைப்பினையும் அபிவிருத்தியினையும் பாதிக்கின்றதெனக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

நம்நாட்டில் கல்வி விருத்திக்கேற்ப பொருளாதாரம் விரிவடையாத காரணத்தினால் தொழிலின்மை இளைஞர்களுக்கு மனமுறிவினை உருவாக்குகின்றது. இன்று பெண்களும் தொழிலை நாடுவதனால் தொழிலின்மை இரண்டுமடங்காயிற்று. அத்துடன் ஒவ்வோர் ஆண்டிலும், க.பொ.தா.சாதாரணப் பரீட்சையில் தேறும் சுமார் 13% இளைஞர்களுள் 2% விகிதம் உயர் கல்விக்குச் சென்றனர். இப்பரீட்சையில் தேறாத இளைஞர்களும் தொழில்

வாய்ப்பின்றி மனவிரக்திக்கு ஆளாகின்றனர். எதிர் காலம்பற்றிய அச்சமும் வெறுப்பும் அவர்களைச் சமூக விரோத முயற்சிகளில் ஈடுபட தூண்டுகின்றது. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை ஈர்க்கும் சர்வதேச மயமாக்கல், பூகோளமயமாக்கல் என்ற கொள்கைகளும், திறந்த பொருளாதாரமும் இவர்களைத் திருப்திப்படுத்துமோ என்ற ஐயப்பாடும் இன்று தோன்றுகிறது.

## முடிவுரை

இளைஞர்கள் எமது சமுதாயத்தில் ஓர் முக்கிய அங்கத்தினை வகிக்கின்றனர். சமுதாய அமைப்புகளும் முதியோரும் இவர்களிடம் மறைந்துள்ள சிறந்த ஆற்றல்களை மலரச் செய்யும் வகையில் முயற்சிகளை திட்டமிட வேண்டும். குடும்பமும் பாடசாலையும் சமூகமும் அவர்களது தேவைகளை நிறைவேற்ற முயலுவது அவசியம். தக்க பொறுப்புக்களைக் கொடுத்து அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து தலைமைத்துவம் வழங்கும் போது அவர்கள் சுயமாகச் சமூகத்துடன் சேர்ந்து கொள்வர். மேலும், மூத்தோரே அறிவு வழங்க வேண்டுமென்ற நிலைமாறி மூத்தோரும் இளைஞர்களும் பங்காளிகளாக ஆற்றல்களை மலரச் செய்யும் வகையில் முயற்சிகளைத் திட்டமிடுவது அவசியம். குடும்பமும், பாடசாலையும், சமூகமும் அவர்களது தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பும் கடமைப்பாட்டினையும் உடையவராவர். தகுந்த பொறுப்புகளைக் கொடுத்து அவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்பழித்து தலைமைத்துவப் பதவிகளையும் வழங்கும் போது அவர்கள் சுயமாகவே சமூகத்துடன் சேர்ந்து கொள்வர். அறிவு மூத்தோரிடமே உண்டு. அவர்களே அறிவுரை கூறி இளைஞர்களை வழிநடத்த வேண்டும் என்ற நிலை மாறவேண்டும். மூத்தோரும் இளைஞர்களும் பங்காளிகளாக நவீன உலகில் ஒத்துழைத்து இயங்கும் போது சமுதாய ஒருங்கிணைப்பும் ஒற்றுமையும் தலைதூக்கும். இருசாராரிடமும் பரஸ்பர நம்பிக்கை உறவு, மதிப்பு வளர்ந்து நாட்டில் சமாதானமும் அமைதியும் தோன்றி நாட்டில் அபிவிருத்திக்கு வழிகோலும்.

**திருமதி பூமணி குலசிங்கம்**

**முன்னாள் விரிவுரையாளர்**

**கல்விப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்**

# உங்களுடன் நான்... உகாயா!

"அறிவின் ஆரம்ப நிலை அஞ்ஞானம்; அறிவின் வேக நிலை விஞ்ஞானம்; அறிவின் பூரண நிலை மெய்ஞானம் என்பது ஆன்றோர் வாக்கு. உவக நடைமுறைகளை மட்டும் ஆராய்ந்து நாத்திகம் நிலையற்றது எது? நிலையானது எது? என எடுத்தியம்புவது ஆத்திகம்''

தர்மம் என்று சொல்லுக்குப் பொருந்தும் ஒரு பொருள் உண்டு. மற்றவர்கள் வழியில் குறுக்கிடாத செயல்கள் அனைத்தையும் தர்மம் எனக் கருதலாம். மற்றவருக்கு எந்த இடையூறும் ஏற்படக் காரணமாக இல்லாமலும் பிறரது சுதந்திரத்திற்கு இடையூறாக இல்லாமலும் நீங்கள் நடந்து கொண்டால் தான் நீங்கள் தர்மத்தைப் பின்பற்றி நடந்ததாகப் பொருள்படும். வாழ்க்கையின் மூச்சு தர்மமும்; சத்தியமுமே.

''எங்கே சத்தியமும் பண்பாடும் இருக்கிறதோ;
எங்கே ஒழுக்கமும், தூய்மையும் இருக்கிறதோ;
எங்கே கடமையும், சத்தியமும் இருக்கிறதோ;
அங்கே வெற்றி நிச்சயம். தர்மத்தை யார்
காப்பாற்றுகிறாரோ அவர் தர்மத்தால் காப்பாற்றப்படுவார்''
என்று அன்று அர்ஜுனனுக்கு கண்ணன் கூறினான்.

சூரியனின் கதிர்களில் வானவில் என்னும் ஏழு வண்ணங்கள் இருப்பது போல தர்மத்துக்கும் ஏழு வைரப்பட்டைகள் உண்டு. முதல்பட்டை சத்தியம்; இரண்டாவது பட்டை நல்ல பண்புகள்; மூன்றாவது நேர்மையான நடத்தை; நான்காவது புலன் கட்டுப்பாடு; ஐந்தாவது தவம்; ஆறாவது துறவு; ஏழாவது பட்டை அஹிம்சையாகும். தர்மத்தின் அடிப்படையே சத்தியம். சத்திய வாழ்க்கையின் மூச்சாக இருப்பது நல்ல பண்பாடே ஆகும். பண்பாடு என்பதனுள் மூன்று அம்சங்கள் உள்ளடக்கப்படுகிறது. தூய்மை, புனிதம், நன்மை என்பவையே அவையாகும். எந்த பெரிய அறிஞனாகிலும் சரி, பேரறிஞர் ஆகினாலும் சரி; அந்தஸ்து எப்படி இருப்பினும், எத்தனை கல்வி இருப்பினும் பண்பாட்டுக்குரிய மூன்று அம்சங்களும் அவர்களிடம் இல்லையேல் அனைத்தும் பயனற்றவையாகிவிடும். உண்மையில் எல்லோரும் புற அழகை மட்டுமே கவனிக்கின்றனர். உண்மையைக் கூறுவதானால் மனிதனுக்கு நல்ல அழகைத் தருவது அவனுடைய உன்னதமான பண்பாடே ஆகும். இவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டுமானால் உலகப் பற்று, பகை, பொறாமை, வெறுப்பு இவையனைத்தையும் தவிர்த்தல் வேண்டும்? பற்று, பகை, பொறாமை, வெறுப்பு இவைகள் சிறியளவேனும் எம்மில் இருந்தால் பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் வளர்த்துக் கொள்ள எம்மால் இயலாது. பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் வளர்க்க முடியாத விடத்தில் எம்மால் சத்தியத்தையும், தர்மத்தையும் பின்பற்ற முடியாது. பொறாமை, வெறுப்பு என்பன அமைதியை அரிக்கும் இரு பூச்சிகள் எனலாம். மனிதர்களாக பிறந்த எல்லோருக்கும் இவைகள் சிறியளவேனும் இருக்கத்தான் செய்யும். இந்தப் பொறாமையும், வெறுப்பும் இதயத்தில் நுழையா வண்ணம் உறுதிப்படுத்த, தன்னலமற்ற அன்பு உங்களிடம் வளர வேண்டும். தன்னலமற்ற அன்பு எங்கே இருக்கிறதோ அங்கே பொறாமையும் வெறுப்பும் நுழையாமலும், நிலைக்காமலும் இருக்கும்.

மனிதன் தவறான வழியில் செல்வதற்கு அவனுடைய அறியாமையும் காரணமாக அமைகின்றது. ''நீ ஆன்ம ஞானத்தை வளர்த்துக் கொண்டால் உனது அறியாமை அனைத்தும் மறைந்து விடும்; அதன் பின் உன் தொல்லைகள், இடர்பாடுகள், துக்கங்கள் அனைத்தும் மறைந்து விடும்'' என்று கண்ணன் கீதையில் கூறியிருக்கிறார்.

ஞானம் என்றாலே கானகம் செல்லுதல், துறத்தல், பற்றறுத்தல், இல்லத்தை விட்டு ஏடுதல் எனப் பொருள் கொண்டு பலர் பயப்படுகின்றனர். அப்படி அஞ்ச வேண்டியதில்லை என்று ஆணித்தரமாக அடித்துப் பேசுகிறது ஞான யோகம். ஜனக மகாராஜா என்பவர் முழுமையான ஞானத்தில் இருந்த போதும் ஓர் ராஜ்யத்தை ஆண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உலகத்தில் பிறந்த எல்லோரும் சாவை மறந்துவிட்டு, தாங்கள் நிரந்தரமாக இருக்கப் போவதாக நினைத்து நான், எனது என்ற அகந்தையையும், மமதையையும், மனதில் வளர்க்கின்றனர். நீர் சிறிது தேங்கினாலும் அதில் கொசுக்களும், புழுக்களும், விரும்பத்தகாத பற்றீரியாக்களும் விரைவில் பெருகிவிடும். அதேபோன்றது தான் மனமும். எம் மனதில் பல ஆசைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் கொசுக்களான பற்றும், புழுக்களான பகையும், விரும்பத்தகாத பற்றீரியாக்களான பொறாமை, வெறுப்புக்களும் விரைவில் பெருகிவருகின்றனர். உங்கள் நம்பிக்கை, எதிர்ப்பார்ப்பு, என்பன நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகின்ற உறுதி மொழியை அடைவதற்காகவே இருக்க வேண்டும். தர்மத்தையும், சத்தியத்தையும் ஒருக்காலும் பிரிக்க முடியாது. இவை இரண்டு கண்களாக அல்லது ரதத்தின் இரு சக்கரங்களாக அல்லது பறவையின் இரு சிறகுகளாகவே இருக்கும். இவைகள் இரண்டையும் நாம் பிரிக்க முற்படுவோமானால் அது நமக்கு தான் நீண்ட காலத்தில் பல பல பிரச்சனைகளை தரும். சத்தியத்தை கடைப்பிடிப்பது என்பது பொய்மை பேசாது இருத்தல் என்பதையும் குறிக்கும். பொய்மை ஒருவரின் மனிதத் தன்மையையே அழித்து விடும். எனவே ஒரு செயல் உங்களுக்கு லாபகரமானதா? அல்லது கண்டனத்துக்கு, தண்டனைக்கும் ஆளாகக் கூடியதா? என்பதை பொருட்படுத்தாமல், பயப்படாமல், வருவது வரட்டும் என்று எப்போதும் மெய் பேசுவதே சிறந்ததென தீர்மானிக்க வேண்டும். வெறுமனே பொய் சொல்லாதிருப்பதை மட்டும் குறிப்பதல்ல சத்தியம் என்பதையும் நாம் புரிந்த கொள்ள வேண்டும். சத்தியத்தை எமது வாழ்க்கையின் சாரமாக நாம் கொள்ள வேண்டும். சத்தியத்துக்காக நாம் ஒவ்வொன்றையும் துறக்க தயாராக இருக்க வேண்டும். பொய் பேசாதிருப்பது சத்தியத்தின் ஒரு கூறு என்று கூட சொல்லலாம். ஒரு மாளிகைக்கு அத்திவாரம் எத்தனை முக்கியமானதோ, மரத்துக்கு தன் வேர்கள் எப்படி அடிப்படையானவையோ அதைப் போலவே மனித வாழ்க்கைக்கு சத்தியம் சிறந்த அடிப்படையாகும். சத்தியம் எம்மிடத்தில் ஊசலாடுமாகில் எங்கள் வாழ்க்கை பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்காது. சத்தியத்தை கடைப்பிடித்தவரில் ஒருவர் ஹரிச் சந்திரன். எங்கு பார்த்தாலும் ஆணவமும், பொறாமையும் நிரம்பி வழிகின்றது. அது

ஒருவரையும் விட்டதாக தெரியவில்லை. ஆணவமும் அதனுடன் இருக்கும் இரட்டை நச்சுப் பூச்சிகளான பொறாமையும், வெறுப்பும் உங்களிடம் வளராதபடி ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவைகள் வேர் விட ஆரம்பித்தபின் அவற்றை ஒழிப்பதென்பது மிக மிகக் கடினமாகும். வெறும் பொய் சம்பிரதாய, சாத்திர ஞானங்களால் அதை ஒழித்துக் கட்ட இயலாது. ஆனால் திட்டமிட்டு முயன்றால் உங்களுடைய எண்ணங்களை மாற்றியமைக்கவும், தன்னலமற்ற அன்பை வளர்த்துக் கொள்ளவும், இந்த நச்சுப் பூச்சிகளை அழிக்கவும், எம் கெட்ட எண்ணங்கள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கவும் இயலும். நம் வாழ்க்கை நல்ல எடுத்துக்காட்டான வாழ்க்கையாக அமைய வேண்டுமானால் ஒவ்வொருவரிடமும் தன்னம்பிக்கை வளர வேண்டியது அவசியமாகும். தன்னம்பிக்கை வளரும் சந்தர்ப்பத்திலேயே எதிலும் உறுதியான நம்பிக்கை வளரும். ஒருவருக்கு தன்மேல் நம்பிக்கை வளராவிடின் அவர்களுக்கு இலகுவான ஒரு வேலையும் சிரமமானதாகவே தென்படும். தன்னம்பிக்கை வளர வேண்டுமானால் ''நான்'', ''எனது'' என்ற அகந்தையையும், மமதையையும் விட்டொழித்தல் அவசியமாகும். உங்களிடம் உறுதியான நம்பிக்கையும், ஐக்கிய நோக்கமும் இருக்கும் போது இன்பத்தில் எக்காளமிடவும், துன்பத்தில் துவண்டு போகவும் மாட்டீர்கள். அப்போது தான் நீங்கள் முழுக்க முழுக்க பயமற்றவர்களாக இருப்பீர்கள். மனதால் உருவாக்கப்பட்ட ஒரு வகை மன மயக்கமே பயமாகும். நீங்கள் உங்களை மறந்து, உங்கள் ஆத்மாவை மறக்கும் போது தான் பயத்தால் துன்புறுகிறீர்கள். ஆசைகளும், பற்றுக்களும் உங்களிடத்தில் நிரம்பி இருக்கும் போது நீங்கள் பயப்படுவீர்கள். பொருள்களின் பால் பற்றுக் கொள்ளும் போதும் பயம் ஏற்படும். தேவையற்ற

எண்ணங்கள், பயனற்ற பழக்க வழக்கங்கள் முதலியவற்றை இதயத்திலிருந்து முதலில் அகற்றியாக வேண்டும். அதன் பின் அவற்றை தோண்டி துப்புரவாக்க வேண்டும். அதன் பின் அன்பு எனும் நீரை இதயமெனும் வயலில் பாய்ச்ச வேண்டும்; இந்த அன்பு நீரே இதயத்தைப் பண்படுத்தி வாழ்க்கை எனும் விவசாயத்திற்கு தகுதியாக்குகிறது. ஆன்மீக சாதனைகளின் உதவியுடன் ஒவ்வொருவரும் இதயமாகிய வயலை உழுது, நம்பிக்கையெனும் உரத்தை தூவ வேண்டும். அப்போதுதான் அந்த நிலத்திலுள்ள வித்துக்கள் செழிப்பாக, சத்து நிறைந்ததாக வளரும். இவையனைத்தையும் செய்து முடித்த பின்பே இதயமாகிய வயலில் முழுமையாக விதைக்க முடியும். இதய நிலமானது தீய எண்ணங்கள் எனும் களைகளால் நிறைந்து பண்படுத்தப்படாமல், வளமற்று, வறண்டுபோய், கரடுமுரடாக இருக்குமாகில் அதில் நல்ல விதைகள் எப்படி வளரும்? அவைகள் வளர்ந்த அதிக நன்மையை தருவதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? மனிதன் ஒவ்வொருவரும் தன் ஆசைகளையும், பேராசைகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பழகிக் கொள்ள வேண்டும். தர்மத்தின் ஏழு வைரப்பட்டைகளுள் நான்காவது வைரப்பட்டை புலன் கட்டுப்பாடு என்பது குறிப்பிடத்தக்கது. பொறாமை, வெறுப்பு சந்தேகங்கள் முதலிய தீய குணங்கள் நிறைந்திருக்குமாகில் ஒன்றையுமே புரிந்து கொள்ள எம்மால் முடியாது. ''அறியாமை என்னும் குருட்டுத்தனம் இருப்பதை விட சாவதே மேல்'' எனக் கூறுவார்கள். இந்த அறியாமையினாலேயே இன்று இந்த உலகம் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மனிதனிடம் உறுதியான மனம் காணப்படுவதே இல்லை. அவனால் தன் செயல்களை கட்டுப்படுத்த முடிவதில்லை; உலக இன்பங்களை நாடி வாழ்க்கையை வீணாக்கி விடாதீர்கள். உண்டு, உறங்குவதற்காக எடுக்கப்பட்டதல்ல இந்த மானிடப் பிறவி என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். பறவைகள்; மிருகங்கள், புழுக்கள் அனுபவிக்கும் இன்பத்தை அனுபவிக்க மானிடப் பிறவி தேவை இல்லையே? மேனிலை கல்விக்குரிய நன்மைகளை அடையாமல் இவைகளின் அற்பமான இன்பங்களில் ஈடுபடுவீர்களாகில் நீங்கள் மேலான கல்வியை கற்றதன் பயன் என்ன? மானிடப் பிறவியின் சிறப்பான குறிக்கோள் யாது? ''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' எனும் மணி மொழியின் உட் பொருள் என்ன? ஒவ்வொருவரும் மிருகங்களைப் போல் நடந்து கொள்ளவா மானிடப் பிறவி கொடுக்கப்பட்டது? அல்லது அசுரர்களாக மாறுவதற்காக கொடுக்கப்பட்டதா? இந்தக் கேள்வியை நீங்கள் ஒவ்வொருவரும் உங்களிடமே கேட்டுப் பாருங்கள்! அப்போது தெரியும் உங்கள் நிலை எப்படி இருக்கின்றது என்று?

இந்த உலகம் உண்மையிலேயே சீரழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதால் தான் ''உலக அழிவு'' வரப் போகின்றது எனப் பலர் பயப்பிடுகின்றனர். வேறெந்த நூற்றாண்டிலும் உலக முடிவைப் பற்றி அவ்வளவு அதிகமான பேச்சு இடம் பெறவில்லை என்பது தெரிந்த விடயம். உலகம் ஓர் அணு ஆற்றல் பேரழிவில் முடிவடையும் என்று அநேகர் பயப்படுகின்றனர். தூய்மைக்கேடு உலகத்தை அழிக்கக் கூடும் என்று மற்றவர்கள் நினைக்கின்றனர். பொருளாதாரப் பெருங்குழப்பம் பெருந்திரளான மனித வர்க்கத்தினை ஒருவருக் கொருவர் விரோதமாக வைக்கும் என்று இன்னும் மற்றவர்கள் கவலை கொள்கின்றனர். உண்மையில் ஒவ்வொருவர் மனதிலும் இப்படியான கேள்விகளும், குழப்பங்களும் ஏற்படக் காரணம் தான் என்ன? சாத்தியப் படக்கூடிய விடயம் என்று இவர்கள் நினைப்பதாலேயே இது உண்மையான விடயம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

''சாந்த குணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்த, மிகுந்த சமாதானத்தினால் மன மகிழ்ச்சியாயிருப்பார்கள்'' என்று பைபிளில் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருவரும் இவற்றை மனதில் கொண்டு அரிதான இந்த மனித வாழ்க்கையிலிருந்து பூரணமான நன்மைகளைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை உங்கள் உகாயா

முருகவேள் பிரஷாந்தன்

ஆண்டு 13 வர்த்தக பிரிவு

# கண்ணீர் நதியில் கயல் மீன்களிரண்டு

உள்ளத்தில்
உறங்காத நினைவுகளை
உரிமையாக்கிய நேசமலரே
உறவுகளை பாதியிலேயே
உன்னிதயம் மட்டும்
மறந்து விட்டேன்.

துள்ளித் திரிந்தவனை
துன்பச் சிறையையில்,
துணிவுடன் அடைத்துவிட்டாய்
துடிக்கின்ற நினைவுகளால்
துயில்கொள்ள மறுக்கின்ற
சிறிய விழியிரண்டும்

கங்கையை சுமந்தபடி
கன்னிமகளின்.
கயல் மீன்களிரண்டும்
கண்ணீர் நதியில் மிதக்கின்றன.
கனிந்து வந்த காதலை
தொடராமல் முடித்தேன்.

அன்றைய நாளில்
அழகுத் தேவதையாய்
அன்புடன் தெரிந்தவளே
அள்ளித் தரும் செல்வம்,
அற்றவன் நான் என்பது தெரிந்ததால்
பொருத்தமற்ற சோடி ஆனேனே,

எத்தனையோ சுமைகளை
எந்தன் இதயமது சுமந்தாலும்
எள்ளளவும் தளர்வதில்லை.
என்னுறவே உன் நினைவுகள்,
எடுத்துவிட்டாயே நீயும்
அவசர முடிவுகளை,

இத்தனை காலங்களாய்
இனித்திட்ட நம் பிணைப்பு
இவ்வளவு விரைவில்
இடுபாடுகளுக்குள் சிக்கியது.
இனியவளை உன்னால்அல்ல
உறவைத் தந்த
இறைவனால் தானே!

பிரிவின் தாக்கமதை
பிள்ளை மனமுள்ளவனே மறந்தும்
பி ணை ப் பு க ளெ ல் லா ம்
இணைவதில்லை
பித்தான உலகத்திலே.
பிரிவுச் சோகம் கூட,
சுகமான நினைவுதானே.....


**B.Vasantha Krishnan**
**12 (Sci) L**

*With Best Compliments*

*From*

# T.R. TRADERS

**DEALERS IN SHOPPING BAGS, PAPER BAGS**
**GROCERY BAGS**
**LUNCH SHEETS, CARRIER BAGS AND PAPPADAM ETC.**

**227/3, 5TH CROSS STREET,**
**COLOMBO - 11.**
**T'PHONE : 439329**

*With Best Compliments*

*From*

# NEW CROWN STORES

**DISTRIBUTOR - IN**
**"DELMAGE FORSYTH"**
**"RED COW"**
**"PHOENIX CO LTD"**
**"PLASTIC & NONSTICKS"**

**N0. 33 COLOMBO ROAD**
**AVISSAWELLA**
**TEL : 036-2305**

*With Best Compliments*

*From*

# A WELL WISHER

**DR. K.VAITHIYANATHAN**

**Tel : 416 - 297 - 8226**

*With Best Compliments*

*From*

# THILAKARATNE ENTERPRISES

**266/7, RATNAPURA ROAD**
**HORANA**
**PHONE : 034-62089**

**BRANCH : 31/A, Ratnapura Road**
**Ingiriya**
**Phone : 034-69378**

*With Best Compliments*

*From*

# LANKA TRADE

**WHOLE & RETAIL DEALERS IN GROCERY**

**53, YATIYANTOTA ROAD**
**AVISSAWELLA**
**T; PHONE : 036-2115**

*With Best Compliments*

*From*

# Vipul Traders

**General Merchants Wholesale & Retailers**

**59, YATIYANTOTA ROAD,**
**AVISSAWELLA.**
**PHONE : 036-2474**

*With Best Compliments*

*From*

## OPENARC COMPUTER SCHOOL LTD

**COMPUTER EDUCATION FROM KINDERGARTEN TO PROFESSIONAL QUALIFICATION IN BRITISH COMPUTER SOCIETY (BCS)**

**377, HIGHLEVEL ROAD,**
**NUGEGODA.**
**(NEAR SUJATHA VIDYALAYA)**

**TEL : 825667**
**FAX : 823552**
**EMAIL : openarc@slt.lk**

*With Best Compliments*

*From*

# Astric Garments (Pvt) Ltd.

**FACTORY :**
**65/1, EDIRISINGHE ROAD,**
**MIRIHANA, NUGEGODA,**
**TEL : 821495, 854014**

**OFFICE :**
**180, NEW CHETTY STREET,**
**COLOMBO - 13**
**TEL : 435790**

*With Best Compliments*

*From*

## N.M. MOHAMED MOHIDEEN LTD

**TANNERS IMPORTERS EXPORTERS**
**OF TANNED HIDES AND SKINS**

**TANNERY**
**87, BUTHGAMUWA ROAD**
**RAJAGIRIYA**
**T.PHONE : 325794, 329578, 862310**

**NO. 17,**
**SECOND CROSS STREET,**
**COLOMBO 11**
**T.PHONE : 325794**

*With Best Compliments*

*From*

## Trade Link

**DEALERS IN IMPORTED READY MADE GARMENTS**

**185, SECOND CROSS STREET,**
**(MAIN ST.CORNER)**
**COLOMBO - 11.**
**TEL : 430192**

*With Best Compliments*

*From*

# PREMAWARDANE EXPORT

POLLEWWA, BATAPOLA.
PHONE : 09-58129
FAX : 09-58435

*With Best Compliments*

*From*

# TKT ASSOCIATES

F / 117, PEOPLES PARK,
COLOMBO -11
PHONE : 331553
FAX : 436629

*With Best Wishes From*

# Luxmi
Jewellery

**22 Ct, Solid Gold Jewellery**

**No:- 1223, Maradana Road, Borella, Colombo-08**

*With Best Wishes From*

# HIGH STAR MARKETING AGENTS

**L.G. 117, PEOPLES PARK SHOPPING COMPLEX**
**GEO WORK STREET, COLOMBO-11.**

*With Best Wishes From*

FOR YOUR PHOTOGRAPHIC NEEDS
VISIT....

# VIJAYA COLOR FOTO

NO:-8, DUPLICATION ROAD
(LAURIES PLACE)
BAMBALAPITIYA.

*With Best Wishes From*

# T.V.S. & COMPANY

GENERAL MERCHANTS
COMMISION AGENTS
IMPORTERS - EXPORTERS

T.P:- 432978, 436408, FAX:- 00941-433471

175, FOURTH CROSS STREET, COLOMBO-11.

# திறந்த கற்றலின் தேவை ; ஒரு நோக்கு

கல்வி மனிதனின் ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ''அனைவருக்கும் கல்வி'' என்ற எண்ணக்கரு உலகின் அனைத்து நாடுகளினதும் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் கல்வியை ஜனநாயகமயப்படுத்துவதற்காகவும் சகல நாடுகளும் முயற்சியெடுக்கின்றன.

அண்மைக்காலம் வரை மரபுரீதியான கல்வி பாடசாலைக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு குறிப்பிட்ட வயதெல்லையைக் கொண்டவர்களுக்கு அதாவது இளவயதில் உள்ளோருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மரபுரீதியான கல்வி முறையில் நிலவிய கடுமையான சட்டதிட்டங்களும், தடைகளும் கல்வியை மூடிய நிலையில் வைத்திருக்கலாயிற்று. 1970 களில் இருந்து 'கல்வி' இதனை விடப் பரந்த ஒரு வரைவிலக்கணத்தைப் பெறலாயிற்று. கல்வி என்பது ஓர் இடத்துக்கு அல்லது வயதுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன்று. அது மனிதனின் வாழ்நாள் பூராவும் செயற்படும். வாழ்நாள் முழுவதும் நடைமுறையிலுள்ள ஒரு செயலொழுங்காகும் என்றும், எல்லை வரம்புகளை மீறிக் கல்வியும் அதற்கான வாய்ப்புக்களும் பரவலாக்கப்பட வேண்டும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1971 இல் யுனெஸ்கோ நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ''வாழ்வதற்கான கல்வி'' என்ற அறிக்கையில் இப்புதிய போக்கு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

கல்வி என்ற எண்ணக்கருவுக்குக் கிடைத்த இப்புதிய வரைவிலக்கிணத்தை அடிப்படையாகக் கொண்டு ''திறந்த கல்வி'', ''திறந்த பல்கலைக்கழகம்'', ''திறந்த பாடசாலை'' என்ற எண்ணக்கருக்கள் தோன்றின. கல்வி வாய்ப்புக்களின் மீதிருந்த தடைகள் தளர்த்தப்பட வேண்டும் என்றும், கல்வி வாய்ப்புக்கள் திறந்து விடப்பட வேண்டும் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திறந்த கற்றல் கொள்கை என்பதும் இவ்வடிப்படையில் எழுந்த ஒரு எண்ணக்கருவாகும்.

வயது, பால், அடிப்படைக் கல்வித் தகைமைகள், தொழில் செய்யும் நிலை போன்றவற்றைக் கவனத்திற் கொள்ளாது சகலருக்கும் கல்வியை வழங்கும் நிலையைப் பரவலாக்கும் ஒரு முறையே ''திறந்த கற்றல் முறை''யாகும். தொலைக்கல்வி, திறந்த கல்வி என்பவற்றை உபயோகித்து கல்வியை மாணவனிடத்துக் கொண்டு செல்வது இதன் சிறப்பியல். அச்சிடப்பட்ட ஆவணங்களையும், கட்புல, செவிப்புல, இலத்திரனியல் ஊடகங்களையும் உபயோகித்து மாணவனிடத்துக்குக் கல்வி கொண்டு செல்லப்படுகின்றது. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் ''திறந்த கல்வி முறை'' ஏற்கனவே வெற்றிகரமாகச் செயற்படுகின்றது.

முறைசார்கல்வி மூலம் பயிற்சிபெற முடியாமற் போனவர்க்கும் கல்வி வாய்ப்புக்களை வழங்குவது ஒரு தேசியப் பொறுப்பாகும். கல்வித் தேவையுடைய அனைவருக்கும் முறைசார் கல்வி மூலமே கல்வி வாய்ப்பை வழங்குவது சிரமமான காரியமாகும். கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குவதற்காக மாற்று வழிகளைத் தேட வேண்டியுள்ளது.

எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்னும் கொள்கை சர்வதேச அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இதனை அடைவதற்கு வளர்ச்சி அடைந்த, அடைந்து வரும் நாடுகள் தமது மக்களுக்குக் கல்வி வழங்குவதில் அதிகளவு அக்கறை கொண்டுள்ளன. பொதுவாக அபிவிருத்திக்கு அடிப்படை அமிசமாகக் கல்வி கொள்ளப்படுகின்றது. இதனால் வளர்ச்சி அடைந்த நாடுகள் பெருமளவு முதலீட்டின் பின்னணியில் ''எல்லோருக்கும் கல்வி'' என்னும் தத்துவத்தை எட்டிவிட்டன எனக் கொள்ளலாம். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள்

அபிவிருத்திக்கு அடிப்படையான எல்லோருக்கும் கல்வி என்னும் தத்துவத்தை நடைமுறைப்படுத்தப் பெரு முயற்சி எடுத்து வருகின்றன. இதற்கு ஒரு கருவியாகத் திறந்த கற்றல் முறை விளங்குகின்றது.

நடைமுறையிலுள்ள முறைசார் கல்வி அமைப்பானது எல்லோருக்கும் கல்வி என்னும் தத்துவத்தை அடைவதற்குத் தடையாகவுள்ளது. முறைசார்கல்வி அமைப்பானது வயதுக் கட்டுப்பாடு, முழு நேரக் கல்வி, பரீட்சை நோக்கு, ஆசிரியர் ஆதிக்கம், நிறுவனம் சார்பான தன்மைகளைக் கொண்டுள்ளமையால், எல்லோருக்கும் கல்வி வழங்கும் இயல்பைக் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையிலிருந்து, கல்வியைச் சனநாயகப்படுத்த வேறோர் முறை அவசியமாகின்றது. எனவே இதற்கோர் மாற்றூடகமாகத் திறந்த கல்வி முறை அமையும். திறந்த கல்வி முறையால் சமூகத்திலுள்ள யாவரும் கல்வி கற்பதற்கு வாய்ப்புண்டாகும். இதன் வழி சமூக முன்னேற்றம் ஏற்படும்.

''திறந்த கற்றல் முறையின் தேவை'' என்னும் தலைப்பை முதலில் நோக்குதல் பொருத்தமானதாகும். திறந்த என்பது கல்வியைச் சனநாயகப்படுத்தலுக்கான நடவடிக்கையாகும். சமூகத்தின் ஒரு பகுதியினர் கல்வி அறிவு அற்றவர்களாக இருப்பதனால் அவர்களின் அடிப்படை உரிமையானது மறுக்கப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. இந்நிலையிலிருந்து அம் மக்களை விடுவிக்க வேண்டுமாயின், அம்மக்களுக்குக் கல்வி வழங்குவது தவிர்க்க முடியாததாகின்றது. ஏற்கனவே வாய்ப்பை இழந்த மக்களுக்கு மீண்டுமொரு வாய்ப்பை அளிப்பதாக இருக்க வேண்டும். இதனை இரண்டாவது சந்தர்ப்பமாகவும் கொள்ளலாம்.

திறந்த என்னும் பதத்தை எடுப்பின், ஏதாவதொன்று முடியாதாக இருக்க வேண்டும். முறைசார் கல்வி அமைப்பானது மூடிய தன்மையைக் கொண்டதாகும். இம்முறையானது நெகிழ்ச்சி அற்ற கடினத்தன்மையைக் கொண்டது. இதில் கல்வி கற்றல் என்பது சிக்கலானதொன்றாகவுள்ளது. குறிப்பாக வரையறுக்கப்பட்ட பாடத்திட்டம், தெரிவுக்கு இடமின்மை, குறித்த நேரசூசிக்கு இயங்கும் நிலை, குறித்த இடத்தில் கற்க வேண்டிய நிலை ஆகிய அம்சங்கள் கற்றலைத் தடைப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. இருந்த போதும் இளம் தலைமுறையினருக்கு இவ்வடிப்படையில் கல்வி கற்பித்தலே சிறந்ததாகும். ஆனால் நடைமுறையிலுள்ள முறைசார் கல்வி அமைப்பில் பெருந்தொகையானோர் தமது கல்வியை முற்றாக முடிப்பதற்கு முன்னரே பாடசாலையை விட்டு வெளியேறிவிடுகின்றனர். எனவே இத்தகையோர்க்குப் பாதுகாப்பளிக்கும் ஓர் அமைப்பாகத் திறந்த கல்வி முறைமை அமையக்கூடும்.

''கற்றல் எனப்படுவது யாது?'' என்னும் வினாவிற்கு சுலபமாக விடையளிப்பது கடினமாகும். கற்றல் என்னும் சொல்லினால் குறிப்பிடப்படுவன பலவகைப்பட்டவையாக உள்ளன. நாம் ஒரு செய்யுளைக் கற்கின்றோம். ஆற்றில் நீந்தக் கற்கின்றோம். பண்புடன் ஒத்துழைத்துச் சமுதாயத்தில் பிறருடன் கூடி வாழக் கற்கின்றோம். இம் மூன்றையும் கவனிக்கும் போது இவை மூன்றும் வெவ்வேறு வகைப்பட்ட செயலின் விளைவுகளைக் குறிப்பனவாக நமக்குத் தோன்றுகின்றன.'' எனவே கற்றல் என்பது கற்போனின் அறிவையும், அவனின் செயற்றிறனையும், அவனின் மனப்பாங்கையும் மாற்றுவதாக இருக்க வேண்டும். எனவே திறந்த கற்றலில் ஈடுபடுவோரின் இத்திறன்கள் விருத்தி செய்யப்படுதல் அவசியமாகும்.

எனவே திறந்த கற்றல் முறையில் ஈடுபடுவோரின் முதிர்ச்சி, ஆயத்தநிலை என்பவற்றில் கவனம் செலுத்துதல் இன்றியமையாததொன்று. பொதுவாகத் திறந்த கற்றல் முறையில் ஈடுபடுவோர் ஏற்கனவே முறைசார் கல்வி முறையிலிருந்து விடுபட்டவர்களாவர். அவர்களை மீண்டும் கற்றலுக்குக் கொண்டு வருதல் என்பது முறைசார் கல்வி முறை போன்று மீண்டும் கல்வி வழங்கப்படுமாயின் அவர்கள் தொடர்ந்து கல்வியில் ஈடுபடுதல் என்பது நடைபெறக்கூடிய ஒன்றாக அமையமாட்டாது. எனவே திறந்த கற்றல் முறையில், கற்போரின் தனித்துவம் பேணப்படும். கற்போர் தான் விரும்பியவாறு கற்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அத்தோடு தான் விரும்பிய பாடத்தைத் தெரிவு செய்வதற்கு இடமளிக்கப்படும். இத்தகைய தேசிய திறந்த

பாடசாலை அமைப்பில் கற்போர் தான் விரும்பிய பாடத்தைக் கற்பதற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஒரு மாணவன் உயிரியல், பௌதீகவியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களைச் சிரேஷ்ட மட்டத்தில் கற்பதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முறைசார் கல்வி அமைப்பில் குறித்த சில காலத்தில் தனது கற்கை நெறியை முடித்துவிட வேண்டிய நிலையுண்டு. இலங்கையில் பொதுவாக ஆரம்பநிலையில் 5 ஆண்டுகளும், இடைநிலையில் 6 ஆண்டுகளிலும் கற்று முடிக்க வேண்டிய நிலையுண்டு. திறந்த கற்றல் முறையில் அவ்வாறான கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. கற்போர் தான் விரும்பிய போது கற்றலை ஆரம்பிக்கலாம். அவன் தனது வசதிக்கு ஏற்றவாறு கற்றலைத் தொடர்ந்து கற்க முடியும். இங்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. மாணவனுக்குப் போதிய சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இங்கு கற்போரின் தனித்துவம் மிக உச்ச அளவில் பேணப்படுவது முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது.

முறைசார் கல்வி அமைப்பில் கற்பித்தல், கற்றல் ஆகிய இரு செயன்முறைகள் உண்டு. பொதுவாகக் கற்றலிலும் பார்க்கக் கற்பித்தலுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. குறிப்பாகக் கற்பிப்போனுக்குப் பல்வகைப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றது. திறந்த கற்றல் முறையில் கற்றலுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. கற்போன் தனது சொந்த முயற்சியின் அடிப்படையில் கற்றலை முன்னெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பாகச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

திறந்த கற்றல் முறையில் சுயகற்றல் சாதனங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. சுயகற்றல் சாதனங்கள் கற்போனின் கற்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஆக்கப்படுகின்றன. குறிப்பாகக் கற்றல் சாதனமானது சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, கற்றலை முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் கற்போனை ஆயத்த நிலைக்கு இட்டுச் செல்லும் வகையில் முற்சோதனை வழங்கப்படுகின்றது. பின்னர் மாணவனின் கற்றல் முன்னேற்றத்தை அவதானிக்கும் வகையில் சுயமதிப்பீட்டுப் பரீட்சைகள் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் சுயகற்றல் சாதனங்கள் ஆக்கப்படுவது இதிலுள்ள பிரதான அம்சமாகக் கொள்ளலாம். பொதுவாக காக்ஸியின் கற்றல் நிலைக் கருத்துக்கள் கற்றல் சாதனம் தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்படுகின்றது.

(1) ஆக்கநிலைக் கற்றல்
(2) பிரித்தறியும் நிலைக்கற்றல்
(3) பொதுக் கருத்துச் சார்ந்த கற்றல்.
(4) பொது விதிகளைக் கற்றல்.
(5) பிரச்சினைத் தீர்வு.

இவ்வாறு கற்றல் சாதனங்கள் தயாரிக்கும் போது இலகுவிலிருந்து கடினத்தன்மை கொண்டதாக அமைவதோடு, கற்போனின் கற்றலை முன்னெடுத்துச் செல்லும் வகையில் கவனத்தை ஈர்ப்பதாக இருக்க வேண்டும். குறிப்பாகக் கற்றல் சாதன வடிவமைப்பு மிகவும் அழகானதாக இருக்க வேண்டும். கற்றல் பொருள் மிகவும் இலகு நடையில் அமைந்திருக்க வேண்டும். கற்போனை எவ்வகையிலும் தடுமாற்றத்திற்கு உள்ளாக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும். இவ்வாறு கற்போனின் பல்வகை நிலைமைகளைக் கருத்தில் கொண்டே கற்றல் சாதனங்கள் ஆக்கப்படுகின்றன.

பொதுவாகக் கற்போனின் கற்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பல்வகைப் பட்ட இலத்திரனியல் ஊடகங்களும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. எனவே அவற்றின் பயன்பாடும் இன்று பெரிதும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. வானொலி, தொலைக்காட்சி, இன்டர்நெட் போன்ற சாதனங்கள் கற்போனுக்கு உதவும் வகையில் ஆக்கப்படுதல் அவசியமாகும்.

கல்வியின் பிறிதோர் அம்சமாக இன்று உலகளாவ ஏற்றுக் கொள்ளப்பட்டது கல்வியைச் சனநாயகப்படுத்தல் என்பதாகும். இதுவோர் அடிப்படை மனித உரிமையாகவும் கொள்ளப்படுகின்றது. எனவே இன்றுள்ள கல்வி அமைப்பில் பெருந்தொகையானோர் முறைசார் கல்வி அமைப்பிலிருந்து விடுபட்டுள்ளனர். இவர்களுக்குக் கல்வி வழங்க வேண்டிய பெரும் பொறுப்பு சமூகத்தைச் சார்ந்ததாகவுள்ளது. அப்பொறுப்பை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான அமைப்பொன்றைத் தேடிக் காணல் அவசியமாகும். அதற்குப் பொருத்தமானதொன்றாக விளங்குவது

திறந்த கல்வி முறையாகும். இதன் வழி சமூகத்தில் ஏற்கனவே கல்வியைப் பெறமுடியாத பெருந்தொகையானோர்க்கு கல்வி வழங்க வாய்ப்புண்டாகும்.

கல்வியின் பிறிதோர் அம்சம் வாழ் நாட் கல்வியை வழங்குவதாகும். கல்வி என்பது ஒரு தொடர்ச் செயற்பாடாகும். இந்த வகையில் கல்வியானது தொடர்ந்து கற்பதற்கு ஏற்ற வகையில் அமைதல் அவசியமாகும். இன்றுள்ள முறைசார் கல்வி அமைப்பில் அவ்வகை ஏற்பாடுகள் மிகக் குறைவாகவே உள்ளன. கிடைக்கும் வாய்ப்புக்கள் கூட வரையறைக்கு உட்பட்டன. எனவே விரும்பிய அனைவரும் தொடர்ந்து கற்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டிய அமைப்பை உருவாக்கல் அவசியமாகும். இதற்குரிய அமைப்பாக விளங்கக் கூடியது திறந்த கற்றல் முறையாகும்.

மாறிவரும் உலகின் தேவைகளும், திறன்களும், பொறுப்புக்களும் அதிகமாகும். இவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய மனித வளத்தை உருவாக்குவது சமூகத்தின் கடமையாகும்.

பொருத்தமான திறனையும், தகவல்களையும் கொடுக்கும் திறன் கல்விக்கு உண்டு. எனவே கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் திறன் திறந்த கல்வி முறைக்கே உண்டு. முறைசார் கல்வி அமைப்பில் எதிர்பார்க்கப்படுவது எழுத்தறிவின்மையைப் போக்குதலாகும். இதன் பெறுபேறு சமூகத்தின் இயக்கச் செயற்பாட்டைப் பொறுத்த வகையில் மிக இழிவளவான நிலையிலேயே உள்ளது. மாறிவரும் உலகின் தேவைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் கல்வியானது மாற்றி அமைக்கப்படுதல் அவசியமாகும். குறிப்பாக இன்று எதிர்பார்க்கப்படுவது ''செயற்திறன் வாய்ந்த கல்வி'' என்பதாகும். இதன் அடிப்படையில் கல்வியானது வாழ்க்கையோடு இயைந்து செல்வதாகவும், வாழ்க்கையை வளம்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். உலக நாடுகளின் அபிவிருத்திக்கு ஈடுகொடுக்கும் வகையில் கல்வி அமைதல் வேண்டும். அவ்வாறு அமையாத வெறும் எழுத்தறிவுக் கல்வியானது நாடுகளின் அபிவிருத்தியில் மிகப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளிவிடும். எனவே திறந்த கற்றல் முறை மூலம் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான மனித வளத்தைக் கட்டி எழுப்பலாம்.

மொத்தமாகச் சொல்லுவதானால் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிப்பது அந்நாட்டின் மனிதவளமாகும். மனித வளம் வினைத்திறன் உடையதாக இருக்க வேண்டுமானால், பொருத்தமான காலத்துக்கு ஒத்த கல்வி வழங்கல் அவசியமாகும். கற்போரின் விருப்பத்திற்கு உகந்த கல்வி வழங்க ஏற்ற அமைப்பாக விளங்குவது திறந்த கற்றல் முறையாகும்.

இன்றுள்ள அமைப்பில் உலகம் ஓர் கிராமமாகச் சுருங்கிக் கொண்டு வருகின்றது. நவீன இலத்திரனியல் சாதனங்களின் பயனாக உலகச் செய்திகள், அபிவிருத்தி அம்சங்கள், நாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியன எல்லா நாடுகளையும் பாதிக்கின்றன. அவ்வாறான பாதிப்புக்களை விளங்கிக் கொள்ள, கல்வி அடிப்படைத் தேவையாக அமைகின்றது. எழுத வாசிக்கத் தெரியாத மக்களால் ''இன்ரநெற்'' போன்றவற்றின் பயன்பாட்டைப் பெறமுடியாதென ஐக்கிய நாடுகள் கல்வி, கலாசார, விஞ்ஞான தாபனத்தின் செயலாளர் கூறி இருப்பது இங்கு நோக்கற்பாலது. எனவே உலகை விளங்கிக் கொள்வதற்கும், அத்தோடு இயைபுபட வாழ்வதற்கும் கல்வி அறிவு இன்றியமையாததாகும். அதற்குரிய அமைப்பாகத் திறந்த கற்றல் முறையைக் கூறலாம்.

**உலகநாதர் நவரத்தினம்** (B.A. Dip.in. Ed. MEd)

செயற்திட்ட அதிகாரி தேசிய கல்வி நிறுவனம்

*With Best Compliments*

*From*

# RANI SHARMILA

**UNDERTAKE TELEPHONE REPAIRS & SERVICE MAINTAINING BUILDING TELEPHONE WIRING, HOUSE WIRING & ELECTRICAL ACCESSORIES REPAIRING**

**118/4 MUHANDIRAM ROAD,**
**KOLLUPITIYA,**
**COLOMBO - 3**

**TEL : 342321**

*With Best Compliments*

*From*

# VEMAAL CO (PVT) LTD.

**DEALERS IN COCONUT OIL ETC.**

**NO. 1, DAM STREET,**
**COLOMBO - 12**
**TEL : 431641, 336565**

*With Best Compliments*

*From*

**City Point**

**(IMPORTS & EXPORTS)**

**NO. 103, 3RD CROSS STREET,**
**COLOMBO - 11.**

**TEL : 3327704, 332705**

*With Best Compliments*

*From*

**BALASAROJA STORES**

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

**NO. 192, PRINCE STREET, COLOMBO - 11**
**TEL : 423582, 330886**
**CELLTEL NO. 072-653256**

**BRANCH:**
**BALASAROJA STORES**
**NO. 6, SOUTH LANE, BADULLA, TEL : 055-2445**

*With Best Compliments*

*From*

# Micro Metals

**Importers, General Hardware Merchants**

126, MAHAVIDYALAYA MAWATHA,
(BARBER STREET)
COLOMBO - 13, SRI LANKA

PHONE : 325764, 445349
FAX : 94-1-332435

*With Best Compliments*

*From*

# Trance Printers

**OFFSET, LETTERPRESS PRINTERS, SCREEN PRINT & COMMERCIAL ARTS**

15, SANCHIARACHCHI GARDEN,
COLOMBO - 12, SRI LANKA.
TEL : 331404

*With Best Compliments*

*From*

# UDAYA STORES

**DEALERS IN HARDWARE MERCHANTS**
**& ESTATE SUPPLIERS**

**NO. 17, GAMPOLA ROAD,**
**NAWALAPITIYA**

*With Best Compliments*

*From*

# PAUL ENTERPRISES

**DEALERS IN PAPER, STATIONERS,**
**& MENUFACTURS OF OXFORD BOX FILE.**

**22 1/2, D. PRINCE STREET,**
**COLOMBO - 11.**

**T'PHONE : 338612**

சிறப்பு கட்டுரை

# ஈழநாட்டிலே இலக்கிய நயப்பும் விமரிசனமும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் நீண்ட பாரம்பரியம் உடையது. இந்நிலைக்கு இலக்கியம் பயிற்சியுடையதாய் நிலவி வந்தமை ஒரு காரணமாகலாம். இலக்கியப் பயிற்சிக்கு நயப்பும் விமரிசனமும் உந்து சக்தியாக அமைவன.

காளிதாசனின் ரகுவம்சத்தை நயந்த அரசகேசரி தம் நயப்பினைத் தமிழிலே பாடிக் காட்டியுள்ளார். செம்பொருள், குறிப்புப் பொருள் எனப் பொருள் இருவகைப்படும் என்று இலக்கண மரபின் அடிப்படையிலே, சைவ இலக்கியங்களிலே செம்பொருள் கண்டு மயங்கியவர்களுக்கு, ஆறுமுகநாவலர் குறிப்புப் பொருளாகிய உண்மைப் பொருள் இதுவெனக் காட்டி மயக்கம் தெளிவித்தவராவர். யதார்த்தவாத சித்தாந்தத்தின் முகிழ்ப்பினை நாவலவர்களாலே காணமுடியுமோ என்பதை ஆய்தல் பயன்தரலாம். நாவலரவர்களின் ஆழ்ந்த பொறுப்புணர்ச்சி, நேர்மை, வியத்தகு துணிச்சல், விடிய அழுத்தம், தெளிவு, தர்க்கநீதி, புலமையாம் சிறப்பியல்புகள், அவர்கள் விட்டுச் சென்ற சொத்து. இவை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற களத்தினை உருவாக்க உதவியுள்ளதைப் பலர் ஏற்றுக் கொள்வர்.

ஆறுமுகநாவலர் காலத்திலே சிறப்படைந்த புராண படனம், இலக்கிய நயப்புக்குச் சிறந்த களனாக அமைந்தது. நல்லூர் வித்துவசிரோமணி ச.பொன்னம்பலபிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே அதன் தலைசிறந்த பிரதிநிதியாகப் பேரெடுத்தனர்.

> ''உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம்
> உள்ளங்காலிலிருந்து உச்சிபரியந்தம்
> பொன்னம்பல பிள்ளையின் உருவமே இலக்கிய
> ரசனையால் ஆனது. தனிக் கற்கண்டிற்
> செய்த பலகாரம் போல இலக்கிய ரசனை
> மயமாயிருந்தார் பொன்னம்பலபிள்ளை. எந்த நேரத்திலோ
> புதிது புதிதாகத் தமக்குத் தோன்றுகின்ற இலக்கிய
> ரசனையை யாருக்காவது வெளிப்படுத்தாமல்
> இருக்கமாட்டாமை பொன்னம்பலபிள்ளையின்
> நித்திய கல்யாணகுணம். பொன்னம்பலபிள்ளை
> இந்த மாட்டாமையாகிய ரசகுணத்தை ஒருவாறு
> தணித்துத் தணித்து முட்டுத் தீர்வதற்கு உபகார
> ஸ்தலங்களாய்ப் புராணபடனம் நடைபெறுகின்ற
> முக்கிய கைசாலயங்கள் அமைந்திருந்தன.''

என்பர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (கந்தபுராண கலாசாரம், 1959, பக்.26) பொன்னம்பலபிள்ளை ''மருகனென்றவனையுன்னி'''' ஆவர்த்தநேர்மாக்கள் வாழ் அரிபுரம்'' முதலாம் கந்தபுராணத் தொடர்களுக்குத் தந்த விசேடமான கருத்துக்கள் யாழ்ப்பாணத்திற்குப் பெருமை தேடித்தந்ததுமுண்டு.

பொன்னம்பலபிள்ளை மரபு - ஆறுமுகநாவலரவர்களின் மரபிலும் வேறுபட்டது- ஈழத்திலே மட்டுமன்றித் தமிழ்நாட்டிலும் செல்வாக்குப் பெற்றது. அம்மரபினைத் தென்புலோலி கதிரைவேற்பிள்ளை, வண்ணை சுவாமிநாதபண்டிதர், சித்தன்கேணி அம்பலவாணநாவலர், மட்டுவில் வேற்பிள்ளை உபாத்தியாயர் முதலியோர் தமிழ்நாட்டிலே தொடர்ந்தனர். ஈழநாட்டிலே அம்மரபின் செல்வாக்கினை உயர்த்தி நின்றவர் உரையாசிரியர் வேற்பிள்ளை மகன் மகாலிங்கசிவம். அவர் சதா காவிய உலகிற் சஞ்சரித்து இன்புறுதலைப் பழக்கமாக உடையவர். அவர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலே தமிழ்ப் பாடத்திற்குப் பொறுப்பாக இருந்த கட்டத்திலே, அங்கு பயின்றவர்கள் தாம் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் 'இலக்கியச்சோலை' பொ.கிருஷ்ணபிள்ளையும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை 1929 இலே திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே அமர்ந்ததை அடுத்து, வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையின் இலக்கியம் பார்வைக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. பாடத்திட்டம் எவ்வாறு இருப்பினும் அவர் இலக்கியச் சுவை ஏற்படுத்தக்கூடிய பாடல்களைத் தெரிந்து ஆரம்பத்திற் சில மாதங்களுக்கு மாணாக்கரைப் பக்குவப்படுத்துவதையே பயிற்சியாகக் கொண்டிருந்தவர் என்பர். இரசிகமணி கனக.செந்திநாதன் (மூன்றாவது கண், 1959, பக்.29) பண்டிதமணியவர்களின் இலக்கியவழி, பாரதநவமணிகள் முதலாயின இலக்கிய நயப்பினைச் சிறப்பாகக் கொண்ட தொகுப்புகள்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை மட்டுமல்லாது ஏனைய ஆசிரிய கலாசாலைகளிலும் இலக்கிய நயப்பு முறை சிறப்பாக வற்புறுத்தப்பட்டுள்ளது. பொ.கிருஷ்ணபிள்ளையின் 'இலக்கியச்சோலை'யும் கா.பொ.இரத்தினத்தின் 'இலக்கிய இன்பம்' முதலான கட்டுரைகளுக்கு சான்றாவன. இக்கலாசாலைகள் உருவாக்கிய ஆசிரியர்களே குடாநாட்டிலும் அப்பாலும் இலக்கியக் கல்விக்குப் பொறுப்பாக இருந்தனர்.

முகாந்திரம் தி.சதாசிவஐயர், கே.எஸ்.அருணந்தி, அ.வி.மயில்வாகனம் போன்ற கல்வித்துறை அதிகாரிகள் சிலரும் நயப்பினை -ரசனையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியக் கல்விக்கு ஆதரவு நல்கினர். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க வெள்ளிவிழா மலரில் (1950) அருணந்தி எழுதியுள்ள ''இலக்கியச் சுவை'' எனும் கட்டுரை ஈழத்திலே ரசனை முறைத் திறனாய்வுக்கும் கல்வித்துறை அதிகாரிகளுக்கும் இருந்த குறிப்பிடத்தக்க பிணைப்பினைத் தெளிவாக்கும். சோமசுந்தரப்புலவர் பிரபல்யம் அடைவதற்கு இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் முக்கிய காரணகர்த்தாக்கள் என்று கூறுவதிற் பிழையில்லை. கனக.செந்திநாதனின் கட்டுரைகளிற் பெரும்பாலானவை இலக்கிய நயப்பினால் எழுந்தவை.

கடந்த முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் நவீன இலக்கியங்கள் பற்றிய கருத்துப் பரிமாறல்கள் எழுத்தாளரிடம் சிறப்பிடம் பெற்ற போது, இலக்கியக் கல்வி புதிய கட்டத்தினை அடைந்தது. புதிய இலக்கிய வகைகள் புதிய பரிமாணங்களின் தேவையை வற்புறுத்திய போது இலக்கிய கல்வியிலே புதிய அளவுகோல்கள் வேண்டப்பட்டன. படைப்பாளிகள் தம்மாக்கங்களின் தன்மைகளைப் பற்றிய வாதப்பிரதிவாதங்களிலும் சர்ச்சைகளிலும் கலந்து கொண்டு அவற்றின் அமைப்புக்கு உதவினர். தமிழ்நாட்டிலே மணிக்கொடி, கலாமோகினி, கிராமஊழியன் முதலாயினவும் ஈழத்திலே ஈழகேசரி, மறுமலர்ச்சி முதலாயினவும் அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. இவற்றின் பயனாக இலக்கியக் கல்வியிலே விமரிசன நோக்கு முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

ஈழத்திலே இப்புதிய பார்வையின் முன்னோடிகளாக சோ.சிவபாதசுந்தரம், சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன் என்போரைக் கூறல் மரபு. சோ.சிவபாதசுந்தரம் ஈழகேசரியில் சமகால ஆக்கங்களைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினார். சி.வைத்திலிங்கத்தின் ஈழகேசரி விமரிசனங்கள் பலசர்ச்சைகளுக்கு இட்டுச் சென்றன. இலங்கையர்கோன் தேசிய இலக்கிய கோஷத்தினை முதலிலே மறு மலர்ச்சிக் கட்டுரையொன்றிலே முன்வைத்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகம் இக்காலகட்டத்தை ஒட்டி இலக்கிய விமரிசனத்திற்குத் தமிழ்க்கல்வியிலே முக்கியத்துவம் கொடுப்பதை நாம் காணலாம். இலக்கியவரலாறு பாடவிதானத்திலே சிறப்பிடம் பெறத் தொடங்கியபோது இதற்குரிய சூழல் உருவாகிவிட்டது. இலக்கியத்தினை முழுமையாக எடுத்துக் காட்டி அம்முழுமையின் செல்நெறிகளையும் பாங்குகளையும் உணர்த்த வேண்டிய இன்றியமையாமை இலக்கிய வரலாற்றிற்குண்டு. விமரிசனத்திற்கும் இலக்கியத்தை முழுமையாக நோக்கும் பண்பு அவசியமாகும். விமரிசனத்திற் காணப்பட்ட குறையைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆங்கில இலக்கிய விமர்சனங்கள் மூலம் நிறைவுசெய்ய முற்பட்டனர்.

தமிழ் நாட்டவர் விமரிசனம் என்ற பேரிலே தெளிவற்ற முறையிலே ஆங்கில நூல்களைத் தழுவி வெளியீடுகள் செய்து கொண்டிருந்த போது, ஐ.ஏ.றிசட்ஸ் அவர்களின் இலக்கிய விமரிசனக் கோட்பாடுகளுக்கு இயைபுத் தம் விரிவுரைகளை அமைத்து மாணாக்கரின் இலக்கியக் கண்ணோட்டத்தைச் செம்மைப்படுத்தியவர் பேராசிரியர் வி.செல்வநாயகம்; அவருடைய பாட்டும், ஓசையும், கடல், கடலோசை, கண்ணுற்றான் வாலி, வழக்குஞ் செய்யுளும், உவமையும், உருவகமும் முதலாம் கட்டுரைகள் நூலுருவம் பெறவேண்டும். செல்வநாயகம் காலம் முதலாகப் பல்கலைக்கழகத்திலே தமிழ் பயின்றோர் இலக்கியத்தைப் புதிய பார்வையிலே அணுகினர். அவர்கள் மூலம் புதிய அணுகுமுறை கல்லூரிகளுக்கும் பயிற்சிக் கலாசாலைகளுக்கும் சென்றது.

எழுத்தாளரும் பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் நயப்புமுறை முக்கியத்துவத்தை இழக்கவும் விமரிசன நோக்குச் செல்வாக்கு அடையவும் காரணமாயிருந்தனர். எஸ்.பொன்னுத்துரை, சில்லையூர் செல்வராசன், அ.ந.கந்தசாமி, இ.முருகையன், காவலூர் ராசதுரை முதலியோர் எழுத்தாளரிடையே இக்காலகட்டத்திலே குறிப்பிடத்தக்க விமரிசன நோக்குடையவர்களாகப் பேரெடுத்தனர். ம.தலையசிங்கம், ஏ.ஜே.கனகரத்தினம், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி முதலியோர் பல்கலைக்கழக வட்டத்தினரிலே விமர்சகர் என்ற பேரெடுத்தவர். ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் ஆக்க இலக்கியத்திலே இவர்களுடைய செல்வாக்கினைக் குறைத்து மதிப்பிடல் சாலாது.

ஆயினும் இவர்களுடைய விமரிசனங்கள் யாவும் காய்தல் உவத்தல் இன்றி அமைந்திருந்தனவோ என்பதிலே கருத்தொற்றுமை இல்லை. இவர்களை அடுத்த பரம்பரையினர் இன்று இலக்கியத் திறனாய்விலே ஈடுபட்டுள்ளனர். முன்னவரைப் பாதித்த சக்திகள் பல இவர்கள் மீது தம் செல்வாக்கினைச் செலுத்தாத நிலையினை அவதானிக்க முடிகின்றது. இந்நிலைமை வரவேற்கத்தக்கது; வளஞ்சேர்க்கக் கூடியது.

இலக்கிய நயப்பின் இடத்தை இலக்கிய விமரிசனம் எடுத்துக் கொண்டது ஈழத்து இலக்கியத்திற்கு நன்மையாக முடிந்ததா அல்லது தீமையாக முடிந்ததா என்பது சிந்தனைக்குரியது. இலக்கிய விமரிசனத்தை அறுவை வைத்தியமாக நினைத்துப் பயன்படுத்தாது செயற்படின் இலக்கியம் வளம்பெற வாய்ப்புண்டு.

கலாகீர்த்தி, டாக்டர்,

பொன். பூலோகசிங்கம்



# அன்னையோடு எல்லாம் போகும்



அன்னை எனும் தெய்வக்
கடல் எனைபிரிந்ததில்
துயரம் தாங்காது- நெஞ்சம்
விழித்து பாடும் பாடலை
எனை இவ்வுலகில் பாடவைத்தது யாரையா?

அன்னை எனும் பாச- கடலை
பிரியேன் எனும்கர்வத்துடன்
நிமிர்ந்திருந்தேன் பிரிந்தாள்
நானின்று உலகையிழந்தவன் போலானேன்
அன்னையே -உன்னோடு பாசம் போனதே!

தாயினால் பிறந்தேன் -இன்று
தாயின்றி தவிக்கிறேன் -பணிவு
என்ற விளக்கத்தை புரியவைத்தாள்
இன்று என் பணியேயறியாது விழிக்கின்றேன்
என்னையே உன்னோடு பணிவுபோனதே.

சாந்தி சாந்தி என நிம்மதி
அடைந்திருந்தேன் குழந்தைபருவத்தில்
இன்று வளர்ந்தேன் என்னிடமிருந்த
அமைதி நீயின்றி புயலானதே
அன்னையே உன்னோடு என் நிம்மதி போனதே.

நெய்மோர்சேர்த்து குழைப்பாள்
எனை அணைத்து அன்பு வெள்ளத்தில் ஆழ்த்துவாய்
அன்போடு உணவை தருவாய் -இன்று
உணவிருந்தும் உருகுகின்றேன் -உனக்காக
அன்னையே உன்னோடு அருஞ்சுவையும் போனதே

தத்திதத்தி தவிழ்ந்து வந்தேன்
எனை கையோடேந்தி -அறிவு
புகட்டி இன்று தத்திதத்தி
வர்ாத ஏக்கத்தால் எனை -பிரிந்தாயே
அன்னையே உன்னோடு அறிவு போனதே.

நீ வருவாயா -என்
துயர்நீக்கி அமைதிதர -நீ
வருவாயா அன்னையே -உன்
மடியில் முகம் புதைத்து -அழ
நீ வருவாயா -அன்னையே
உன்னோடு எல்லாம் போனதே

சி.தினேஷ்
வர்த்தக மாணவன்
98 A/L

*With Best Compliments*

*From*



# BEEMA

**Dealers in Fresh Vegetables & Fruits**

**WHOLESALE & RETAIL**
**NO. 9, SUPER MARKET,**
**KOLLUPITIYA, COLOMBO - 3**

**TEL : 323130**

*With Best Compliments*

*From*



# ASBESTOS CEMENT INDUSTRIES LIMITED.

**HEAD OFFICE :**
**P.O. BOX 1361,**
**175, SRI SUMANATISSA MW,**
**COLOMBO 12.**


**TEL : 435115, 448145, 437414**
**TLX : 21630 MASCON CE,**
**FAX : 449537**

**FACTORY :**
**68, KATUKURUNDUWATTA,**
**OFF ATTIDIYA ROAD,**
**RATMALANA.**

**TEL : 714511, 738512**

*With Best Compliments*

*From*



# LINGA OFFICE APPLIANCES

**Type Writers**
**Sales - Service - Repairs**
**We Under Take**
**English - Tamil - Typing**
**Stencils Cutting**

**NO. 253 A/9, GEORGE R DE SILVA MAWATHA,**
**(MAIN ROAD)**
**KOTAHENA, COLOMBO-13.**
**PHONE : 336024.**

*With Best Compliments*

*From*

# ARASAN PRINTERS

**OFFSET & LETTERPRESS PRINTERS**

**AGENTS FOR SHEETFED & WEBFED OFFSET PRINTING MACHINCES**

**30, HYDE PARK CORNER**
**COLOMBO 2**

**TEL : 326482, 422393** **FAX : 422393**

## உலகை இணைக்கும்

# இன்டர்நெட்

இன்று உலகளாவிய ரீதியில் சந்து பொந்து எங்கும் சாதி சனம் பாராமல் எல்லோர் வாய்களிலும், காதுகளிலும் தவழும் ஓர் சொல். இதனது தூய தமிழ் பெயர்ப்பு சர்வதேச மின்னணு வலைப்பின்னல் என்பதேயாகும்.

இன்டர்நெட் என்பது பொதுவாக கம்பியூட்டர்கள் ஒன்றொடொன்று தொடர்பாடல் செய்ய கூடிய விதத்தில் அவற்றுக்கிடையே திறந்த இணைப்பொன்றை ஏற்படுத்துவதனையே குறிக்கின்றது. இவ்விணைப்பு, அவ்விணைப்பு நிகழும் இடைத்தூரத்தின் அடிப்படையில் இருவகைப்படும்.

ஓர் சிறிய பிரதேசத்தினுள்ளோ அல்லது ஓர் கட்டிடத்தினுள்ளோ ஒரு கம்பியூட்டர்கள் பிணைக்கப்பட்டிருப்பின் அஃது உள்ளக வலைப்பிணைப்பு **(Local area Network)** என்றும், இரு மாநிலங்களிடையேயோ அல்லது இரு நாடுகளிடையேயோ இரு கம்பியூட்டர்கள் பிணைக்கபட்டிருப்பின் அஃது தொலைதூர வலைப்பிணைப்பு **(wide Area Network)** எனவும் அழைக்கப்படும். இவ்வாறான வலைப்பிணைப்புகளின் பிணைப்பே **(Network of Network)** இன்டர்நெட் என்பதே மிகப் பொருத்தமான தாகும். இந்த இன்டர்நெட்டில் ஒருவர் உறுப்பினர் ஆகவேண்டுமெனில் அவரது நாட்டின் கட்டுப்பாட்டின் கீழோ, அல்லது ஓர் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழோ அவர் கீழ்ப்படிய வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. தற்போது தொலைபேசி எவ்வாறு தவிர்க்க முடியாததாக உள்ளதோ அதேபோல் நாளை இன்டர்நெட்டும் தவிர்க்க முடியாததாக மாறும் என்பதில் ஐயமில்லை.

இந்த இன்டர்நெட் மூலம் கிடைக்கப் பெறும் பயன்பாடுகளை பார்ப்போமானால் முதலாவதாக கூறக்கூடியது இலத்திரனியல் தபால் முறை **(E-Mail)** ஆகும். இதன் மூலம் ஓர் கம்யூட்டரில் இருந்து உலகின் எந்த மூலையிலும் உள்ள (இன்டர் நெட் இணைப்புள்ள) எந்த கம்பியூட்டருடனும் தொடர்பு கொண்டு செய்திகள் பரிமாறிக் கொள்ளலாம். இதன் மூலம் எழுத்துக்கள் மாத்திரமன்றி படங்களையும் அனுப்பலாம். இதற்கான செலவு தொலைபன்னித்தந்தி செலவை விட சொற்பமாக இருக்கும். அத்துடன் இது நேரத்தையும் அதிகபட்சமாக மிச்சப்படுத்துகிறது. இன்டர்நெட்டை உபயோகிக்கும் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வோர் முகவரி உண்டு. ஒருவரது முகவரி தெரியுமிடத்து அவருக்கு அனுப்பவேண்டிய செய்திகளை **Test** என்ற கோப்பில் பதிவு செய்த பின்னர் முகவரி **test** என்ற ஆணை கொடுத்தால் இன்டநெட்மூலம் அச்செய்தி குறிப்பிட்ட நபரைச் சென்றடையும்.

இன்டர்நெட்டின் அடுத்தபயன்பாடு அதனது **World Wide Web (WWW)** எனும் சேவைமூலம் உலகில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் நூல்கள் முதலியவற்றிலிருந்து எமக்கு தேவையான தகவல்களையும் செய்திகளையும் தேடிப் பெறமுடியும். ஏதேனும் ஓர் தகவல் தேவைப்பட்டால் இச்சேவைமூலம் அத்தகவலை பெற்று வீட்டிலிருந்தவாறே எம் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

இன்டர் நெட்டின் இன்னுமோர் பயன்பாடு **Telenet** என்றழைக்கப்படும் தொலைவலைப்பிணைப்பு எனும் சேவைமூலம் இன்டர்நெட் வசதியுள்ள இன்னுமோர் கம்பியூட்டரை இயக்குதல் உதாரணமாக பேராதனை பல்கலைக்கழகத்திலுள்ள கணிதவியல் மாணவர் ஒருவர் ஒரு கணக்கு செய்வதற்கு அவரிடம் உள்ள கம்பியூட்டர் உபயோகமற்றது



என்ற நிலையில் அவர் இன்டர்நெட் தொடர்பாடல் உள்ளவராக இருக்கும் பட்சத்தில் அக்கணக்கு செய்யத்தகுந்த அதிநவீனமான கம்பியூட்டரை பேராதனையில் இருந்து கொண்டே இயக்கமுடியும். இந்த வசதிமூலம் இலங்கை போன்ற அடிப்படை வசதி மட்டும் உடைய நாட்டில் உள்ள ஓர் மாணவர் தனது துறையில் மேன்மேலும் அறிவை வளர்க்கும் பொருட்டு வெளிநாடுகளிற்கு சென்று கல்விகற்க வேண்டிய அவசியம் இல்லை. இதனால் வீண் அலைச்சல் வீண் செலவு போன்ற அசௌகரியங்களை தவிர்த்து கொள்ள முடியும்.



மற்றும் பலநாட்டவர்களிடையே ஓர் தொடர்பு ஏற்படும். இதனால் இனிவரும் சமுதாயம் புரிந்துணர்வு மிக்கதாக அமையவழியுண்டு.

இத்தனை நன்மைசெய்யும் இன்டர்நெட்டால் தொல்லையும் இல்லாமல் இல்லை. நாகரீகமும் தொழிலும் வளர்ந்து கொண்டே போக சில்மிஷங்களும் வளர்ந்து கொண்டே போகின்றது. ''கண்டிப்பாக (!?) வயது வந்தவர்களுக்கு மட்டும்'' ''வயது வந்தோருக்கு ஏற்றது'' ''சிறுவருக்கு உகந்ததல்ல'' போன்ற வசனங்களுடன் தொடங்கப்படும். வீடியோ படங்கள், அபச்சார புத்தகங்கள் போன்றவற்றிற்கு இன்டர் நெட்டில் கண்டிப்பு இல்லாமல் போய்விடவே இளம் சமுதாயம் இன்டர் நெட்டை எதற்கோ பயன்படுத்த தொடங்கி விட்டார்கள். 'உலககாதல்' எனும் இன்டர்நெட் தொடர்பை தொடங்கி உலகம் முழுவதும் இருந்து பெண்கள் தமக்காக ஜோடி தேடும் வேட்டை ஆரம்பித்திருக்கிறார்கள் இன்னும் எத்தனை எத்தனையோ!!

இன்டர் நெட்டின் வலையில் சிக்கி இளம் சமுதாயம் கெட்டுப்போவதை தடுக்க என்ன செய்யலாம் என்று விஞ்ஞானிகள் முடியை பிய்த்ததன் பயனாக நெட்நன்னி **(Net Nanny)** எனும் **software** ஐ கண்டுபிடித்தார்கள்.

வீட்டில் பேரப்பிள்ளைகள் குழப்படி செய்தால் நாசுக்காக அதட்டி திருத்துவது பாட்டிதான். அதனால்தான் இந்த **software** இற்கு நெட்நன்னி என்று பெயர்வைத்திருக்கிறார்கள்.

இந்த **Soft ware** ஐ உபயோகிக்கும் பட்சத்தில் இளம் சமுதாயத்தினரை துணிந்து வீட்டில் விட்டுவிட்டு போகலாம். ''சில்மிஷக்'' காட்சிகளை யாராவது தேடுவது தெரிந்தால் கூட இருக்கவே இருக்கிறாள் பாட்டி - சென்சார் செய்யும் பாட்டி!

இளம் சந்ததிக்கு இதுமட்டும் தானா?

''என் வாழ்க்கையை எவ்வாறு முடிவு செய்வது?'' ''வேலை தேடுவது எப்படி?'' போன்ற தகவல்களும் உள்ளன,

யார் எப்படி அணுகுகிறார்கள் என்பதுதான் முக்கியம். இன்டர்நெட் என்பது ஏராளமாக திரவியம் கொட்டிக்கிடக்கும் கடல்போன்றது அதிலிருந்து முத்து எடுப்பதா? வெறும் கிளிஞ்சல் எடுப்பதா? என்பது இளம் சமுதாயத்தினரினை பொறுத்ததே!

**யோ.கௌரிசங்கர்**

**கணிதப்பிரிவு**

**உயர்தரம் 97**



பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட மேற்பிரிவிற்கான
கவிதை போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை



# மனம் விரும்புதே

சமாதானம் எனும் பூவை
பறித்தெடுக்க மனம் விரும்புதே
சாத்திரங்கள் பல கற்க
மனம் விரும்புதே
சந்தடியில்லாமல் சங்கீதம்
கற்பதற்கும் மனம் விரும்புதே
சலனங்கள் நீங்கி சந்தோஷமாய்
வாழ்வதற்கும் மனம் விரும்புதே.

தத்தித் தளிர் பயின்ற குழந்தையாக
மாறுவதற்கும் மனம் விரும்புதே
தட்டிகேட்டு உரிமைதனை
பெறுவதற்கும் மனம் விரும்புதே
தங்கத் தமிழை தொட்டிலாக்கி
நானுறங்கு மனம் விரும்புதே
தாயின் மடியில் தலைவைத்து
படுப்பதற்கும் மனம் விரும்புதே.

பள்ளிப்படிப்பில் கரையேற
மனம்பிரும்புதே
பட்டம் பெற்று பண்பாளனாக
மாறுவதற்கும் மனம் விரும்புதே
பாலராய் ஓடியாடி விளையாடவும்
மனம் விரும்புதே
பாரினில் பெரும்புகழை
பெறுவதற்கும் மனம்விரும்புதே

கன்னியவள் கன்னத்தில் கன்னம்வைக்க
மனம்விரும்புதே
காளை நானும் காதலிக்க
மனம்விரும்புதே
கல்வி எனும் கன்னியை
காதலிக்க மனம்விரும்புதே
தமிழன்னை கன்னத்தில் கன்னம்வைக்க
மனம்விரும்புதே

மங்காப் புகழ் கொண்டு
வாழ்ந்திடவும்
மனம்விரும்புதே
மங்கை உன்னை மணப்பதற்கும்
மனம் விரும்புதே - தமிழ்
மங்கை உன்னை மணப்பதற்கும்
மனம் விரும்புதே.
மனிதர்களை மனிதர்களாய்ப்
பார்ப்பதற்கும் மனம்விரும்புதே

நாமிருக்கும் நாடு நமதென்பதை
அறிவதற்கும் மனம்விரும்புதே
நல்லவராய் வாழ்வதற்கும்
மனம் விரும்புதே.
நாசகார சக்திகளின் நாவறுக்க
மனம் விரும்புதே
நாமெல்லாம் இலங்கையராய்
வாழ்வதற்கும் மனம்விரும்புதே

வளங்களெல்லாம் வளமாய்
பயன்படுத்த மனம்விரும்புதே
வற்றாத ஜீவநதியாய் வாழ்வதற்கும்
மனம்விரும்புதே.
வானவில்லை வளைத்தெடுத்து
ஆடைகட்ட மனம்விரும்புதே
வண்ணம்கொண்ட மலர்பறிக்க
மனம்விரும்புதே.

அழிவின் சின்னங்களாய் நாம்
ஆகிவிட்டபோது
அழியாப் புகழ்கொண்டு -நாம்
அனைவரும் வாழ்வதற்கும்
மனம்விரும்புதே
அச்சமின்றி அச்சமின்றி வாழ்வதற்கும்
மனம் விரும்புதே
அழியாப்புகழ்கொண்டு வாழ
மனம் விரும்புதே -ஆனால்

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை
நடப்பதை நாமும் நினைத்ததில்லை
நினைவினிலோ பல ஏக்கம்.
நித்தம் நித்தம் பல துக்கம்.
அடையாள அட்டை இன்றேல்
அடக்கம் செய்யப்படும்
நாம் அனைவரும் தமிழரே.
தமிழ் அன்னையே உன் மக்களின்
நிலையைப் பாராயோ - எம்மவரின்
துயர் தீர்க்க நீ வாராயோ,
ஆம் நீ வரமாட்டாய்தான்
ஏனெனில் நீ வந்தால்
உன்னிடமும் கேட்பார்கள்
அடையாள அட்டையை
சமாதானப் புறாவே
சந்தடியின்றி நாம்வாழ
வழிசெய்ய வாராயோ.
வங்கக் கடல் தாண்டிய -நம்
தமிழன் சிங்களத்தீவினில்
சிறைப்பட்டிருப்பதை காண ஓடிவாராயோ
நீ வரமாட்டாய்தான்
ஏனெனில் நீ வந்தால்
உன்னையும் சிறைப்பிடித்துவிடுவார்கள்
ஆகையால் நீயும் வரமாட்டாய்தான்.
ஆண்டவனே!

உன்னையன்றி எமக்கில்லை வேறுதுறை
நீ தருவாய் எமக்கெல்லாம் ஆறுதலை.
ஆண்டவனே அல்லல்படும் தமிழர்
நம் அல்லல் தீர்க்க ஓடிவாராயோ
நீ வரமாட்டாய் தான்

ஏனெனில் நீவந்தால்
உன்னை
விசாரிக்கவும் ''கமிஷன்கள்''
இங்கு நியமிக்கப்படும்.
நித்தம் நித்தம் செத்துப்பிழைக்க
பயந்து நீயும் இங்கு வரமாட்டாய்தான்.

எத்தனையோ ஏக்கங்களை
எத்தனையோ ஆசைகளை
எத்தனையோ கனவுகளை
எத்தனையோ நினைவுகளை
மனம் விரும்புதே
ஆனால்
நினைப்பதெல்லாம் நடப்பதில்லை
நடப்பதெல்லாம் நாம் நினைத்ததில்லை.
தரணியாண்ட தமிழர் -நம்
தரணியாள என் மனம்விரும்புதே
ஆனால் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை.
நடப்பதெல்லாம் நாம் நினைத்ததில்லை.
ஆகவே
ஏக்கங்களை எண்ணிப்பார்ப்பதுமில்லை
கனவுகளை காண்பதுமில்லை
ஆசைகளை வளர்ப்பதுமில்லை
நினைவுகளை சொல்வதுமில்லை
-ஏனெனில்
என்மனம் என்றோ
மரத்தும்போய்விட்டது.

**R.சசிதரன்**
**வர்த்தகபிரிவு**
**ஆண்டு 13 D**

*With Best Compliments*

*From*

# Giri Trading Agency

**Book Sellers publishers - Audio, Video, Cassettes dealers**

**10, KAPALEESWARAN SANNADHI STREET,**
**MYLAPORE**
**CHENNAI - 600 004**

**PHONE : 494 0376, 494 2630**

*With Best Compliments*

*From*

# S.V.M. (PVT) LTD

**NO. 122, DAM STREET,**
**COLOMBO - 12**

**PHONE : 449512, 440501**

*With Best Compliments*

*From*

# ELITE TEXTILE

**WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILE**

**NO. 60, 3RD CROSS STREET,**
**COLOMBO - 11.**

**TEL : 323080, 332823**

*With Best Compliments*

*From*

# E.G. ADAMALY & CO., LTD.

**ஈ. ஜி. ஆதமலி அன் கோ. லிமிடெட்**

**NO. 136, 4TH CROSS STREET,**
**COLOMBO - 11.**

**TELEPHONE : 324170, 324179**

*With Best Compliments*

*From*

**LANKA HARDWARE STORES**

**IMPORTERS, GENERAL HARDWARE MERCHANT AND GENERAL SUPPLIERS**

**SPECIALISTS IN : ALL TYPE OF BOLTS & NUTS**

**150, BANDARANAYAKE MAWATHA,**
**COLOMBO - 12.**
**TEL : 447668**

*With Best Compliments*

*From*

**SOLOMON TRADING COMPANY**

**IMPORTERS, GENERAL HARDWARE MERCHANT**

**NO. 461, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**
**TEL : 431144**

*With Best Compliments*

*From*

MERCANTILE ENGN-TOOLS (PVT) LTD.

**332, SRI SANGARAJA MAWATHA,**
**COLOMBO - 10, SRI LANKA.**
**TEL : 433960, 430785 FAX : 440304**

MERCANTILE HARDWARE STORES

**425, OLD MOOR STREET,**
**COLOMBO - 12, SRI LANKA.**
**TEL : 327624, 448863 FAX : 437016**

MERCANTILE EXPORT (PVT) LTD.

MERCANTILE MARKETING (PVT) LTD.

**50, SANGAMITTA MAWATHA,**
**COLOMBO - 13, SRI LANKA.**
**TEL : 33095, 335790-9 (10 LINES) FAX : 331455**
**RES : 8A, FRANKFORTE PLACE,**
**COLOMBO - 4, SRI LANKA. TEL : 592809**

*With Best Compliments*

*From*

**Havelock Auto Engineering Works**

**Specialist in Inkering, Painting, Repairs of all Types of Motor Vehicles Insurance Claims Auto Air - Conditioning, Repairs of Electrical Appliances, and Interior and Exterior car Cleaning Services**

**156, MAYA AVENUE,**
**COLOMBO - 6**
**TEL : 590983**

*With Best Compliments*

*From*

# Star Indurtries (Pvt) Ltd.

**With Germicides & Optical Brightness**

**Washing Power**

NO. 287, GALLE ROAD,
COLOMBO - 4

TEL : 591041 & 597549
FAX : 502439


*With Best Compliments*

*From*



**A WELL WISHER**

# TAMIL LITERARY ASSOCIATION OFFICE BEARERS - 1997



**Seated and L-R :** Mr. V. Sivananthanayagam (Asst. Principal), S. Sutharshan (Joint Secretary), P. Thiruvarangan (Joint Secretary), Mr. S. H. Kumarasinghe (President), G.S.Sethukavalar (Student Chairman), I.M. Irshad (Asst. Student Chairman), Mr. R. Rajasooriyar (Vice President), Mr. S. Ratnasabapathy (Senior Vice President)

**Standing (1st Row) L-R :** T.I. Wafee, M.B. Sameem, H. Vignaharan (Treasurer), M. Preshanthan, R. Ravindran, M. Prathaban, B. Yamunaharan, S. Sendooran.

**Standing (2nd Row) L-R :** E. Rajanesh, I.S. Izmy, S. Kishokumar.

# ஊனங்கள்

சில்லென்று வீசிய தென்றல்காற்று, அவனை மட்டும் சுட்டது.

சில்லென்ற ஓசையில் இலைகளின் சலசலப்பு கலந்தது. ஆனால் அவனுக்கு மட்டும் அது கசந்தது. ஆளில்லா அத்தோப்பிலே அவனோடு பேசிக் கொண்டிருந்தன அந்த நாணற்புற்கள். ஆனால் அவன் பேசவில்லை. அவன் கண்கள் பேசின. நெடுந்து கறுத்துப் போன மேனியின்மேலே ஓர் கிழிந்துபோன சட்டை, கந்தையானாலும் கசக்கிக்கட்டு என்பதற்கிணங்க வெளுத்திருந்த அந்த சட்டை அவன் படித்தவன் என்பதைச் சுட்டிக் காட்டியது. கசங்கிய மேற்சட்டையின் கீழே அளவில்லாத காற்சட்டை. முகத்திலே வெறுப்பு, காலிலே கிழிந்த செருப்பு, வறண்டு போன அவன் கன்னங்களை ஈரப்படுத்தியது அவன் கண்கள். அன்புள்ள உறவிருக்க அழுகை வந்தால் கண்ணீரைத் துடைக்க ஆயிரம் கைகள் ஓடிவரும். ஆனால் அவனுக்கோ இரண்டிலும் ஒன்றுதான் மிஞ்சியிருந்தது. ஒரு கைதான் மிஞ்சியிருந்தாலும் நம்பிக்கை எனும் கைகள் மிதமிஞ்சியிருந்தன என்பது உழைத்து உழைத்து வலித்திருந்த அவன் கால்கள் உணர்த்தின.

அவன் பெயர் மணி. முழுப்பெயர் சுப்பிரமணி. துள்ளும் வயது பதினாறு. இன்று துவண்டு கிடக்கிறான். மென்மை கலந்த அமைதி அவன் மனதில் மறைந்திருந்த ஓவியங்களை மீண்டுமொருமுறை தட்டிப்பார்க்கத் தொடங்கியது.

அந்தக் காலம் அவன் வாழ்வில் பொற்காலம். அப்போ அவனை சீராட்டித் தாலாட்டி வளர்த்த தாய், பாசத்தோடு பண்பை ஊட்டிக் கொடுத்த தந்தை, பரிவைக் கொஞ்சி எடுக்க தங்கை என கோலாகலமான குடும்பம், குறையில்லா செல்வம், நிறையவே இன்பம், வீடு, வாசல், வாகனம் என சகல வசதிகளும் எண்ணிலடங்காதன. அவன் தந்தை சண்முகபிள்ளை எதிரே உள்ள ''சண்முகா'' விடுதிகளின் அதிபர். அத்துடன் கம்பாசபைத் துணைத் தலைவர். அடக்கம், அன்பு, அமைதி என்பவற்றின் அதிபதி அவர். அவரைத் தேடி வாசல் தாண்டிவருவோர் ஒருநாளும் மனக்குறையுடன் வெளியேறியது கிடையாது. கிள்ளிக் கொடுத்தாலும் கிடாரத்தில் கொடுப்பார். அள்ளிக் கொடுத்தாலும் அளந்து கொடுப்பார். சமூக நலத்திற்காக நன்கொடைகளை அளித்தார். அவர் கொடுத்த பல கடன்கள் காலத்தைத்தான் கடத்தின. திரும்பி வரவேயில்லை. அதற்காக அவர் ஏங்கியதுமில்லை. கணவனுக்கேற்ப மனைவி. சிறந்த பிள்ளைகளுக்கேற்ற தாய், சிரிப்பிலே சிந்தையைக் குளிரவைக்கும், தங்கை, இவர்களல்லவா மணியின் இதயங்கள். உறவுகளும், நட்புகளும் கலந்து தித்தித்து வாழ்ந்த காலம். அதற்கு இறுதி அத்தியாயமாக வந்தது அந்த நாள்.

மக்களின் மனதிலே சஞ்சலம், பயம், அனைவரும் மூட்டை முடிச்சுகளோடு வன்னி மாவட்டம் நோக்கி இடம் பெயரத் தொடங்குகிறார்கள். எங்கும் ஒரே பரபரப்பு. காரணம் உள்நாட்டுப் பிரச்சனை. முன்னேறி வரும் படையினரின் தாக்குதலிலிருந்து தப்புவதற்கு மக்கள் இடம்பெயரத் தொடங்கிவிட்டனர். அப்போது மணிக்கு பதினான்கு வயது. காலை நேரம் ஆறுமணி. எழுந்து சென்று கிணற்றடியில் தன் காலைக்கடன்களை முடிக்க ஆயத்தமானான். அவனோடு அவன் தாய் உலர்ந்த உடுப்புகளை மடித்தவாறே கிணற்றோரம் நின்றிருந்தார். மணியின் தந்தை சண்முகபிள்ளை வீட்டினுள், தன் மகளுடன் செல்லம் கொஞ்சியவாறு சிரித்துக் கொண்டிருந்தார்.

திடீரென ஓர் சத்தம் சளீர்.... டுடும்.... பேரதிர்ச்சி. ஓர் விமானக் குண்டு தான் கண்ணான வீட்டின் மேலே விழுந்தது. தன் கண்ணெதிரே வீடு தரைமட்டமாகிறது. ''தடுக்க முடியவில்லை. என் தந்தையையும், தங்கையையும் காப்பாற்ற முடியவில்லை'' என்று எண்ணி கண்ணீர் ஒழுக நாவறண்டு அதிர்ச்சியிலே கிணற்றடியில் மணியும் தாயும் பார்த்தவாறே நிற்கின்றனர்.

மீண்டும் அதே ஓசை...... ஆம் அதோ ஒரு இரண்டு.....அது.....அது...... தம்மை நோக்கித்தான் வருகிறது என்பதை உணர அதிகநேரம் எடுக்கவில்லை. திடீரென தன்னை யாரோ தள்ளுவது

தெரிந்தது. தான் கிணற்றுக்குள் விழுவதும் உணர்ந்தது. அவ்வளவுதான் மணியின் ஞாபகம்.

''கண்விழித்துப் பார்த்த போது கையில்லை. வைத்தியசாலையில், கட்டிலில் தன்னந்தனியாக வீற்றிருந்தேன். தாய் தந்தை, பாசத் தங்கையை இழந்து தன்னந்தனியே வீற்றிருந்தேன். இப்போது நான் அநாதை. அன்று எம்மைத் தேடிவந்த உறவுகளும், நட்புகளும் இன்று என்னை எட்டியே பார்ப்பதில்லை. அள்ளி அள்ளி கொடுக்க சிரித்து சிரித்து வாங்கிய முகங்கள் இன்று வெறுப்போடு பார்த்தன. யாருமற்ற என்னை ஒரு சுமையாகக் கருதி ஒதுக்கிவிட்டன'' என்று மணியின் இதயவறை ஓசை எதிரொலித்தது.

கண்ணில் வழிந்த நீரை வலக்கையால் துடைத்தவாறே எழுந்தான் மணி. வானத்தைப் பார்த்தான். நேரம் மாலை ஐந்து மணி. வெறுத்துவிட்ட உறவுகளும், நட்புகளும் அவனுக்கு ஊனங்களாகவே தெரிந்தது.

மணியின் உடலில் இருந்த ஊனம், உள்ளத்தில் இருக்கவில்லை. மாறாக உறுதி இருந்தது. நிலையில்லாத செல்வங்களும், சொந்தங்களுமே அவனுக்கு ஊனங்களாக தெரிந்தது.

வயிறு பசித்தது. சட்டைப்பையை தடவிப்பார்த்தான். பதினொரு ரூபாய் ஐம்பது சதம். அன்றைய இரவிற்கு அவனது இராப்போசனக் காசு. அது அவனது உழைப்பால் பெறப்பட்டது. அதுதான் அவன் மனதிற்கு திருப்தியாக இருந்தது.

நடக்கத் தொடங்கினான். அவன் போகும் பாதையைப் பார்த்தவாறே அந்தச் சூரியன் மறையத் தொடங்கினான். ஆனால் மணியின் இதயத்தில் ஒரு சூரியன் உதிக்கத் தொடங்கினான் இருளைப் போக்க.

B. பிரசன்னா
ஆண்டு 12
உயிரியற் பிரிவு

- *மூடநம்பிக்கை பலவீன மனம் படைத்தோர் மதம்.*
- *சமூகம் குற்றங்களை தயார் செய்ய குற்றவாளி அதை செய்து முடிக்கிறான்.*
- *எழும் போது தாங்க வருகின்றவன் எல்லாம் விழும்போது தாங்க வருவதில்லை.*
- *வறுமை குற்றங்களின் தாய், முட்டாள்தனம் அதன் தந்தை*

# தமிழும் விமர்சன இலக்கியமும்

விமர்சன இலக்கியம் எனும் போது நவீன காலத்துள் எழுந்து ஓர் புது துறை என கருத்தில் கொள்ள முடிகிறது. சிறுகதை, நாவல், வசன நாடகம் முதலிய சில வடிவங்களையும் துறைகளும் போலவே விமர்சனமும் நமது மொழியிலே நவீனத்துவத்தின் வெளிப்பாடாக அமைந்து விட்ட ஓர் இலக்கியப்பிரிவு என்று கூறுதல் தவறாகாது.

விமர்சன இலக்கியத்தை ஏனைய நவீன துறைகளாம் சிறுகதை இலக்கியம், நாவலிலக்கியம், பிரயாண இலக்கியம் என்பவற்றோடு நோக்கும் போது மேற்கண்டவாறு கூறத் தோன்றுகிறது. ஆயினும் விமர்சன நோக்கில் இலக்கியத்திலே சிவனுடன் நக்கீரர் நிகழ்த்தியதாய்க் கூறப்படும் சம்பவத்தை விமர்சன நோக்கு எடுத்துக்காட்டாக பலர் குறிப்பிடுவதுண்டு.

இதுபோன்று பேராசிரியர் நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலியோர் காலத்தால் முந்திய நூல்களை சூழ்நிலைக்கேற்ப விமர்சன முயற்சிகளில் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் இலக்கண இலக்கிய உரையாசிரியர்களை பார்க்கிலும் சமய தத்துவ சாஸ்திர நூல்களுக்கு விளக்கங்களும் விரிவுரைகளும் எழுதியோரே விமர்சனக் குறிப்புகளை கூடுதலாக எழுதினார் எனலாம்.

எனவே இவ்வாறான இலக்கிய, தத்துவ விமர்சன முயற்சிகள் காணப்படினும் மொத்தத்தில் அவை சிறுபான்மையினவாகவே இருந்து காலப்போக்கில் அவை வலுவிழந்து போயின என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

அத்துடன் 19 ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் 20 ம் நூற்றாண்டு காலங்களிற் தோன்றிய இலக்கியங்கள் சமூக சமய நெறிப்பட்டதாகக் காணப்பட்டதால் அவை பெருந்தொகையினரை விமர்சிக்கத்தூண்டும் சமய சீர்திருத்த விமர்சனங்களாய் அமைந்தன. இதில் முக்கியமாக புத்திலக்கியம் இடம் பெற்றது.

மேலும் மரபு வழிவரும் அளவை கட்டளையிலிருந்து விடுபடுதல், பாசகர்கள், 'ஆய்வாளர்கள் ஆகியோர்களின் கவனத்தை ஈர்க்கவல்ல புதுமையான நூல்கள் ஆக்கப்படுதல், 'எதிர்கால வளர்ச்சி பற்றி உள்ளக்கிளர்ச்சியும் தன்னம்பிக்கை நிலவுதல்; இம்மூன்றும் நவீன விமர்சன இலக்கியம் தோன்றுவதற்குரிய முன்னீடுகள் என்று விமர்சன இலக்கிய வரலாற்றாசிரியர் கூறுவர். இதனை சற்று வேறுவிதமாக கூறுவோரும் உண்டு. ஆய்வறிவுமுறை மரபு எதிர்ப்பு, உணர்வு, புதிது புனையும் ஆற்றலும் ஆர்வமும்; இம்மூன்றும் நவீன விமர்சனத்துக்கு அடிப்படை முதல் தேவைகள் என்று கூறுவதும் சாலும். எனவே இவற்றை உள்ளடக்கியதாக அமையும் மூலபாடத்திறனாய்வு முன்னோடியான சீ.வை.தாமோதரம் பிள்ளையின் கலித்தொகை பதிப்புடையிலும் வேறு ஆக்கங்களிலும் அவற்றைக் காணமுடியும்.

இருந்தும் மிகச் சமீப வரையில் தமிழில் விமர்சன இலக்கியம் இரு துருவங்களில் இயங்கி வந்திருக்கின்றது. சுருங்கக் கூறின் அதீத பழமைவாதமும் அதீத புதுமையோகமும் நம்மவரின் விமர்சன நோக்கினைப் பாதித்துள்ளன எனலாம். பிராண விமர்சனத்திற்கு எடுத்துக்காட்டானவர்களாக அ.ச.ஞானசம்பந்தன், தி.செல்வகேசவராய் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இதனை ஒருவகையான பாண்டித்தியதிறனாய்வு எனக் கூறுவது பொருத்தமாகும். புதுவிமர்சகர்களாக கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று மோகத்துடன் விமர்சிப்பவர்களாக ராஜமையார் (கமலாம்பால் சரித்திரம்), க.நா.சுப்ரமணியன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அடிப்படையிலே இவர்கள் எதிராக இயங்கிவரினும் பெரிதும் ஒற்றுமையுடையவர்களே. உமாதிபதி சிவாசாரியார் ''சிவப்பிரகாசம்'' எனும் சாத்திர நூலிலே

''தொன்மையவா மெனு மெவையும்
நன்றாகா இன்று தோன்றிய நூலெனுமெவையும்
தீ தாகா''
எனும் எச்சரிக்கையை எண்ணிப் பார்க்காதவர்கள்.

கடந்த சில வருடங்களில் குறிப்பாகத் தமிழாசிரியரும் ஆராய்ச்சி மாணவர் சிலரும் மார்க்சியத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு விமர்சனத்துறையில் பேரூக்கத்துடன் உழைத்து வருதல் குறிப்பிட வேண்டிய தொன்றாகும். இவர்களின் உழைப்பு தமிழில் மார்க்சீயம் ஆழவேரூன்றுவதையும் விரிவடைவதையும் நிரூபிக்கின்றன. இவர்களது தாமரை, சிகரம், மலர், மனிதன் முதலான கட்டுரைகள் தமிழகச் சஞ்சிகைகளிலும் மரகதம், புதமையிலக்கியம் முதலிய இலங்கை ஏடுகளிலும் வெளிவந்தவை வெளிவருபவை.

தமிழகத்தில் சு.விஸ்வராசன், து.மூர்த்தி, பொன்னீலன் முதலியோரும் இலங்கையில் கே.சண்முகலிங்கம், என்.சண்முகரத்தினம், எம்.எ.நுஃமான், சி.மௌனகுரு, என். இளைய பத்மனாதன் முதலியோர் அண்மைக்காலத்தில் விமர்சனத்தில் ஆழமான பார்வையும் நுட்பமான திறன் முறைகளையும் புகுத்தியவராவர்.

பல காரணங்களினால் பாதிக்கப் பெற்று வலுவிழந்து கிடக்கும். நவீன விமர்சன இலக்கியம் முற்போக்கு இலக்கிய இயக்க அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டால் எழுத்தாளருக்கு மாத்திரமல்லாது இலக்கிய உலகிற்கே பயன்தரும் ஓர் ஆய்வறிவு துறையாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

விமர்சனம் என்பது உலகை விவரிப்பது மாத்திரமன்று அது உலகத்தை மாற்றியமைப்பதற்கு உழைக்கும் வர்க்கமும் தன்நேச சக்திகளும் ஓயாது பயன்படுத்தும் அறிவாயுதமாகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் விமர்சன இலக்கியம் ஆற்றலும் அழகும் பெற்றுத் திகழும்

எச்.எம்.மஹ்மூத் றாமி

ஆண்டு 13 sc -

*With Best Compliments*

*From*


# MASCONS LIMITED

**175, SRI SUMANATISSA MAWATHA.,**
**COLOMBO - 12.**

**PHONE : 325561-3**

*With Best Compliments*

*From*



# Ranee Jewels

ராணி ஜுவெல்ஸ்

**22KT GOLD JEWELLERY**

**118, SEA STREET,**
**COLOMBO - 11.**
**TELE : 325946**

*With Best Compliments*

*From*



# M/s Lanka Hardware

**Dealers in :**

**Hardware, Hand Tools, Paints, Roofing Sheets, Cement "Double Hill", Cement " Falcon", building & Materials, Estate Suppliers**

**NO. 19, BAZAAR STREET,**
**BADULLA.**

**PHONE: 055 2344**

*With Best Compliments*

*From*



# M/S New Arunahs Steel

**DEALERS IN :**
**HARDWARE, HAND TOOLS, ROBBIALAC PAINTS, CEMENT, PLYWOOD SHEETS, ROOFING SHEETS & ESTATE SUPPLIERS**

**84, MAIN STREET,**
**BANDARAWELA**

**PHONE : 057-2401**

# TAMIL LITERARY ASSOCIATION

## ORGANISING COMMITTEE - 97

G.S.SETHUKAVALAR
P.THIRUVARANGAN
S.SUTHARSHAN
H.VIGNAHARAN
I.M.IRSHAD
B.T.VASEEKARAN
T.I.WAFEE
I.S.IZMY
S.KISHOKUMAR
Y.JEGATHEESH
M.I.M.FAZMIL
E.RAJANEESH
M.B.SAMEEM
S.SASHIKANTH
M.PRESHANTHAN
S.SENDOORAN
H.M.M.ROOMY
M.PRATHABAN

B.YAMUNAHARAN
J.HARIHARAN MURALY
A.DINESH KUMAR
S.SENTHURAN
M.M.M.MUZMIR
N.VISVANATH
R.RAVINDRAN
C.SUBASHKARAN
A.RICKAZ
R.ANANDAN
K.RAVISHANKER
K.PRASHANTHAN
R.RATHISAN
L.GOPIKANTHAN
S.PRATHEEPAN
T.SARVANA
R.BRAMMAVINAYAGAN

*With Best Compliments*

*From*

ANITA
SUGANYA
DARANIE
NIRANJANI
THUSHITHA
ANUSHA
DIANNE
PREMILA
SUGANTHI
YVONNE
ANNE
JENITA
THUSHARA
REBECCA
AROLIN
ROZITA
LAKSHITHA
BRINDA
LIDWIN



ACCEPT YOUR FRIENDS AS THEY ARE,AND THEY'LL ACCEPT YOU ARE:IF YOU THINK FRIENDSHIP SHOULD BE PERFECT, LOOK AT YOURSELF SOMETIME IN THE MIRROR.ARE YOU PERFECT ? BY ACCEPTING WHAT IF, WE CAN ALL GROW TOGETHER TOWARD WHAT OUGHT TO BE.

**HFC**


**'98 COMMERCE BATCH**

ARSHAD
AZMIE
BAVAN
DINESH
GIRI
MAFAZ
JEEVAN
MIFLAR
PREM
PRESHANTHAN
RIZVI
MUZMIR
SADHISH
RUMY
KANNA
SAMEEM
SASHIKANTH
YAMUNA
SURESH
SASIDARAN
THINESH
JEGAN
VISU
ZIHAN

**RC**

**'98 COMMERCE BATCH**

# ORGANIZING COMMITTEE - 1997



**Seated (L-R)** : S. Kishokumar, I.S. Izmy, P. Thiruvarangan (Joint Secretary), I.M. Irshad (Asst. Student Chairman), G.S. Sethukavalar (Student Chairman), H. Vignaharan (Treasurer), S. Sutharshan (Joint Secretary), T.I. Wafee, B.T. Vaseekaran (Editor).

**Standing 1st Row (L-R)** : N. Neshanthanan, R. Dinesh, M. Malaravan, S. Karthick, S. Nimalsnan, S. Rajiv Prasanna, S. Sivajith, M.H.M. Fahim, S. Kirubananthan, P. Suntharakumar, V. Danujan.

**Standing 2nd Row (L-R)** : M. Preshanthan, M.M.M. Muzmir, J. Hariharan Muraly, S. Senthuran, C. Subashkaran, R. Anundan, A. Dineshkumar, K. Prashanthan, A.R. Rickaz, R. Rathisan, T. Sarvana.

**Standing 3rd Row (L-R)** : Y. Jegatheesh, M.B. Sameem, L. Gopikanthan, K. Ravishankar, S. Pratheepan.

**Standing 4th Row (L-R)** : M.I.M. Fazmil, S. Sendooran, E. Rajanesh, N. Viswanath, R. Ravindran, H.M.M. Roomy, S. Sashikanth, M. Prathaban, B. Yamunaharan.

**Absentee** : R. Brammavinayagan

*With Best Compliments*

*From*

# V. MANICKAM & BROTHER

**IMPORTERS, GENERAL MERCHANTS**
**& COMMISSION AGENTS**

**SUGAR** **RICE**

**34, 4TH CROSS STREET,**
**COLOMBO 11.**

**T'PHONE : 323408, 323986, 432347**

**FAX : 421972**

**TELEGRAMS : THAVAYOGA**

*With Best Compliments*

*From*

**Anoon Clearing & Forwarding Agency**

No. 33, Sri Sudarma Rama Mawatta
Thalangapatha, Wattala
Sri Lanka

77A-79A, Main Street,
Colombo 11
Sri Lanka.

Office : 448721, 422081

''கலைஞன்'' எனப்படுபவன் ''கலைஞன் அதேவேளை பண்பாளன்'' எனும் பெயரை பெறவேண்டும். என்று கூறும் திரு.ஏ.ரி.பொன்னுதுரை அவர்கள் ஈழத்தமிழரின் மிக முக்கிய படைப்பாளி.

இன்றைய தலைமுறையினர் கடந்த தலைமுறைகளில் ஈழத்தில் இடம்பெற்ற கலை, இலக்கிய முயற்சிகளை குறித்து அறிய உதவும் கலை காலப்பெட்டகமாக திகழும் அவர் தமிழ்நயத்திற்கென பிரத்யோகமாக அளித்த பேட்டியை பிரசுரிப்பதில் பெருமை அடைகிறோம்.

**கேள்வி 1:** நீங்கள் கலைத்துறையில் 'கலைப்பேரரசு' எனும் பட்டத்தை பெற்றிருக்கிறீர்கள். மூத்த நாடக கலைஞர்களுள் ஒருவராகவும் விளங்குகிறீர்கள். உங்களது கலைவாழ்வின் ஆரம்பம் பற்றியும் உங்களை கலைதுறையில் முக்கியமான நாடகத்துறையில் ஈடுபட வைத்தவர்கள் பற்றியும் கூறமுடியுமா?

வலிகாமம் வடக்கில் தெல்லிப்பழை பிரதேசத்தில் பலாலி விமானதளத்தில் தெற்கு எல்லைப்புறத்தில் அமைந்துள்ள செம்மண் கிராமமே குரும்பசிட்டி. இதனை ஒரு ''கலைபூமி'' என பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஆம்! இதற்கொரு கலை பாரம்பரியம் உண்டு. 1924 ல் இவ்வூர் இளம் கமக்காரர்கள் அண்ணாவி கந்தப்பிள்ளையிடம் பயிற்சி பெற்று ''பொற்கொடியாள்'' என்ற ஆட்டக்கூத்தை 4 தடவைகள் அரங்கேற்றினர். அண்ணாவி தம்பன், கிட்டினன், காத்தான் போன்ற அடிமட்டகலைஞர்களும் இசை நாடகங்களை நடித்துள்ளனர். 1900 ல் நிறுவப்பட்ட மகாதேவா வித்தியாசாலையின் தலைமையாசிரியர் பொன்.பரமானந்தர் (பெரிய வாத்தியார்) வருடா வருடம் நாடகங்களை நடாத்துவித்தார். கோலாட்டக்கலையை மேம்படுத்தினார். பல்கலை வல்லுநர் திரு.**K.K.V.** செல்லையா அவர்கள் புதுமை செறிந்த இசை நாடகங்களையும், யதார்த்த சமூக நாடகங்ளையும் நடாத்திப் பிரபல்யமுற்றார். இவரது 'அல்லியருச்சுனா' 'லவகுச' ஆகிய இசை நாடகங்களில் சிறுபாத்திரங்களில் நடித்தேன். இவரது 'நாட்டாண்மை நாகமணி' என்ற யதார்த்த சமூக நாடகத்தில் 'முத்தி' என்ற பெண்பாத்திரம் தாங்கினேன்.

இவரும், மகாதேவ வித்தியாசாலையின் கலைநாட்டமிக்க ஆசிரியர்களும், கிராமத்து வஞ்சகமற்ற ரசிகர்களும் ஊக்குவித்தனர்; உயர்த்தினர்.

தொடர்ந்து யாழ்.பரமேஸ்வராக்கல்லூரி மாணவனாய் இருந்த வேளை 1950 இல் பிரேஞ்சு நாடகாசிரியர் மோலியரின் **(Moliur)** உலோபி **(Miser)** என்ற முழுநீள நாடகத்தில் நடித்தேன். இதை நெறியாள்கை செய்தவர் திரு.**S.**சண்முகநாதன் (சானா) அவர்கள். **.S.S.**சிதம்பரபிள்ளை **(BA., Bsc)** என்ற கலை உணர்வுமிக்க ஆசிரியர் தயாரிப்பு பொறுப்பேற்றிருந்தார்கள். இவர்களிருவரும் நவீன நாடக உத்திகளை நன்கறிந்த வல்லுநர்கள். அவ்வேளை பரமேஸ்வராக் கல்லூரி அதிபராக இருந்த **S.**சிவபாதசுந்தரம் **M.A.** அவர்கள் ஆங்கில இலக்கியத்தில் உச்சத்தை தொட்ட பேரறிஞர். நாடகத்துக்காக என்னை முதன் மாணாக்கர் குழுவில் **(board of Prefects)** தானாகவே அமர்த்தினார். ஈழத்து கல்வியுலகில் நாடகத்துக்காக **Prefects** ஆக்கும் பழக்கம் இருந்ததில்லை. அதிபரின் இந்த முற்போக்கான செயற்பாடு என்னை இரட்டிப்பு வேகத்துடன் தொழிற்பட ஊக்கியது.

கேள்வி 2: நாடகத்துறை மட்டுமன்றித் 'தாளக்காவடி' என்ற கலைவடிவம் பற்றிய பூரண விளக்கங்களை பெறக்கூடிய ஒருவராக நீங்கள் இருக்கின்றீர்கள் உங்களது தாளக்காவடி என்ற நூல் ஈழத்துக் கலை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றது. இது யாழ்ப்பாணத்திற்கே உரிய கலைவடிவம் என்றும் கூறுவர். தமிழ்நயம் வாசகர்களுடன் தாளக்காவடி பற்றிய உங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.

முருகன் ஆலயங்கள் ஏராளமாக அமைந்த யாழ்குடாநாட்டில் பக்தர்கள் காவடி ஆடும் வழக்கம் இருந்து வந்தது. இரண்டு நிலைகளில் காவடி ஆட்டங்கள் நிகழ்ந்தன. முன் ஆயத்தங்களின்றி தம் இஷ்டப்படி கட்டுப்பாடின்றி மேளவாத்தியம், நாதஸ்வரம் என்பவற்றுக்கு தகுந்தவாறு நினைத்தபடி ஆடும் முறை ஒன்று. 'செடில் பிடிப்பவர் இழுத்துபிடிக்க சுழன்று, சுழன்று ஆடும் முறையும் இம்முறையை சார்ந்ததே.

தாளக்காவடி எடுப்பவர்கள் துறைபோகிய கிராமத்து அண்ணாவிமாரிடம் மூன்று, நான்கு மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை பயிற்சி பெற்ற பின்பே ஆடவேண்டும்.

அண்ணாவியார் வீட்டு முற்றத்திலோ அன்றி வசதியான இடத்திலோ பயிற்சிகள் தொடங்கும் 'தத்தித்தா தகதித் தெய்'' தெய் தெய் தெய்; ''தரி தொம் தரிதொம்'' போன்ற இலகுதாளங்களுக்கு நின்ற நிலையில் காலால் மிதிக்கும் பயிற்சி நடைபெறும். பின் முன்னோக்கித் தாளத்துக்கு நகர்தல் திரும்ப ஆரம்ப இடத்துக்கு திரும்புதல் என்பன நிகழும். சில வாரங்களின் பின் கோர்வைப் படுத்தப்பட்ட பல்வேறு தாளக்கட்டுகளில் பயிற்சி அளிக்கப்படும். உடலை வளைத்தும், நிமிர்த்தியும், சுழன்று தொங்கியும், திடீரென கலையழகுடன் குதித்து எழுந்தும், தத்திப் பாய்ந்தும் ஆடும்முறையில் பழக்கப்படுவர்.

''தத்தித்தகண சொம்தரி கிடதக
தகுதித் தகண சொம்தரி கிடதக''

போன்ற நீண்டநேரம் ஆடும் தாளக்கட்டுகளுக்கு ஆட பயில்வோர் கற்றுகொள்வர். வேகதுடிப்புடன் 'சல்லாரி' மிருதங்க இசைக்கு துடிப்புடன் சுழன்று ஆடும்போது செண்டுகளின் அசைவுகளும் மயிலிறகுக்காட்சியும் ரம்மியமாய் இருக்கும்.

கேள்வி 3: ''தாளக்காவடி'' எனும் இக்கலைவடிவின் இன்றைய நிலை பற்றி உங்கள் கருத்து என்ன?

கிராமிய கலைகளுள் ''தாளக்காவடி'' தலையாய இடத்தினை பெற்றிருந்தது. முருகன் ஆலயங்களில் பெரிதும் ஆடப்பட்டது. வாழ்வு நலத்துக்கும், ஆத்மீகத்துக்கும் துணை நின்றது. ஆங்கிலம், மேற்கத்தைய நாகரிகம் என்பவற்றால் இடைகாலத்தில் தாக்கமுற்ற இக்கலை இன்று மறைந்து விடுமோ என்ற நிலைக்கு வந்துவிட்டது. இடைக்காலத்தில் காவடி ஆடுவது அநாகரிகம் என்ற எள்ளல்பேச்சுகளால் தளர்நிலையடைந்தது. இன்றைய நிலையில் தமிழர்கள் அல்லலுற்று, சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். ஸ்திரமற்று, இடம்பெயர்வுகளுக்குள் அகப்பட்டு, மனநிம்மதி இன்றி வாழ்கிறார்கள். அடிமட்ட மக்கள், வளமற்ற மத்தியதரை வர்க்கத்தினர்தான் தாளக்காவடியை தொடர்ந்து பேணியவர்கள். இன்றைய சமாதானமற்ற சூழ்நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இவர்களே. கிராமக் கூட்டு வாழ்வு ஈடாட்டம்

கண்டுள்ளது. தாளக்காவடி பழக வேண்டும், ஆடவேண்டும் என்ற எண்ணம் இளம் சந்ததியினரிடையே மழுங்கி வருகிறது. மேலும் கலைவல்லுநர் ''அண்ணாவிமார்'' தொகையும் குறைவு. இருப்பவரும் மனச்சோர்வுடன் தான் உள்ளனர். மடிந்து விடுமோ என்ற அச்சம்தான் விஞ்சி நிற்கிறது.

**கேள்வி 4:-** நாடகத்துறையின் வளர்ச்சிக்கு தாளக்காவடியின் பங்கு எவ்வாறு அமைகின்றது?

மெய்ப்பிடிப்பும், உடலுறுதியும், அவயவங்களை இலேசாக லாவகமாக உபயோகிக்கும் ஆற்றலும் நடிகர்களுக்கு இருக்கவேண்டிய தேவைகளில் முக்கியமெனலாம். தாளக்காவடி ஆடுபவனுக்கு உடல் சதா தொழிற்பட வேண்டியிருப்பதால் இயற்கையாகவே மேற்கூறியதை பெற்றிருப்பான். மேலும் நாடக அரங்க கல்லூரியால் 1978 ல் மேடையேற்றப்பட்ட ''கந்தன் கருணை'' என்ற புரட்சி நாடகத்தில் அ.தாசீசியஸ் தாளக்காவடிப்பாட்டு மெட்டு ஆட்டங்களை புகுத்தினார்.

ஆலயப்பிரவேசம் பற்றிய மேற்படி நாடகத்தில் பக்தர்களுக்கும் (அடிமட்ட மக்கள்) குண்டர்களுக்கும் (தடுப்பவர்கள்) மோதல் வருகிறவேளை பக்தர்களின் பாடல் நடிப்பு ஆட்டம் ''தாளக்காவடி'' பாணியில் அமைய குண்டர்களின் நடனம் கதகளி, கண்டிய பாணியில் அமைந்திருந்தது. தாளக்காவடியின் மெல்லிய அசைவு பக்தர் நடிப்பில் புதுமையையும், யதார்த்தத்தையும் பாய்ச்சியது. ம.சண்முகலிங்கம் பல சிறுவர் நாடகங்களில் பொருத்தமாக தாளக்காவடி ஆட்டத்தன்மையை புகுத்தி வெற்றி கண்டுள்ளார். எனது 'மயில்' என்ற மோடி நாடகத்தில் மயில்களாக நடித்தவர் அசைவுகள், வேடர் பாய்ச்சல் பாடல்கள் தாளக்காவடியை அடியொற்றியே அமைத்தேன். நயப்புக்குரியதாக விளங்கியது. ஆக நாடகம் வளர தாளக்காவடி துணைநிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

**கேள்வி 5:-** நாடக அரங்க கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது அதில் இணைந்து ஏறத்தாழ ஐந்து தசாப்த கால நாடக கலைஞர்களுடன் தொடர்புடையவராக் இருக்கிறீர்கள். இவ்வெவ்வேறு தலைமுறை கலைஞர்களிடையே நீங்கள் காணும் வேறுபாடுகள் ஒற்றுமைகள் என்ன?

ஐந்து தசாப்தங்களாக எனக்கு நாடகத்துறையில் ஈடுபாடுண்டு. 1950 க்கு முன் ஈடுபட்ட கலைஞர்கள், 1950 - 1978 வரை பணியாற்றிய கலைஞர்கள், 1978 க்கு பின் இன்றுவரை நடிப்பவர்கள் இடையே வேறுபாடுகள் உண்டு. ஒற்றுமைகள் உண்டு.

இந்த மூன்று காலகட்ட மேடை கலைஞர்களும், நாடகத்தில் இயல்பாகவே ஈடுபாடுள்ளவர்களாய், பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் எதிர்நீச்சலடித்த இக்கலையை பேணியவர்கள்; பேணுபவர்கள். சமூகம் நாடகக்கலைஞர்களை கையாலாகதவர்கள் என்று துச்சமென மதித்த காலம் எழுபதுக்கு முன் எனலாம். ஆசிரியர்கள், ஆங்கிலம் படித்த உத்தியோகத்தர்களுக்கே அப்போது நாட்டில் மதிப்பு. கலைஞர்களுக்கு முக்கியமாக நாடகக்காரருக்கு வரவேற்பும், மதிப்பும் குறைவு. இத்தகைய நிலையிலும் அதிக ஊதியம் பெற முடியாத நிலையிலும், உதவாக்கரைகள் என சமூகம் சாடிய வேளையிலும் நாடகத்துறையைப் பொன்னென போற்றிய பெருமை இம்மூன்று காலகட்ட நாடக கலைஞர்களிடமும் இருந்த அடிநாத ஒற்றுமை பண்பு ஆகும்.

இன்றைய நாடக கலைஞர்கள் உலக தயாரிப்பு மட்டத்திற்கு தமிழ் நாடகங்கள் மேலோங்க வேண்டும் என்ற எண்ணத்தால் பரீட்சார்த்த முயற்சிகளில், தேடல்களில் ஈடுபட்டுள்ளனர். நாடக தயாரிப்புக்கு முன் பட்டறை பயிற்சிகள் நடாத்தி நடிகர்களை புடம்போடச் செய்யும் தொழிற்பாட்டிலும் இறங்கியுள்ளனர். பல்கலைக்கழகங்களிலும் நாடகம் கற்கை நெறியாக





உள்ளது. ஆக இன்றைய நாடக கலைஞர்கள் அறிவுரீதியாகவும், தொழிற்பாட்டுரீதியாகவும் முன்னெடுத்து செல்கிறார்கள். அன்றைய நாடகக் கலைஞருக்கு இவ்வாய்ப்பு பெரிதும் கிட்டவில்லை. ஆயின் இயல்பாக உடல்வளம் குரல்வளம், பாடல் ஆடல் வல்லமை போன்ற அடிப்படை அம்சங்களில் முன்னைய நடிகர் மேம்பட்டிருந்தனர். ''மைக்'' இன்றி நீண்டநேரம் ஆடிப்பாடி நடிக்கும் ஆற்றல் அவர்களுக்கு இருந்தது சிறப்பம்சமே.

ஐம்பதுகளுக்கு முன் நாடகத்துறையில் ஈடுபட்ட பலர் சில பழக்கங்களுக்கு அடிமையாகி சமூகத்தில் அநாகரிகமாக நடந்து கெட்டபெயரை தேடியுள்ளனர். இன்று அந்தளவுக்கு நாடகக்காரன் தன்னை இறக்கிக் கொள்ளவில்லை. அன்றைய கலைஞன் இதர கலைஞர்களை மதித்தது போல இன்றைய கலைஞனிடம் பண்பாட்டை பொறுத்தவரை நிறைவில்லை.

கேள்வி 6:- ஈழத்து நாடகத்துறையில் தற்போதைய நிலை பற்றிய உங்கள் கருத்து என்ன?

நாடகம் பற்றிக் கற்பதற்கு இத்துறை ஆர்வலர்களுக்கு இன்று வாய்ப்புக்கள் பல உண்டு. ஆயினும் அந்தளவுக்கு நடிப்பு வல்லமை, தயாரிப்பு வல்லமை என்பன மழுங்கிவிட்டனவோ என எண்ணத்தோன்றுகிறது. வருடாவருடம் மேடையேற்றப்படும் மன்றநாடகங்களின் தொகையும் எதிர்பார்க்குமளவுக்கு இல்லை. சில மன்றங்கள் தரமான நாடகங்களை மேடையேற்றினாலும், தமிழ் பிரதேசங்களில் பரவலாக நாடகம் மேடையில் என்ற அம்சத்தில் தேக்கம் தெரிகிறது. பல கலைஞர்கள் புதிய பாணிகளுக்கும், நவீன உத்திகளுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் திணறுவதை காணமுடிகிறது.

முன்பு கிராமங்களிலும், பல்வேறு பிரதேசங்களிலும் நாடக மேடையேற்றத்துக்கு இருந்த ஆர்வதுடிப்பு இன்று மங்கிவருகிறது. கல்லூரிகளில் போட்டிகள் காரணமாக நவீன, மரபுவழி நாடகங்கள் மேடையேறுவது ஆரோக்கிய நிலை எனினும் பொது கண்ணோட்டத்தில் நாடக மேடையேற்றத்தை பொறுத்தவரை திருப்தியில்லை. யுத்த சூழ்நிலையும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

கேள்வி 7 : நாடகம் ஒன்றின் வெற்றி பிரதானமாக எவற்றில் தங்கியுள்ளது?

காத்திரமான செய்தி கூறும் பிரதித் தேர்வு, முரண்பாடுகள், சிக்கல்கள், மோதல்கள், நியாயப்படுத்தல் என்ற அம்சங்கள் தொக்கு நிற்கும் நாடக ஓட்டம், அயரா உழைப்பு, செப்பனிடப்படும் வரை அலுக்காமல் நிகழ்த்தப்படும் ஒத்திகைகள், திருத்தங்கள், கூட்டுமுயற்சி, நுண்மதிமிக்க நெறியாள்கை வல்லுநனின் தொழிற்பாடு என்பவை நாடகத்தின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. செப்பனிடப்பட்டு மேடையேறும் நாடகங்கள் கூட சில சந்தர்ப்பங்களில் தோல்வியடைகின்றன. இதற்கு காரணம் பண்பாடற்ற அவையினரின் போக்காகும். அரங்கு, மேடை நிகழ்வையும் பார்வையாளர் கூடத்தையும் இணைத்த ஒன்றாகும். மேடையிலும் பார்வையாளர் கூடத்திலும் இணைப்பு நிலை இருந்தாலே நாடகம் வெற்றி நடையிடும். ஏற்கனவே ஒரு பிழையான அபிப்பிராயத்துடன் **(Prejudiced view)** அல்லது சுவைக்கும் போக்கு அற்ற நிலையில் சபை இருந்தால் நாடகத்தை நகர்த்துவதில் சிரமங்கள் இருக்கும். நாடக அரங்கக் கல்லூரியால் மேடையிடப்பட்ட அ.தாசீசியஸின் பொறுத்தது போதும் அரசு நடாத்திய அகில இலங்கை நாடகப் போட்டியில் ஐந்து பரிசில்கள் பெற்று முதலிடம் பெற்ற நாடகம். 23 அரங்குகள் கண்ட வெற்றி நாடகம். நுவரெலியா அரச , அதிபரின் வேண்டுகோளின்படி வசந்த விழாவில் மேடையேற்றப்பட்டது. 10, 15 நிமிட நிகழ்வைத் தொடர்ந்து அவையிலே சப்தங்கள், குழப்பும் ஒலங்கள் ஒலித்தன. அரசாங்க அதிபர் முயன்றும் அடக்க முடியவில்லை. தமிழ் நாடகம் என்ற

வெறுப்புணர்வு இனத்துவேஷம் அவையை ஆக்கிரமித்திருக்கலாம். 1 மணித்தியால நடிப்புடன் நாடகத்தை தொடரமுடியவில்லை. ஏற்கனவே திட்டமிட்டு குழப்ப வந்த அவைக்குமுன் நல்ல நாடகமும் எடுபடாது. ஆக பண்பட்ட நாடகம் பார்க்கும் நோக்குடைய அவையும் நாடக வெற்றிக்கு அவசியமாகலாம்.

**கேள்வி 8:** ஈழத்து நாடகத்துறை வரலாற்றில் தாக்கம் செலுத்தியவர்கள் -செலுத்துபவர்கள் என்று நீங்கள் கருதுபவர்களைப் பற்றி சற்றுக் கூறமுடியுமா?

(தற்கால முற்காலக் கலைஞர்கள்)

ஈழத்து நாடகத் துறையில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் தொழிற்பாடு 30 பதுகள் 40 பதுகள் 50 பதுகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. செப்பனிட்டு நாடகங்களை மேடையேற்றலில், நடிகர்கள் மத்தியில் ஒழுங்கு ஒழுக்கம் என்பவற்றை நிலை நாட்டலில் இவர் அக்கறை காட்டினார். இதனால் நாடகத்துறைக்கு மதிப்பு உயர்ந்தது.

**S.**சண்முகநாதன் (சானா) கலையரசின் நாடகங்களில் நடித்ததால், 3 ஆண்டுகள் சென்னையில் சித்திரம் படித்த வேளை நாடகம் பற்றி பலதும் பத்தும் அறிந்திருந்ததால், பரமேஸ்வராக்கல்லூரி உட்பட பல கல்லூரிகளில் நாடகங்கள் பழக்கிய அனுபவத்தால், இலங்கை வானொலி தமிழ் நாடகப் பொறுப்பாளராக முதல் தடவை நியமனம் பெற்றதால் லண்டனில் **B.B.C** யில் பயிற்சி பெற்றதால், கொழும்பு, பல்கலைக்கழகத்திலும் உயர் நாடக மன்றங்களிலும் கனதியான நாடகங்கள் **(Serious plays)** நடிப்பித்ததால் தான் அறிவுரீதியாகவும் தொழிற்பாட்டு ரீதியாகவும் பெற்ற அறிவை இளம் சந்ததிக்கு ஊட்டினார். நாடக உலகை உயர்த்தினார். **S.**ராஜரட்ணம்.

(ராஜ்) நினைவுகூரப்பட வேண்டியவர். இதை விட இசை நாடகத்துறையில் நடிகமணி **V.V.**வைரமுத்து, பூத்தான் யோசெப் போன்றோர் தாக்கங்களும் பிரசித்தமானவை. 1965 க்கு பின் கலைக்கழக தலைவராக விளங்கிய பேராசிரியர் சு.வித்தியானந்தன் நாடக நெறியாள்கை செய்தும், நாடகப் போட்டிகள் மூலம், ஊக்கியும், வடமோடி தென்மோடி நாடகங்களையும் புடம் செய்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மூலம் மேடையேற்றுவித்தும் தனிமுத்திரை பதித்தார்.

இவ்வேளை நாடகத்துறைக்குப் புதுப்புனல் பாய்ச்ச கொழும்பில் வசித்த கலைஞர்கள் பலர் முன்னணிக்கு வந்தனர். அ.தாசீசியஸ், ந.சுந்தரலிங்கம், இளைய பத்மநாதன், இ.சிவானந்தன், சுபையர் ஸ்ரீமிட், கா.பாலேந்திரா உட்படப் பலர் பரீட்சார்த்த நாடகங்களை நடாத்தினர். பேராசிரியர் கலாநிதி க.சிவத்தம்பி ஆலோசனைகள் வழங்கி ஆற்றுப் படுத்தினார். தொடர்ந்து கொழும்பு பல்கலைக் கழகத்தில் நாடகத்தில் 'டிப்புளோமா'' என்ற பயிற்சி நெறி ஆரம்பமானது. பேராசிரியர்கள் சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி மற்றும் சிங்கள நாடக வல்லுநர்கள் ஆசான்களாய் அமர்ந்து கற்பித்தனர். இருவருட பயிற்சியின் பின் யாழ் மீண்ட வல்லுநர் குழந்தை சண்முகலிங்கம், அ.தாசீசியஸ் துணையுடன் நாடக அரங்கக்கல்லூரியை அமைத்தார். கலாநிதி.மௌனகுருவும் இணைந்த காத்திரமான பணிபுரிந்தார். இந்த அமைப்பு, ஈழத்து நாடக உலகில் பெரும் திருப்பு முனையாகியது. நூறு பேர்வரை புதிய உத்திகள் உட்பட பலவற்றையும் கற்க ஆரம்பித்து நாற்பது பேர்வரை நற்பயன் எய்தினர். இவர்களின் தாக்கத்தால் மரபு நாடகம் நவீன நாடகம் என்பவற்றில் புதுமை வீச்சு தென்பட தொடங்கியதும். சிறுவர் நாடகம், **Stylised play** என்ற மோடி நாடக கோலங்கள் வளர்ச்சியுற்றன. பல்கலைக்கழக கற்கை நெறியூடாக **S.**சிதம்பரநாதனும் குறியீட்டு நாடகம் உட்பட பல புதுமைகள் செய்தார். யாழ்.திருமறைக் கலாமன்றமும் காத்திரமான தாக்கத்தையும் இத்துறையில் ஏற்படுத்தியது. நான் அறிந்த அளவில் இவர்களை விட இன்னும் பலர் நாடகம் நலிசிறக்க உழைத்தனர், தாக்கம் செய்தனர்.

**கேள்வி 9:-** இறுதியாக இளையதலைமுறைக் கலைஞர்களுக்கு நீங்கள் தெரிவிக்க விரும்புவது என்ன?

1942 இல் இருந்து அரங்கைச் சுற்றித் தொழிற்படும் நான் அனுபவத் திரட்டாகச் சில அம்சங்களை இளைய தலைமுறையினருக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(அ) உடல் வளமும் குரல்வளமும் நடிகர்களின் இரு கண்கள். நோயற்ற வாகானதேகம். சுறுசுறுப்பான அங்கங்கள், வெகு தூரத்துக்கு எறிந்து பேசக் கூடிய கஸ்டம் ஒரு நடிகனுக்கு இருக்குமானால் அவன் மேடைக்கலையில் மேம்படுவான். நீண்ட காலம் தொடர்வான். ஆக உடற்பயிற்சி பட்டரைப்பயிற்சி, குரல் பயிற்சி என்பவற்றில் தவறாது தினமும் ஈடுபட வேண்டும்.

(ஆ) கற்பவற்றை முனிவன் போல ஒரு மனத்துடன் கற்பதுடன், திரும்பத் திரும்ப, மணிக்கணக்காக செய்து பார்த்தல் வேண்டும்.

(இ) கூட்டுமுயற்சி என்ற நினைவு எவ்வேளையும் மனதில் ஒலிக்க வேண்டும்.

(ஈ) பேச்சில் அட்சரசுத்தி, தெளிவு, இறுதியில் சொற்களை வசனங்களைக் கேட்கும் படி உச்சரிக்கப்பழக வேண்டும்.

(உ) குடி, புகைத்தல், கெட்ட நடத்தைகளைத் தவிர்த்த உடல்நலத்தையும் பொருளாதார வளத்தையும் உன்னதமாக்க வேண்டும்.

(ஊ) 'கலைஞன் அதேவேளை பண்பாளன்'' என்ற எண்ணத்தை மக்கள் மனதில் பதியும் படி நல்நடத்தை பேணவேண்டும்.

(எ) சக கலைஞர்கள் துன்புறும்படி எள்ளல், நளினம் செய்து நாடகக்கலைக்கே குந்தகம் செய்தலைத் தவிர்க்க வேண்டும்.

(ஏ) குறைகள் ஆக்கபூர்வமாக அன்பு அடிப்படையில் வைக்கப்படலாம்.

**உங்கள் கலைவிழா சிறப்புற வாழ்த்துக்கள்.**

★ *மனிதனை அவன் சொல்லும் சொல்களினால் அல்ல கேட்கும் கேள்விகளால் எடை போடு.*

★ *விமர்சகன் -வழிதெரிந்த ஆனால் காரோட்ட தெரியாதவன்*

★ *அறியாமை உள்ள மனிதன் தனக்கு புரியாததை எல்லாம் பாராட்டுவான்.*

★ *புத்தகம் கைக்குள் அடங்கிவிடக்கூடிய பூந்தோட்டம்.*

எப் ஹேமன்ஸ்! உலகப்பிரசித்தமான ஆங்கில கவிஞர் இவர் எழுதிய பல கவிதைகள் பெரும்பாலும் வாழ்க்கையில் அவருக்கிருந்த விரக்தியையும், அது அவருக்களித்த துன்பங்களையும் வெளிக்காட்டுவனவாக அமைந்திருந்தன. அவரால் எழுதப்பட்ட கீழ்கண்ட கவிதை காணாமல் சென்றுவிட்ட தன் சகோதரனை காத்திருக்கும் ஒரு சிறுவனின் அழுகுரல்.....!

சிறப்பு கவிதை

## சாவின் இரக்கமற்ற கை
## (Deaths Icy Hand)

## ஒரு குழந்தையின் முதல் துயரம்
## (The Child's First Grief)

ஓ..... என் சகோதரனை என்னிடம் திரும்பி வரும்படி அழையுங்கள்.
நான் தனியே விளையாட மாட்டேன்.
மலர்களும் தேனீக்களும் இணைந்து வரும் கோடைகாலம் வருகிறதே
எங்கே என் சகோதரன் போய்விட்டான்?

வண்ணாத்திப்பூச்சி பிரகாசமாக தோன்றி மறைகிறது.
சூரியக்கதிர்களின் பாதையின் குறுக்கே;
அது பறக்கும் பாதையில் துரத்தி செல்ல இப்போது
எனக்கு அக்கறையில்லை.
ஓ.... என் சகோதரனை திருப்பி கூப்பிடுங்கள்!
நாங்கள் விதைத்த மலர் கொடிகள் இப்போது அடர்ந்து பூத்துக்குலுங்குகின்றன.
எங்கள் தோட்டத்து மரத்தை சுற்றி
பாரத்தினால் எங்கள் திராட்சை கொடியும் வளைகிறது
ஓ... அவனை என்னிடம் திரும்பி வர அழையுங்கள்!

உன்னுடைய குரலை அவன் கேட்கமாட்டான் அழகான பிள்ளையே
உன்னிடம் அவன் வராமலும் விட்டு விடுவான்;
ஒரு காலத்தில் வசந்த காலத்தை போல இப்பூமியில் புன்முறுவல் பூத்த அந்த
முகத்தை இனி ஒருபோதும் நீ காணமாட்டாய்.

ஒரு ரோஜாவின் குறுகிய, ஆனால் மகிழ்ச்சி ஒளிவீசிய
வாழ்வு,
அதேபோலத்தான் அவனுக்கும் வழங்கப்பட்டது;
போ.. என் மகனே நீ தனியாகத்தான் விளையாட வேண்டும்
உன் சகோதரன் சொர்க்கத்தில் இருக்கிறான்.
பறவைகளையும், பூக்களையும், விட்டுவிட்டு அவன் சென்றுவிட்டானா;
அப்படியானால் நான் அழைப்பது வீணாகத்தானா?
நீண்ட, மிகநீண்ட வேனிற்கால சோலைகளினூடு
திரும்பி அவன் வரவே மாட்டானா?
அருவி கரையோரம், சோலைகளினூடே
நாங்கள் அலைந்து திரிந்த தெல்லாம் முடிந்துவிட்டனவா?
ஐயோ, என் சகோதரனோடு விளையாடியபோது
(இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால்)
இன்னும் அதிகமாகவே அவனை நேசித்திருப்பேன்.

மொழிபெயர்ப்பு:-
அழகுபாலா
**உயர்தரம் 97**
**கணிதப்பிரிவு**

- *மனிதன் பிறக்கும் போதுதான் நாம் அழவேண்டும். அவன் இறக்கும் போதல்ல.*
- *தேவனுடைய இராச்சியம் சிறுபிள்ளைகளினுடையது.*
- *ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்.*
- *உன் விரோதியில் அன்பு வை, அது அவனை பைத்தியம் பிடிக்க வைக்கும்.*

*With Best Compliments*

*From*



## MASTER FREIGHT AGENCIES

# C & F (PVT) LTD

**CLEARING, FORWARDING, TRANSPORTING**

**AND**

**CUSTOMS HOUSE AGENT**

**46, N.H.M. ABDUL CADER ROAD,**
**COLOMBO 11, SRI LANKA.**

**Tel : 329372, 438028** **Fax : 422540**

*With Best Compliments*

*From*



**K. BALASUBRAMANIAM**

**98, WOLFENDHAL STREET**
**COLOMBO 13**

**TEL : 436024**

*With Best Compliments*

*From*

# NAVA ASIAN TRADING COMPANY

**Importers, Suppliers & General Hardware Merchants**

**35A, ABDUL JABBAR MAWATHA,**
**COLOMBO -12**
**SRI LANKA**
**T'PHONE : 447210, 345874**



*With Best Compliments*

*From*

# HARDWARE STORES

**IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS**

**"CHANDSREE BUILDING"**
**369, OLD MOOR STREET,**
**COLOMBO - 12**

**T'PHONE : 435561, 434794, 423636**
**CABLE : "EMSREE"**
**FAX : 582172**

*With Best Compliments*

*From*

## Nishaga Cutting Center

நிஷாகா கட்டிங் சென்ரர்

292B. 14 - 2ம் மாடி

செட்டியார் தெரு, கொழும்பு 11.

**292B- 14, 2ND, FLOOR,**
**SEA STREET, COLOMBO - 11**
**TEL : 078-68325**

*With Best Compliments*

*From*

## TRUST LANKA TRAVELS

**RECRUITING AGENTS, TRAVELS & TOUR OPERATORS**

**136, JAMPETTAH STREET, COLOMBO 13,**
**SRI LANKA.**

**TEL : 431027, 332539, 329077**
**T'LX : 22926 THANIS CE**
**FAX : 541019**

*With Best Compliments*

*From*

# Jayananthan Stores

**General Rice Merchants Specialists in all kinds of rice & importers**

**88, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**

**T'PHONE : 433646, 445515**
**RESIDENCE : 325734**
**FAX : 344639**



*With Best Compliments*

*From*

# ARUNA AGNECIES

**CIVIL MECHANICAL & MARINE ENGINEERS**
**ARCHITECTS, BUILDING CONTRACTORS, HARDWARE DEALERS**
**GEM MERCHANTS, TRAVEL AGENTS, EXPORTS & IMPORTERS,**
**TRADE REPRESENTATIVES**

## Government & Corporation Suppliers

**562, SRI SANGARAJA MAWATHA,**
**COLOMBO - 12**
**SRI LANKA**
**T'PHONE : 446576 - 344803**

**TELE : 431255, 578304**
**TELEX : 21583 TELECO CE**
**CABLE : ARUNAEXPO Colombo**
**FAX : 811386**

*With Best Compliments*

*From*

# V.A. GOLDSMITH

**274, 2ND FLOOR, SEA STREET,**
**COLOMBO - 11,**

**T'PHONE : 341690, 072 - 40763**

*With Best Compliments*

*From*

**கு. கலைச்செல்வன் (ஆசிரியர்)**

**B.COM (HONS)., DIP.-IN-EDUCATION**

# DEBATE TEAM 97

G.S.SETHUKAVALAR

S.YUBENDRAN

B.T.VASEEKARAN

M. AROOS

M.I.M. FAZMIL

N.VISVANATH

R.SASITHARAN

R.BRAMMAVINAYAGAN

*With Best Compliments*

*From*

# MR.M.R.FAHUMUDEEN B.SC.ENG.

## (CHEMISTRY TEACHER)

| | | |
|---|---|---|
| * SANGAM | - COL-6 | 583759 |
| * BRILLIANT | -COL-13 | 01-347728 |
| * EEC | -KANDY | 077-306540 |
| *VENUS | -VAVUNIYA | 072-223359 |
| * TOWN HALL | -KALMUNAI | 072-223359 |

# DEBATE TEAM 1997



**Seated** **(L - R)** : S. Uubenthrian, B.T. Vaseekaran, Mr. S.H. Kumarasinghe (Principal), G.S. Sethukavalar (Captain), M. Aroos, Mr. S. Ratnasabapathy, (Senior Vice President)

**Standing** **(L - R)** : R. Sasitharan, N. Visvanath, M.I.M. Fazmil, R. Brammavinayagan

# கண்மணிக்கு ஒரு விண்ணப்பம்

நனவினில் வந்த காதலியே
நினைவினில் பதிந்த காவிரியே
என் -மனதினை வதைத்த பாதகியே
நீ -யார்?

நிஜத்தினில் உன் தரிசனம் கிடைத்தவுடன்
தினமும் நாண துடித்தது என் கண்கள்
அன்பினை பொழிய அழைத்தது என் இதயம்
வாழ்த்தினை பாட தவித்தது என் வாய்

என் கண்கள் உன்னை இரசித்தன
என் இதயம் உன்னை புசித்தது.
என் ஜீவன் உன்னை சுவாசித்தது
என் சுற்றம் மட்டும் என்னை நிந்தித்தது.

ஈர்ப்பு விசை என்பதின் அர்த்தம் அறிந்தேன்
பசித்தாலும் புசிக்க முடியாத உணர்வை உணர்ந்தேன்
நடுநிசி தாண்டியும் உறக்கமற்ற நிலையை அடைந்தேன்
உன்னை கண்டவுடன் மட்டும் முகம் மலர்ந்தேன்

என் சிந்தனையின் சிலையாய் செதுக்கிவிட்டேன்
என் இருதயத்தின் துடிப்பாய் துடிக்கவிட்டேன்
என் எண்ணங்களில் நிலையாய் பதித்துவிட்டேன்
என்னுள் உன்னை கடலாய் பரவவிட்டேன்.

அடி பெண்ணே!
என் மனதில் உனக்காக ஒரு காதல் தேசம்
அதில் நான் கட்டியுள்ளேன் ஒரு காதல் கோட்டை
எனக்கு நீ தரவேண்டும் காதல் பரிசு
இணைந்து நாம் பாடிடுவோம் காதல் கீதம்

செ.பவன்
ஆண்டு 13
வர்த்தகம் -D

# காளையரே... ஒரு நிமிடம்!

காதல் எனும் பாடம் படிக்க,
காமமெனும் நூலேந்தி
கால்போன போக்கிலே
காரிகைகளை நாடும்,
காளையரே.... சற்று நில்லுங்கள்!

பத்து மாசம் சுமந்த தாயை விட்டு
பஷனாய் வந்தவளை கண்டவுடன்
பத்தும் மறந்ததென்ன? இளைஞரே
பரிதவித்து நிற்பதென்ன?

கற்கும் பருவமதியே, கல்வியிலே நாட்டமின்றி,
காதல் நதியினிலே நீந்தும் மீன்களே சற்று கேளீர்!
கற்கும் காலமதை தவற விட்ட நீவிர்
கலங்குவீரே ஓர்நாளில் அதையெண்ணி பாரீர்!

நாளைய உலகம் நம் கையில்,
நாட்டின் முன்னேற்றமும் நம் கரங்களில்,
நாணத்துடன் போகுமவள் பின் செல்லும்,
நாதியற்ற நிலை நமக்கினி வேண்டாம்!

அன்பெனும்மையப்புள்ளியுடைய,
அருமை பள்ளி கூடங்களில்,
ஆபாச மின்றிப் படித்து,
ஆளுங்களேன் நன்கு இப்பாரினையே!

**S.செந்தூரன்**
**கணிதப்பிரிவு**
**உயர்தரம் -98**

*With Best Compliments*

*From*

## K.M. GHANI & CO.

**DEALERS IN RICE & OTHER FOOD ITEMS.**

195 A, OLD MOOR STREET
COLOMBO 12
TEL : 433601, 596093

*With Best Compliments*

*From*

## NEW CITY GROCER'S

**GENERAL MERCHANTS**

177, GALLE ROAD,
WELLAWATTE,
COLOMBO 6.
T.P : 592552

*With Best Compliments*

*From*

**MITECH COMPUTER SYSTEMS**

**314, FIRST FLOOR, UNITY PLAZA,**
**COLOMBO 4.**

**HOT-LINE : 071-39788**
**TEL-FAX : 074-512343**

*With Best Compliments*

*From*


***RATHNA MAHAL JEWELLERS***

**ரத்ன மஹால்**

**NO. 447, MARADANA ROAD,**
**COLOMBO 10**
**TEL : 699326 / 685910**

*With Best Compliments*

*From.*



# CROWN JEWELS

கிறவுன் ஜுவல்ஸ்

**FOR EXCLUSIVE CRAFTSMANSHIP**

**76, SEA STREET,**
**COLOMBO - 11.**
**TEL : 323937, 337545**

*With Best Compliments*

*From*



# LALITHA TRADE CENTRE

**DEALERS IN TEXTILES AND FANCY GOODS**

**200, MAIN STREET,**
**COLOMBO - 11,**
**SRI LANKA.**

**TEL : 325911, 334645**

# சிறப்பு ஆய்வு

நேர்காணல் - யோ .யெகதீஸ்

பழைய விவாதிகள் அண்மைக் காலங்களில் நடுவர்களாக கடமையாற்ற அழைக்கப்படுகின்றனர். இந்நடைமுறை விவாதிகள் மத்தியிலும் பார்வையாளர் மத்தியிலும் பரவலாக பேசப்படுகின்றது. விவாதத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் சிலரது கருத்துக்களை வெளிப்படுத்தவே இம்முயற்சியில் நான் ஈடுபட்டேன். இந்நடைமுறை புதிது என்பதால் குறை நிறைகள் இருக்கும் என்பதாலும் இது ஆக்கபூர்வமான தொன்றாக அமைய வேண்டுமெனினும் இவை கருத்திற் கொள்ளப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

**A.R.வாமலோசனன்**

இந்துக் கல்லூரியின் விவாத -அணித்தலைவர்

*கேள்வி:- அண்மைக்காலங்களில் பாடசாலைக்கிடையிலான நடாத்தப்படும் விவாதப் போட்டிகளில் பழைய விவாதிகள் மத்தியஸ்தர்களாக கடமையாற்ற நியமிக்கப்படுகின்றனர். இதனைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்.*

இங்கு சாதகங்களும் உண்டு. அதேவகையில் பாதகங்களும் உண்டு எனலாம். நாம் முதலில் பாதகங்களை எடுத்து நோக்குமாயின் நடுவர்களாக இருப்பவர்கள். முந்திய காலங்களில் தம்மை எதிர்த்து விவாதித்தவர்கள் பங்கு கொள்ளும் விவாதப் போட்டிகளில் அவர்களுக்கு எதிரான சில எண்ணங்களைக் கொண்டிருக்கலாம். ஆகவே இவ்வாறான நிலைமையில் நடுவர்களாக இருப்போர் பக்கம் சாரலாம். மேலும் இவர்கள் பாடசாலைக் காலத்தை முடித்து உடனேயே நடுவர்களாக கடமையாற்றுவதால் இவர்கள் சமூக சமுதாய அனுபவம் இல்லாதவர்களாக அல்லது குறைந்தவர்களாக காணப்படலாம். ஆகவே குறித்த ஒரு விவாத அணியினரின் கருத்துக்கள் இரு பொருள்படும் பட்சத்தில் அவ் அணியினருக்கு பாதகமாக அமையும் வகையில் விளங்கி எதிர் அணியினருக்கு புள்ளிகள் வழங்கலாம்.

எனினும் பழைய விவாதிகள் நடுவர்களாக கடமையாற்றும் போது இவர்கள் விவாதிகளின் உள்ளுணர்வுகள், உணர்ந்தவர்களாகவும், அப்போதைய விவாத பாணியையும் அறிந்தவர்களாக இருப்பர். ஒரு விவாதி என்ற வகையில் இதை சாதகங்களாகவும் கருதுகின்றேன்.

*கேள்வி: பழைய விவாதி ஒருவர் நடுவராக கடமையாற்ற கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள் யாவை என எண்ணுகிறீர்கள்?*

ஒருவர் தனது பாடசாலை விவாத அணியை 10 போட்டி தலைமை தாங்கி அரைவாசிக்கு மேற்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். அத்துடன்

அவர் பாடசாலையை விட்டு விலகி குறைந்தது ஐந்து வருடங்களாவது முடிந்த பின்னரே நடுவராக கடமையாற்ற வேண்டும்.

**சே.இ.அஸ்ஸியான்**

**முன்னாள் றோயல் கல்லூரி விவாத அணித் தலைவர்**

கேள்வி: பழைய விவாதிகள் நடுவர்களாக கடமையாற்றுவதை பற்றி உங்கள் கருத்து என்ன?

நடுவர்கள் நடுவுடமையுடைவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு போட்டியாளனினதும் விருப்பு.

இவ்வபிலாஷையைப் பூர்த்தி செய்யும் புதிய முறையாகப் பழைய மாணவர்களை நடுவர்களாக்கும் திட்டம் சில போட்டி அமைப்பாளர்களால் நடைமுறைப்படுத்தப் பட்டது. என்னைப் பொறுத்தவரை ஒரு 'கிறுக்குத்தனமான விஷப்பரீட்சை'' என்றே தோன்றுகிறது.

காரணங்கள்:-

1. ஆசிரியர்கள் பக்கசார்பாக -பிரபல பாடசாலைகளுக்கு சார்பாக இருக்கிறார்கள் எனக்கூறும் இவர்கள் -போட்டிகளிலிருந்து விலக 2 வருடம் கூட கழியாத (போட்டியாளர்கள்) பழைய மாணவர்களிடம் அந்த நடுவுநிலைமையை எதிர்பார்ப்பது பச்சை மடத்தனம்.
2. பிரபலமற்ற பாடசாலைகள் வெல்ல வேண்டும் என நினைக்கும் அமைப்பாளர்கள் -அதற்குரிய திறமை அவர்களிடம் இருக்க வேண்டும் என்ற உண்மையைத் தூக்கி குப்பையில் போட்டுவிட்டு, எப்படியானாலும் வெல்ல வைத்து விட வேண்டும் என்று நியாயங்களை மீறுகிறார்கள்.
3. அனுபவமற்ற -பக்குவமற்ற ''புதிய'' நடுவர்கள் திருவுளச்சீட்டு போடுவது எப் படி? என்ற அடிப்படை விதியே தெரியாதவர்களாக இருந்தது என் சொந்த அனு பவம். திருவுளச் சீட்டின் பின்னால் அடையாளமிடப்பட்டிருந்து அது குறித்துக் காட்டப்பட்டும் மன்னிப்புக் கோரப்படாததும் நேரில் கண்ட கேலிக்கூத்துகள்.
4. நடுவர்கள் -என்றவுடன் போட்டியாளன் மனதில் ஒரு நம்பிக்கை தோன்ற வேண்டும். இவனுக்கு என்ன தெரியும்? என்னோட போட்டியிட்டு தோற்றவன் தானே! என்ற ரீதியில் மாணவர்கள் - நினைக்குமளவு சில பழைய மாணவர்களும் இந்த ''புதிய'' நடுவர் குழாத்தில் உள்ளடக்கம்.
5. இரண்டு, மூன்று வயதே மூப்பான ''புதிய'' நடுவர்கள் நிறைய போட்டியாளர் களின் நண்பர்கள் / எதிரிகள்.
6. இந்தப் ''புதிய'' நடுவர்களில் பலர் அடிப்படைப் பொது அறிவு கூட இல்லாதவர்கள் என்பதும் அவர்களுக்கே உரிய மேலதிகத் தகுதியாக இருக்கிறது. (உம்) 'தேச வழமைச்சட்டம்' யாழ்ப்பாணத்தின் நிலம் பற்றியத என்று நான் ஒரு விவாதத்தில் கூற; ''அப்படியா'' என்ற ரீதியில் ஒரு நடுவர் அடுத்த நடுவரைப்

பார்க்க அவரும் கையை விரிக்க பிறவிப்பயனே அவ்விடத்தில் அவ்விடத்தில் விட்டேன்.

7. இன்னும் பல சொந்த அனுபவங்கள்.

மொத்தத்தில் -இவர்கள் மாணவர்களின் உளவியலுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விட்டார்கள். இப்போது நானும், தீர்ப்புகளை ஏற்கப் பழகிவிட்டேன். -நியாயங்கள்? அவை கிடக்கட்டும்.

**திருமதி.பத்மா சோமகாந்தன்**

**பட்டிமன்றப் பேச்சாளர், நடுவர், எழுத்தாளர்**

கேள்வி: விவாதங்களில் நடுவர்களாக இருப்போர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என நினைக்கிறீர்கள்?

''நடுவர்' என்ற சொல்லிலேயே அவர்களது கடமை உணர்த்தப்படுகிறது. தராசு கோலின் முள்போன்று, இவர்கள் நடுவுநிலையைப் பக்கம் சாராமல் பேணவேண்டும். விவாதிப்போர் தமது கட்சியை வலியுறுத்த, கருத்தை வலிந்திருந்து நிலைப்படுத்த மிகப் பெலவீனமான ஆதாரமற்ற சில கருத்துக்களையும் அள்ளி வீசுவர். வார்த்தை ஜாலம் செய்து எதிரணியை மயக்குவர். பொருத்தமற்ற எண்ணக்கருக்களைப் போட்டுக் குழப்புவர். நடுவராகப் பணிபுரிவோர் இவற்றையெல்லாம் நன்கு அவதானித்துக் கருத்தில் கொண்டு, கொடுபட்ட தலைப்புக்கு ஏற்றமுறையில் ஆணித்தரமாகக் கருத்துக்களை வைத்து விவாதிக்கிறார்களா என்பதை நன்கு கவனிக்க வேண்டும். அதைவிடுத்து, தாம் விரும்புகின்ற தமக்குப் பெரிதும் தாடனமான விடயத்தில் ஆர்வம் கொண்டு அதன் நிமித்தம் பக்கம் சார்பவராக இருப்பாராகில் அவர் தமது கடமையில் நேர்மையற்றவராகவே கருதப்படுவார். பக்கசார்பற்ற நடுநிலை வகிக்கப் போய்த் தடுமாற்றமடையின், அது குளிக்கப் போய் சேறு பூசியதாகவே அமையும்.

விவாதிக்கும் பொருளையொட்டி விவாதத்திறமையையும் தமது கருத்தை வலியுறுத்த ஒவ்வொரு கட்சியினரும் முன்வைக்கும் கருத்துக்கள், எண்ணங்கள், அனுபவங்கள், மேற்கோள்கள், உரையாற்றும்பாணி, எதிரணியின் கருத்தை வெட்டிப்பேசும் ஆற்றல் இவற்றைக் கொண்டே நடுவர் தீர்ப்பு வழங்கவேண்டும். இந்நிலையிலிருந்து நடுவராகப் பணிபுரிபவர் எள்ளளவும் விலகலாகாது. தமது சொந்த விருப்ப வெறுப்புகளுக்கு அவர் அடிமையாகக் கூடாது.

வியாசர் கல்யாண சுந்தரம்

முன்னாள் புனித பேதுரு கல்லூரி விவாத அணித் தலைவர்

கேள்வி: பாடசாலை விவாதப் போட்டிகளில் பழைய விவாதிகள் நடுவர்களாக பணியாற்றும் முறையை அறிமுகப்படுத்த காரணமானவர்களில் ஒருவர் என்ற வகையில் இம்முறை ஏன் சிறந்தது என நினைக்கிறீர்கள்?

நடுவர்களாக அழைக்கப்படும் வெளியார்கள் பெரும்பாலும் ஒரு குறித்த துறையை சேர்ந்தவர்களாக இருப்பர். அதிலும் கலைத்துறையிலேயே அதிக நாட்டம் கொண்டு காணப்படுவர். ஆகவே இவர்கள் ஏனைய விடயங்களைப் பற்றி ஆராயும் விவாதப் போட்டிகளில் சிறந்த மத்தியஸ்த்தை வகிக்க முடியாது. மேலும் ஒரு நடுவர் தமது அறிவுடன் குறித்த ஒரு விவாதியின் அறிவை ஒப்பிட கூடாது. ஆகவே பாடசாலை மட்டத்தில் ஒரு விவாதியின் ஆற்றல் எவ்வளவாக இருக்க வேண்டும் என்பதை மதிப்பிட முடியாமல் இருக்கலாம். அத்துடன் பிரபல பாடசாலைகளுக்கு அதிக சலுகை வழங்கக்கூடியவர்களாக இருக்கலாம். இவற்றோடு ஒப்பிடுகையில் பழைய விவாதிகள் நடுவர்களாகும் போது மேற்கூறப்பட்ட பல விடயங்களுக்கு அப்பாற்பட்டு மத்தியஸ்தம் வகிக்கக் கூடியதாக இருப்பதால் நடுவுநிலை சிறப்பாக பேணப்படுகின்றது என நினைக்கின்றேன்.

மேலும் வெளியார் விவாதங்களில் நடுவராக கலந்து கொள்ளும் சூழ்நிலையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அதாவது நேரத்துக்கு வரமுடியாமை, கடமைக்காக செய்தல், போன்ற காரணங்கள் தலைதூக்கும் பட்சத்தில் ஏனோ தானோ என்று தனது கடமையைச் செய்வார். எனினும் பழைய விவாதிகள் கடமை உணர்ச்சியுடன் தனது வேலையை நிறைவேற்றும் அதே நேரத்தில் கால தாமதமின்றியும் செய்யக்கூடியவர்கள் ஆகவே இக்காரணங்களை கருத்திற் கொள்ளும் போது இப்புதிய நடைமுறை வரவேற்கின்றேன்.

கேள்வி: பழைய விவாதிகள் நடுவர்களாக தெரிவு செய்யப்படும் போது எத்த கைய தகமைகளை கருத்திற் கொள்ள வேண்டும் என கருதுகிறீர்கள்?

தகமைகளைக் கருதும் போது ஒரு அணியின் தலைவராக இருந்து விவாதப் போட்டிகளில் கலந்து கொண்டவராக இருத்தல் சிறந்தது. தலைவராக தெரிவு செய்யப்படுபவர் அனேகமாக சிறந்த விவாதியாக இருப்பார். பாடசாலை மட்டங்களில் விவாதத்திறனைப் பற்றி அறிந்திருப்பதால் நடுவராக தேர்ந்தெடுக்கப்பட கூடிய தகைமையைப் பெறுகிறார்.

மேலும் குறிப்பிட்ட அணியின் இருப்பவர்களை விட வயதில் சற்று பெரியவராக இருத்தல் சாலச்சிறந்தது.

கேள்வி: பழைய விவாதிகள், இவ்வாறு நடுவர்களாக கடமையாற்றுவதை விரும்பாத விவாதிகள் எம் மத்தியில் இருக்கலாம். இவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

போட்டியில் தோல்வி அடைபவர்களே நடுவர்களைப் பற்றி குற்ற கூறுபவர்கள். நடுவர்களாக யார் இருந்தாலும் குறை கூறியே தீருவார்கள். தமது குறையை ஆசிரியர்கள், அறிஞர்கள் போன்ற வெளியாரிடம் முற்றாக கூற முடியாது. எனினும் பழைய விவாதிகளிடம் இவற்றை பற்றி கருத்துப் பரிமாறலாம். அத்துடன் பழைய விவாதிகள் விவாதிப்பவர்களின் மனோநிலையை பற்றி நன்கறிந்தவர்கள். ஆகவே இவற்றினைப் பற்றி மனஸ்தாபப்பட வாய்ப்பில்லை. மேலும் நடுவு நிலைமையும் சிறப்பாக பேணப்படும்.

**நிலக்ஷன் சுவர்ணராஜா**

**முன்னாள் விவாத அணித்தலைவர், றோயல் கல்லூரி**

கேள்வி: முன்னர் விவாதிகள் நடுவர்களாக இருப்பதை நீங்கள் வரவேற்கிறீர்களா? ஏன்?

'முன்னாள் விவாதிகள்'' நடுவர்களாக கடமையாற்றுவதை நான் நிச்சயமாக வரவேற்கிறேன். ஆயினும் முன்னர் விவாதிகள் என்ற போர்வையின் முன்னால் விவாதம் பற்றிய போதிய அறிவற்றவர்கள் நடுவர்களாக கடமையாற்ற அழைப்பதை நான் எதிர்க்கிறேன்.

கேள்வி: முன்னாள் விவாதிகள் என்போர் சந்தர்ப்பத்தால் விவாத மேடை ஏறியவர்களாக இருக்கலாம். இவர்களும் நடுவர்களாக அழைக்கப் படுவதை ஏற்கிறீர்களா?

முன்னால் விவாதி எனப்படும் போது, பொதுவாக விவாத மேடைகளில் ஏறத்தாழ ஐம்பது விவாதங்களிலாவது கலந்து கொண்டிருத்தல் நலம். அத்துடன் பாடசாலைக் காலங்களில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கு கொண்டு திறமையைக காட்டுவதுடன், ஏனைய விவாதிகள் மற்றும் ஆசிரியர்கள், நடுவர்களால் சிறந்த விவாதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களே நடுவர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும் என நினைக்கிறேன்.

கேள்வி : ஒரு பாடசாலை போட்டி ஒன்றில் தெரிவு செய்யப்படும் இவ்வாறான நடுவர்கள் (பழையவிவாதிகள்) குறித்து விவாதிகள் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என நினைக்கிறீர்கள்?

நடுவர்களை பற்றி முதலிலேயே தெரிவிக்க முடியாது. ஆனால் போட்டி ஒன்றிற்கு நடுவர்களாக வருபவர்கள் சர்ச்சைக்குரியவர்களாக இருக்கும் பட்சத்தில் வெளிநடப்புச் செய்யலாம். இவ்வாறு நிகழ்ந்தால் மீண்டும் ஒருமுறை போட்டியை ஒழுங்கு செய்யும் அமைப்பாளர்கள் இது குறித்து சிந்திப்பார்கள்.



அதாவது நடுவர்களாக இருக்கும் பழைய விவாதிகளில் யாராவது ஒருவரேனும் விவாதிப்பவர்களுடன் முன்பு போட்டியிட்டிருந்தவராக இருந்தால் இவ்வாறான நடவடிக்கையை விவாதிகள் மேற்கொள்ளலாம்.



**எனது கருத்து:**

தமிழ் நயத்தில் பிரசுரிப்பதற்கென ஆக்கிய இப்படைப்புக்கு அனைத்து விதத்திலும் உதவிய எல்லோருக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பலரது கருத்துக்களை உங்கள் முன்வைத்த எனக்கு, எனது கருத்தையும் தெரிவிக்கும் பணி உண்டு. அதை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளேன்.

பழைய விவாதிகள் நடுவர்களாக பணிபுரியும் நடைமுறையானது இப்போது வெகுவாக பரவி வருகின்றது. நடுவர்களாக தகுதி உள்ளோர் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் நம்மால் இயன்றவரை நடுவுநிலையை பேண முயல்கின்றனர்.

எனினும் உலகில் எதுவும் முற்றும் முழுதாக இருப்பதில்லை. ஆனால் வேண்டுமென்றே குறுகிய நோக்கம் கருதி தவறுகள் இழைக்கப்படுமாயின் அவை பலத்த சாடலுக்கு உட்படுகின்றன. இது கவலைக்குரியதாகும்.

எனினும் பழைய விவாதிகள் நடுவர்களுக்குரிய செவ்வனே செய்வார்களாயின் வரவேற்கத்தக்கதாகும். பழையவாதிகள் நடுவர்களாக அழைக்கப்படுவதால் பல தன்மைகளும் உண்டு. அதாவது ஒரு துறையைச் சார்ந்தவர்கள் அத்துறையைப் பற்றியும் அதில் எழும் பிரச்சினைகளைப் பற்றியும் மற்றவர்களை விட நன்கு அறிந்திருப்பர். இது விவாதத்துறைக்கும் பொருந்தும். அத்துடன் பழைய விவாதிகள் பாடசாலைகளுடன் பேணும். சில பழைய விவாதிகள் தமது வாழ்க்கையில் தொடர்ந்து விவாதத்துறையில் ஈடுபடலாம். அவர்கள் தமது அறிவு, அனுபவம், போன்றவை விருத்தி செய்யவும் உதவும். அதேவேளை மிகவும் முக்கியமான காரியத்துக்கு அழைக்கப்பட்டுள்ளவர் களான இவர்கள் பக்கம் சார்ந்தால் பெரும் விரோதத்துக்குரியவர்கள் ஆவர். நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி பக்கம் சார்ந்தால் ஒரு சுற்றவாளி குற்றவாளியாக தண்டிக்கப்படுவான், அல்லது தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி தப்பிவிடுவான். இதேபோல விவாதப் போட்டிகளிலும் பராபட்சம் காட்டப்படுமிடத்து ஒரு விவாதி திறமை அநியாயமாக மூழ்கடிக்கப்படுகிறது. இதனால் விரக்தி கூட அடையலாம். இவை போன்ற நிகழ்வுகள் நடைபெறாத முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஒரு போட்டி முடிவில் நடுவர்கள் அனைவரதும் கிட்டத்தட்ட ஒரே முடிவுகளாக இருக்க வேண்டும். முரண்பாடுகள் காணப்படின் தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும். ஏனென்றால் நடுவர்கள் விவாத முடிவில் விவாதிகளின் நிறை குறைகளை சொல்ல கடமைப்பட்டுள்ளனர். அதே வேளை நடுவர்களின் கருத்துக்களும் நியாயமானதாக இருக்க வேண்டும். நேர்மையாக மத்தியஸ்தம் பண்ணினால் இவ்வாறான சிக்கல்கள் எழ வாய்ப்பில்லை. அத்துடன் நீதியும் நேர்மையும் குடிகொண்டிருக்கும்.

நன்றி.

## கருக்குமட்டையைத் தேடி ...

நான் ஒருமரம் தாவி
உன் நிழலில் நின்று வெய்யில்
காய்ந்த பின் இன்று உன்
தளிரை எரித்து குளிர்காய்கிறேன்

நான் ஒரு மரம் தாவி
உன் வசந்தத்தை விட்டுவிட்டு
தென்னைமரத் தெருகூத்துக்கு
கட்டியம் கூறி தேயிலைக்கு
தண்ணீர் மாற்றிய புண்ணியவான்

மூக்குமுட்ட குடித்த நான்
நீ முறிக்கப்பட்ட போது
முழித்திருக்கவில்லை
பாக்கு வெட்டிய சத்தத்தில்
நீ மூச்சு முட்டியது எனக்கு
கேட்கவில்லை.



உன் கற்பு கள்ளாக வடிக்கப்
பட்ட போது நான் பதவிக்
கசிப்பில் பறிபோயிருந்தேன்
உன்கருக்கு மட்டைகள்
கிழிக்கப்பட்டன- நான் -கடற்
கரையோர காவோலைகளை
பார்த்து கண்சிமிட்டினேன்

உன் வடலிகள் வெட்டப்பட்ட
போது நான் கடலில் மூழ்கி
முத்தெடுத்தேன் அதனால்
நீ மகவிழந்து போனதை நானறியேன்

உன் ஓலைகள் உரியப்பட்ட போது
நான் கடலோர தாழைக்குள்
தவமிருந்தேன் நீ கதறியது
என்
காதுக்கு கேட்டது மூளைக்கில்லை!
கருவாடு கடித்த சத்தத்தில்
உன் கட்டை அரியும் சத்தம்
என் காதினை அடையவில்லை



உன் கிழங்குகள் பிடுங்கப்பட்ட
போது நான் கித்துள்பாணி
வெட்டப் புறப்பட்டுப்
போனேன்
உன் ரணங்களைப் பார்க்காமல்
நான் ரத்தினம் தோண்டினேன்.
முடிவில் நீ புதைக்கப்பட்டபோது
தென்னையும், தேயிலையும்
ரப்பரும் ரத்தினமும்
கறுவாவும் கராம்பும்
என்னை முட்டித் தள்ளின.

நான் இப்போது தேடுகிறேன்
உன்னையல்ல முறிந்தாலும்
முள்ளாய் குத்தும் உன்
கருக்கு மட்டைகளை
அவை ஒருநாள் மூடர்களுக்கு
பாடம் நடத்தும்!!

G.S. சேதுகாவலர்
**A/L 97**
உயிரியற் பிரிவு

*With Best Compliments*

*From*

திரு. விக்னேஸ்வரன்

(அளவையியல் ஆசிரியர்)

**Mr. Vighneswaran**

*With Best Compliments*

*From*

**FAIZ BROTHERS (PVT) LTD.**

**IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS**

**357, OLD MOOR STREET,**

**COLOMBO - 12.**

**OFFICE**

**TEL : 431975, 438710, 329061**

**FAX : 422983**

**E-MAIL : FAIZBRO@WEBASIA.COM**

*With Best Compliments*

*From*

# WAYAMBA TRADERS

**IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

**NO. 205, OLD MOOR STREET,**
**COLOMBO - 12**
**SRI LANKA.**

**TEL : 341288, 434174**
**FAX : 334913**

*With Best Compliments*

*From*

# Adhiparasakthi

**Charitable Medical Educational**
**& Cultural, Trust**

**MELMARUVA THUR- 603319**
**TAMILNADU**
**INDIA**

**PHONE : (04115) 22213**
**FAX : (04115) 22381**

*With Best Compliments*

*From*

# Subani Jewels

சுபானி ஜுவல்ஸ்

**(FOR GEMS AND 22CT GOLD JEWELLERY)**

**96, SEA STREET,**
**COLOMBO - 11, SRI LANKA.**
**T'PHONE : 330053**

*With Best Compliments*

*From*

# SUWARNAA GOLD HOUSE

சுவர்ணா கோல்ட ஹவுஸ்

**Pure Sovereign Gold Jewellery**
**Approved by Sri Lanka Gem and Jewellery Corporation**

**144, GALLE ROAD,**
**WELLAWATTE, COLOMBO 6.**
**TEL : 501789**

*With Best Compliments*

*From*

# Andrews Car Stereo

**SPECIALIST IN CAR STEREO SALES & REPAIR**

**73 E, DHARMAPALA MAWATHA, COLOMBO - 3**
**TEL : 074-714363, 430273, 345211**
**FAX : 074-714363**
**MOBILE : 071-57776**

**NO. 8 DEWANAN PIYATISSA MAWATHA,**
**COLOMBO - 10. TEL : 075-335764**

**WORK SHOP**
**NO 19/A, PERAHARA MAWATHA,**
**COLOMBO - 3. TEL : 430273, 345211**

*With Best Compliments*

*From*

# NEW FANCY TRADERS

**DEALERS IN : LAKLAIN PORCELAIN, LANKA CERAMICS,**
**GLASS WARE & ALL GIFT ITEMS ETC.**

**NO. 9, CHINA STREET,**
**COLOMBO - 11.**
**TEL : 329271**

# மனிதர்களின் பொய்முகங்கள்

அதற்குள் எல்லா உறவினர்களும் ஒவ்வொருவராக வைத்தியாசாலையை முற்றுகையிட தொடங்கினர். வேண்டியவர்களுக்கு தகவல் சொல்லி விட பெரிய டாக்டர் சொல்லியதால், ஆஸ்பத்திரி முழுவதும் தாமோதரம்பிள்ளையின் பட்டாளங்கள். புதுமைகளை கண்டவர் போல், ஆஸ்பத்திரியை பார்த்து வியப்படைந்து, ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால் தாமோதரம் பிள்ளையின் அறைக்கு வெளியே அவரது மனைவி சுப்பம்மாள், விம்மி விம்மி தனது கண்களை வற்றாத ஆறாக்கி கொண்டிருக்கிறாள்.

தாமோதரம் பிள்ளைக்கு மொத்தம் இரண்டு மகன்கள். மூத்தது சுதாகரன், அடுத்தது சிவகரன். சிவகரனோ வந்த உறவினர்களை மாடி ஏற்றி வலது பக்க நீண்ட வாராந்தாவிற்கு அழைத்து சென்று நர்ஸிடம் ''இவர் நீர்கொழும்பிலிருந்து வாரார். இவர் மட்டக்களப்பில் இருந்து வாரார்'' என பல பொய் சொல்லி அவர்களுக்கு இன்டென்ஸுங் கேரின் கதவின் கண்ணாடியால் அப்பாவை காட்டுவான். பார்த்தவர்களும் நிச்சயம் பிழைக்கமாட்டார் என்றாலும் ஆறுதல் சொல்ல வேண்டும் என்று சுப்பம்மாளிடம் ஏதேதோ கூறினார்கள்.

அக்காலத்தில் தாமோதரம்பிள்ளை அமைச்சராகவும் இருந்தவர். நேர்மையான வழியில் சம்பாதித்து ஒரு பெரிய பங்களாவுக்கும், 50 ஏக்கர் நிலத்துக்கும் உரிமையாளர் ஆனவர். மற்றைய கட்சி ஆட்சிக்கு வந்ததும், சாதாரணமானவர் ஆனார். இவரின் பாழாய்ப் போன சினிமா படம் எடுக்கும் ஆசை, இவருடைய உரிமைபத்திரங்கள் இன்னொருவன் கைவசமாகுமாறு செய்தது. பின் இவர் ஒரு நிறுவனத்தில் கௌரவ தொழில் பார்த்து மகன்களை படிக்க வைத்தார். அமைச்சராக இருந்த காலத்தில் கொடுத்து கொடுத்து சிவந்த கைகள். ஆனால் இப்போது, உதவி பெற்றவர் திரும்பி கூடப் பார்ப்பதில்லை அதுதானே உலகம்.

சுதாகரன் உறவினர்களை கண்டீனுக்கு அழைத்துச் சென்று உபசரித்தான். ''வந்தமா காரியம் முடிஞ்சு போனமான்னு இல்லாம, இதென்ன இழுத்தடிப்பு, ஆஸ்பத்திரியே பாத்தா செலவு நிறையவரும் போலிருக்கு. நம்ம தலையில விழாம தட்டிக்கனும்'' என்பன காத்துவாக்கில் கேட்டவைகள். இதை கேட்ட சுதாகரன் உடைந்து போனான்.

தெருக்களிலே தேர்தலுக்கான பிரசுரப்பிகளும், விளம்பரங்களும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சதாசிவத்தின் பங்களாவில், சதாசிவம் மட்டும் அங்குமிங்கும் நடந்து டென்ஷனாக இருந்தார். போனமுறை கிடைக்காமல் போன, கொழும்பு மாநகரசபை மேயர் பதவி இம்முறையும் கிடைக்காமல் போய்விடுமா என்ற பயமே டென்ஷனுக்கு காரணம், சதாசிவம் நான்கு முறையாக போட்டியிட்டும் ஒரு தடவை கூட பதவி கிடைக்கவில்லை. இம்முறையும் அதை தனபால் தட்டிக் கொண்டு சென்றுவிடுவானோ

என்ற பயத்திலிருந்தார். அப்போது பி.ஏ. வருகிறான்.

''வாய்யா பி.ஏ.''

''சார், நீங்க கவலப்படாம இருங்க, விளம்பரங்கள் அமோகமா நடக்குது''

''என்னய்யா, எப்படினாலும், பேப்பரிலே தனபால் பற்றியே கொட்ட எழுத்தில வருது ப்ரஸ் மீட்டிங் வச்சி, கைகடிகாரம் கொடுத்து என்னை பற்றி எழுத சொன்னாலும் எழுத மாட்டேங்றான்''

''அவன் பிரபல்யமாக காரணம், ஏழைக்கு உதவுறான். ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிய விசாரிக்கிறான், மக்களின் பிரதிநிதி போல சுதந்திரமா பழகிறான்'' முணுமுணுத்தபடி பி.ஏ. கூறினான்.

''நீங்க எங்க மேயராக போறீங்க, சுதந்தரமா பழகிறதில்ல, எந்நேரமும் இரண்டு பேரோடதான் எங்கேயும் போவீங்க சம்பளத்தையே ஒழுங்காதரதில்ல''

''ஆ! ஒன்றும் விளங்கலை, என்ன சொல்ற?''

''ஒன்றுமில்லை''

சிறிது நேரத்துக்குப்பின் பி.ஏ.

''நாளைக்கு தனபால், தாமோதரம் பிள்ளையை பார்த்து நன்கொடையாக ரூ10 000 கொடுக்கப் போறான்.''

''யாரது தாமோதரம் பிள்ளை?''

''அதான், நம்மட கட்சியின் பழைய அமைச்சர்''.

''ஆ! மறந்துபோய்ச்சு, அதுக்கு நாம என்ன செய்யணும்''

''நாம முந்திக்கிட்டு எவனுக்கு தெரியாமல் ரூ 25000 கொடுக்கனும். நான் பத்திரிக்க காரர்களுக்கு தெரிவிச்சிரேன்''

''ரூ 25000 மா''

''மேயராகனுனா கொடுக்கதான் வேணும்''

மறுநாளே ஆஸ்பத்திரியே அல்லோகலப்பட்டது. தனபாலனும் சதாசிவமும் வருகிறார்கள் என்று செய்தி கேட்டதும் அல்லோலகலப்பட்டது. தாமோதரம் பிள்ளையின் உறவினர்களிடையே, ''பார் இவருக்குள்ள செல்வாக்கு''

''இதற்காகத்தான் உயிரை மடித்து வைத்திருக்கிறாரோ''

''நமக்கும் சில பங்கு கிடைத்தாலும் கிடைக்கலாம்''

''தனபாலையும், சதாசிவத்தையும் பார்த்துவிட்டு கிளம்புவோம்''

தனபாலும் சதாசிவமும் தங்கள் தங்கள் நன்கொடை தொகையுடன் வீடியோ ஆட்களுடன், பத்திரிக்கை ஆட்களுடன் புடை சூழ தனியாக வந்தனர். டாக்டர்கள் அவர்களை வரவேற்று பெரும் மாலையை அணிவித்தனர். சுதாகரனை சந்தித்த தனபால்

''பழைய அமைச்சர் இப்படி கஷ்டப்படுகிறது பொறுக்கமுடியல அப்பாட ஆஸ்பத்திரி முழு செலவை ஏத்துக்கிறேன்''

என்று சொன்னதை கேட்ட சதாசிவம்.

''நான் வேணும்னா அமெரிக்காவுக்கே கூட்டி செல்வேன்''

சுதாகரனுக்கு கனவு காண்பது போலிருந்தது. திகைத்து போயிருந்தான். பணம் இலகுவானதாக தென்பட்டது. தொகை பெற்றுகொள்ள அம்மாவை அழைத்து வந்தான். சுதாகரன் இப்பணத்தால் எப்படியாவது அப்பாவை காப்பாற்றிடலாம் என கனவு கண்டு கொண்டிருந்தான். ஆனால் சுப்பம்மாளோ,

''எல்லோரும் அவருக்கு உதவி செய்ய வந்ததற்கு நன்றி. அவர் எதையும் எதிர்பாக்காம உதவி செஞ்சவர். உங்க உதவியிலே சுயநலம் தெரியுது, அது என்னது என்று சொல்ல விரும்பல, இத கஷ்டபடக்குள்ள குடுத்தா கஷ்டப்பட்டிருக்க மாட்டாரு. இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாயிருக்க மாட்டாரு. அவரு யாருகிட்டையும் கைநீட்டாம வாழ்ந்தவரு. அவர் சாகிற போதும் அப்படியே போனாத்தான் ஆத்மா சாந்தி அடையும்'' என்று கூறி விம்மி விம்மி அழுதாள்.

தனபாலும் சதாசிவமும் ஒருவரையொருவர் பார்த்தனர். சுதாகரனுக்கு விளங்கியதும் அம்மாவுக்கு ஆறுதலாக தட்டி கொடுத்தான்.

ஆக்கம்

செ.கார்த்திக்

ஆண்டு 10R

மகன் : சிறுவர்களை விட பெரியவர்களே அறிவிலும் அனுபவத்திலும் சிறந்தவர்கள் அப்பா?

தந்தை : ஆமாம்.

மகன் : மார்க்கோணிதானே வானொலியைக் கண்டறிந்தார்?

தந்தை: ஆமாம்

மகன்: அவரின் தந்தை ஏன் அதைக் கண்டு பிடிக்கவில்லை?

தந்தை : வந்து.... வந்து....

ஜெ.நிதர்சன்

ஆண்டு 7 R.

# "எது பெருமை?"

ஏ! குயிலே.....!

என்ன அப்படிப் பெருமையோடு பார்க்கிறாய்?

உன் குரல் இனிமையென்றா?

உன் இசையில் மயங்குவோர்

எண்ணற்றோர் என்றா?

மடைக் குயிலே....

எதற்குப் பெருமைப்படுவது

எப்போது பெருமைப்படுவது

என்றெல்லாம்

உனக்கு விவஸ்தையே இல்லையா?

எங்கேனும் உனக்கென்றோர்

கூடுண்டா காட்டு?

காக்கை கட்டிய கூட்டிலே

இருந்து கொண்டு....

உன் குஞ்சுகளுக்கு

காக்கை போடும்

பிச்சைச் சாப்பாட்டைக்

கொடுத்த படி....

சீ! வெட்கமாயில்லை!

உனக்குப் பெருமை உன் குரலாலல்ல!

உடனே சென்று உனக்கெனச்

சுயமாய்க் கூடொன்றை நிர்மாணித்துக் கொள்!

அதன்பின் பெருமையோடு

நிமிர்ந்து பறந்து வா!

உரிய மதிப்புக் கொடுத்து

உலகம் உன்னை வரவேற்கும்!

நிமல்ஷன் சுவர்ணராஜா

ஆண்டு 10

*With Best Compliments*

*From*

# COLOMBO CHEMICALS

**DEALERS IN CHEMICALS, DYES, FOOD COLOUR POWDERS & ESSENCES**

**64/6, DAM STREET,**
**COLOMBO - 12**
**T'PHONE : 449798**

*With Best Compliments*

*From*

# PUSHPA TRADES

**"ESSENCE HOUSE"**

**GENERAL MERCHANTS**

**WHOLESALE & RETAIL DEALERS IN ALL VARIETIES OF ESSENCES COLOURING MATTERS, BAKERY PRODUCTS, CAKE INGREDIENTS AND GROCERIES**

**131, DAM STREET,**
**COLOMBO - 12**
**DIAL : 436293**

*With Best Compliments*

*From*

# modern Plastics Centre

**DISTRIBUTOR FOR**
**F.M.J. PLASTICS, YOGHURT CUPS & ALL PLASTICS ITEMS**

**NO. 60, DAM STREET,**
**COLOMBO - 12**
**SRI LANKA**
**PHONE : 320296**

*With Best Compliments*

*From*

# Stats / Accounting

**(English Medium)**

**M. ROY** B.B.A, PGMS (FINAL), MIAB (UK)

* A/L (SRI LANKA / UK)
* IAB (UK)
* AAT (SL)
* CIMA (UK)
* CHARTED (L-1)
* CIM (UK)
* BANKING (SL)
* DIP. IN MARKETING (UK)

**75, GALPOTTE STREET,**
**COLOMBO - 13**

*With Best Compliments*

*From*

# PETTAH ESSENCE SUPPLIERS

**SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS IMPORTERS OF ALL KINDS OF FOOD COLOURS ESSENCES, CHEMICALS, GROCERIES ETC.**

18/1, DAM STREET,
COLOMBO - 12.
SRI LANKA.

PHONE : 326235 - 449269 - 434859
TELEX : 22948 ESSEN CE
FAX : 434859

*With Best Compliments*

*From*

# PRABA TRADING COMPANY

**Importers of Food & Idustrial Chemicals, Dyes & Flavours**

31, GABO'S LANE,
COLOMBO - 11.
SRI LANKA

TEL : 329426, 422750
TLX : 22027 - CROSS CE
FAX : 94-1-501441

*With Best Compliments*

*From*

# PRATHA TRADING CO.

* SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS
* IMPORTERS OF ALL KINDS OF FOOD COLOURS ESSENCES CHEMICALS, ETC.
* COMMISSION AGENT

NO. 64, DAM STREET,
COLOMBO 12
PHONE : 445626

*With Best Compliments*

*From*

# CITY ESSENCE HOUSE

**DEALERS IN ESSENCE, PERFUMES & CAKE INGREDIENTS**

68, DAM STREET,
COLOMBO - 12,
SRI LANKA.

TELEPHONE : 432639, 343877

*With Best Compliments*

*From*

# Seyadu Beedi Depot

**192, OLD MOOR STREET,**
**COLOMBO - 12,**
**SRI LANKA.**

**PHONE : 432301**

*With Best Compliments*

*From*

# K.M. MEERA SAHIB & SON

**WE DO NOT HAVE ANY BRANCHES**
**FOR AROUND 50 YEARS SERVICE**

**WE STOCK SPECIAL QUALITY CAKE INGREDIENTS**
**BEST BURIYANI CONDIMENTS AND**
**ALL THE OTHER GROCERY ITEMS**

**234, OLD MOOR STREET,**
**COLOMBO - 12**
**PHONE : 431482**

*With Best Compliments*

*From*

# SIGMA CHEMICALS

**AGENTS IN SRI LANKA FOR "OXOID"**
**"UNIPATH" PRODUCTS OF UK**

**IMPORTERS OF LABORATORY, CHEMICALS, EQUIPMENT, LABORATORY GLASSWARE & INDUSTRIAL CHEMICALS**

**388/1, 2ND FLOOR, TIA BUILDING,**
**GALLE ROAD, COLOMBO 3, SRI LANKA**
**TEL : 574809, 574810**
**TELEFAX : 5748910 SIGMA CE**

*With Best Compliments*

*From*

# Noovannah Trading Co

**193, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**

**TEL : 337702 & 431582**

*With Best Compliments*

*From*

# CITY HARDWARE CENTRE

**SPECIALISTS IN GI WIRE AND GENERAL HARDWARE**

**413, A OLD MOOR STREET,**
**COLOMBO 12.**

**TEL : 432293, 449247**
**FAX : 449258**

*With Best Compliments*

*From*

# Standard Steel Centre

*** Importers * Suppliers**
*** General Hardware Merchants**
*** Authorised Dealers For Ceylon Steel Corporation Products**

**303, OLD MOOR STREET, COLOMBO - 12, SRI LANKA**
**OFF : 311, 2ND FLOOR, OLD MOOR STREET, COLOMBO - 12**
**PHONE: 323151, 439454 (R) 587663 FAX : 449258.**

*With Best Compliments*

*From*

# T.M.B.& Co.

121, 5TH CROSS STREET,
COLOMBO - 11.

PHONE : 448874, 434244

*With Best Compliments*

*From*

# Rajah Steel Centre

**IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS**

303, OLD MOOR STREET,
COLOMBO 12

PHONE : 431705

பாடசாலைக்குள் இடம் பெற்ற கட்டுரைப் போட்டியில்
முதலிடம் பெற்ற கட்டுரை

# இடம் பெயர்வுகளும் கலாசார தாக்கங்களும்

ஒரு கூட்டு குருவிகள் வேறுகூட்டில் சென்று இன்னல் அடையும் பாங்கினை தற்பொழுது மனிதன் ஏய்தியுள்ளான் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. இது ஒரு நாட்டை பொருத்தமட்டில் நாட்டின் அரசியல் எல்லைக்கு அப்பால் சென்று வாழ்வது இடம்பெயர்வாகும். அல்லது வேறுநாட்டிலிருந்து உள்நாட்டிற்கு குடிபெயர்வதும் இதுவாகும். இன்று உலகில் நாடுகள் ஒன்றை ஒன்று தங்கி இருக்கின்றது. இதனை அடிப்படையாக கொண்ட கெயின்ஸ் எனும் பொருளியல் ஆளர் பொதுகொள்கை என்ற நூலையே எழுதி அச்சிட்டதில் வியப்பில்லை, வியப்புமில்லை.

காணக் கண்கோடி வேண்டுமையா எம் இன்னல்களை என்று ஆசியா நாடுகள் அலறுவதை இன்று ஐரோப்பியா நாடுகள் பார்த்து ஏளனச்சிரிப்பு சிரிக்கின்றது. இதற்கு காரணம் எதுவென்று சற்று சிந்தித்து பார்த்தால் அதற்கு விடை நாமே. ஆம்! மூலப்பொருட்களை, மூலதனப் பொருட்களாக்க முடியவில்லை, அமைதி புறாவை பறக்கவிட்டு அமைதியை தேடினால் எவ்வாறு கிடைக்கும், சிறு ஜாதி பெரும் ஜாதி பிரச்சனை, இனங்களுக்கிடையிலான வேற்றுமைகள் போன்ற இன்னொரன்ன செயற்பாடுகளின் விளைவு இன்று நமது இடம்பெயர்வுக்கு காரணம் இதுவே சத்தியம்.

இற்றைக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாடுகான் பயணிகள். ஆசிய நாட்டை ஆக்கிரமித்தனர். தோழனாக வந்து, பின் விரோதனாக மாறியது ஏனோ? உயிர் கொடுப்பான் தோழன் உயிரை ஏன் கெடுத்தான் என்றால் அது நம்முடைய மூடநம்பிக்கை, விடாப்பிடி, உள்நாட்டு போர், சகோதரத்துவமின்மை, எல்லாம் நம்நாட்டு மக்கள் என்ற உண்மை இல்லை; போன்ற காரணங்களே வெளிநாட்டான் நம் நாட்டில் இடம்பெயர்ந்து எமது மூலாதாரமான நெற்பயிர் செய்கையை மாற்றி அவர்களுக்கு இலாபம் தரக்கூடிய கோப்பி, தேயிலைகளை பயிரிட்டு நமது நாட்டின் வளங்களை சுரண்டினர். இது காலனித்துவம் எனப்பட்டது.

வெள்ளையன் போனால் அவன் குணம், நடை, உடை, பாவனை போகவில்லை என்பதில் ஐயமில்லை. போர்த்துகீசனின் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் ஆக்கிரமிப்பு நமது கலாச்சார சின்னங்களின் அழிவிற்கு காரணமாயிற்று. றுவின்வெலிசய, துபராம போன்ற தூப கோபுரங்கள் அழிக்கப்பட்டன. பல்லவ கால கருங்கல் கோவில்கள் இடிக்கப்பட்டன. பல கோயில்கள் பூஜைகள் இல்லாத புதர்கள் மறைத்து நிற்க விலங்குகள் உலாவின. இலங்கையில் ஞானசம்பந்தர் பாடப் பெற்ற தளங்கள் மறைந்து கிடந்தன.

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதம், கலாச்சாரம் விரைவாக பரவின. எதிர்த்து பேச முடியாத நிலை போர்வளம் அவர்களிடம் மனிதவளம் நம்மிடம் இருந்தும் பிரியோசனமில்லை. படிக்க வேண்டுமானால் அவர் மதம் மாற வேண்டும். பூஜைகளுக்கு செல்ல முடியாது. மாறாக கிறிஸ்துமிகைகளுக்கே செல்ல வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதுபோலவே ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பும் இருந்தன. இதனால் கலாச்சாரம் மாறி ஆங்கிலேய கலாச்சாரம் பரவியது. இது இலகுவாகவும், ஈர்க்க கூடியதாகவும் இருந்ததே காரணம். ''ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்'' இட்டது போல பழைமையான நமது கலாச்சாரம் மாற்றமுற்றது. நமது நாடுகளில் காணப்பட்ட ஜாதி

பிரச்சினையே இதற்கு வழிகோரியது. கீழ்ஜாதி இனத்தவர் மதம் மாறினர். கலாச்சாரத்தையும் மாற்றினர். போர்த்துக்கீச, ஒல்லாந்தர், ஆங்கிலேயே நாட்டார்களின் இடப்பெயர்வு கலாச்சார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினாலும் நமது பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது. புகையிரத சரிவுகள், பஸ்நிலையங்கள், வீதிகள், பாடசாலைகள், வர்த்த ஸ்தலங்கள் என்று பல்வேறு நிலையங்கள் அமைத்து நாட்டின் புனரமைப்ப நடவடிக்கைகளுக்கு உறுதியாயிற்று,

இருபத்தொறாம் நூற்றாண்டின் கால் அடி எடுத்து வைக்கும் மனிதன் இன்னும் இடப்பெயர்வு நடவடிக்கையை கைவிடவில்லை. மேல்படிப்பிற்கு ஆசியா நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், நாட்டின் அமைதி இன்மை காரணமாகி அகதிகளாக வேறுநாடுகளுக்கும், வெளிநாட்டு கலாச்சார மோகத்தால் வேறுநாடுகளுக்கும், வறுமையின் மத்தியில் வேலைவாய்ப்பை பெற வேறுநாடுகளுக்கும் இடம்பெயர்வது இன்று நாம் காணக்கூடிய விடயமாகும். இவற்றால் நமது நாட்டு மனிதவளம், மூலதனவளங்கள் சுரண்டப்படுகின்றன. இது ஐரோப்பிய நாடுகள் கைக்கொள்ளும் நவகாலனித்துவ சுரண்டலாகும். வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் அங்குள்ள பெண்களை மணம்முடித்து, தமது இனத்தை விட்டு வேறு இனம் மாறுவது என்ற விடியங்களை கேட்டு காது புளித்து விட்டது. அமைதி, சாந்தம், ஒழுக்கம் என்ற உயர்பண்புகளை கொண்டிருந்த ஆசியா நாட்டு பிரஜைகள் வெளிநாட்டில் களவு, கொலை, பிற பெண்களை வதைத்தல் போன்ற கொடூழிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது ''காய்ந்த புண்ணுக்கு வேல்பாச்சுவது போலாகும்'' அகதிகளாக வரவேற்பவர்களை சித்திரவதை செய்வது கொடுமையிலும் கொடுமை. வேலைவாய்ப்பை தேடி போவார்கள். உடனே திரும்பி வருவார்கள். சிலர் அந்நாடுகளிலே செய்யாத குற்றத்திற்காக மாண்டனர். கலாச்சார ப்ாவனையிலான உடை, நடை, ஒழுக்கம் மாறி இன்று நவநாகரீகம் என்ற போர்வையில் மனிதன் அழைக்கிறான்.

ஒரு நாட்டில் காணப்படும் அமைதி இன்மைகாரணமாக வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து கஷ்டங்களுக்கு உட்படுவது இன்று நாம் காணக்கூடிய விடயமாகும். உயர்வாடகை, பொருட்கள், விலை அதிகரிப்பு, சௌகரியமின்மை, கொடுமை என்ற மத்தியில் நமது கலாச்சாரத்தை பேணி பாதுகாப்பது பெரிதும் வியப்பானது. கலாச்சாரத்தை பேணிப்பாதுகாத்து வந்த சுவாமி விவேகானந்தர் யோகர் சுவாமிகள், அனதாரிக்க தர்மபால போன்றோரின் உன்னதமான வேலை போற்றத்தக்கது. தமிழர் வேட்டி, சேலை அணிந்து விபூதி பூச்சு பூசிய காலம் மலையேறிவிட்டது. சிங்களவர் கம்பாய உடை அணிந்து, ஆண்கள் சாரம் கோட் அணிந்த காலம் போய் தற்போது ஜீன்ஸ், சேட் என்று வெளிநாட்டு கலாச்சார உடைகள் நம் மத்தியில் உலாவருகின்றன.

''இக்கரைக்கு அக்கரைபச்சை'' போல் மனிதன் தேடி திரிவது பரிதாபகாரமானது. இந் நிலை போக வேண்டும். அமைதியை மனிதன் நாட வேண்டும். கலாச்சாரத்தை மனிதன் பேணவேண்டும். வாழ்க மனிதன் வாழ்க்கைகலாச்சாரம்.

**S.தினேஷ்**

**வர்த்தகபிரிவு**

**ஆண்டு 13 D**

*With Best Compliments*

*From*

# PRASAD ENTERPRISE

**IMPORTERS**

**15, OLD BUTCHER STREET,**
**COLOMBO - 11,**
**SRI LANKA.**

**PHONE : 338435**
**FAX : 94-1-332636**
**MOBILE : 071-23284**

*With Best Compliments*

*From*

# Sivath Trade Centre

**NO. 6, WOLFENDHAL STREET,**
**COLOMBO 13**

*With Best Compliments*

*From*

# AIRTRAV

**Travel Agent & Tour Operators**

**163, GALLE ROAD, KOLLUPITIYA,
COLOMBO - 3, SRI LANKA.**

**TEL : 424277, 423397, 448718, 421664
FAX : 448715**

*With Best Compliments*

*From*

**திரு. எஸ். வரதராஜன்**

(ஆசிரியர்)

**MR. S. VARATHARAJAN**

# அறநூல்கள்

'இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் நீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்''

(நாலடியார்)

மனிதனின் வாழ்வு இவ்வுலகுடன் மாத்திரம் முற்று பெறுகின்றதன்று. இவ்வுலக வாழ்வின் தொடரே விண்ணுலக வாழ்வாகும் எனவேதான் ஈருலகிலும் ஈடேற்றம் பெறத் தக்க வாழ்க்கை வழிகாட்டல்களை, முன்மாதிரியான படிமுறைகளை தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்கு மனிதன் உட்படுத்தப் படுகின்றான். விஞ்ஞான அறிவையும், அதனால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆக்கங்களையும் அனுபவித்து வருகின்ற மக்கட் சமுதாயம், வாழ்வாங்கு வாழ தக்க நெறிமுறைகள் கூறுகின்ற அறநூல்களுக்கு அளிக்கின்ற முக்கியத்துவம் மிக குறைவாகவே உள்ளது.

இத்தகைய விஞ்ஞான அறிவியல் நூல்களின் மூலம் அறிவை பெறுவதால் இவ்வுலகில் கிடைக்கின்ற இன்பங்களை தவிர வேறு பலன்களை பெறமுடியாது. ஆகவேதான் காலத்துக்கு காலம் தோன்றிய அறக்கருத்து பொதிந்துள்ள நூல்கள் மக்களை நல்வழிப் படுத்த பின் நிற்கவில்லை. தமிழ் இனம் ஏனைய இனத்தாரிலும் உயர்ந்த பண்பும், சிறந்த குணங்களையும் கொண்டவர்களாய் நமக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றி வாழ்வதற்கு காரணம் இத்தகைய அறநூல்களேயாகும், என்றால் மறுத்துரைக்க யாருமில்லை. இதனால் தான் தமிழின் சிறப்பை கவிஞர் ஒருவர் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல், இனிதாவதெங்கும் காணோம்'' என்று மிகை படக் கூறுகின்றார்.

சங்க மருவிய தொகை நூல்களிலும் அதன் பின்னரெழுந்த கீழ் கணக்கு நூல்களிலும், காவிய நூல்களிலும் புதைந்து கிடக்கும் நற் கருத்துக்களும், வாழ்க்கை நெறிமுறைகளும் எக்காலத்தும் நின்று பயன் தரத்தக்கன. அத்தகைய நூல்களுள் தலைமையிடம் பெற்று நிற்பது பொய்யா மொழியான திருக்குறளாகும். அதனை அடுத்து அமைந்து காணப்படுவது நாலடியாராகும். திருக்குறளும், நாலடியாரும் பதின்னென் கீழ்க் கணக்கு நூல்களை சேர்ந்தன. கூற வேண்டிய பொருளை இரண்டே அடிகளில் நுட்பமாகவும், ஆழமாகவும், கூறுவது திருக்குறளாகும். ஆனால் கற்போர் உள்ளத்தில் எளிதிலே பதியுமாறு, தக்க சான்றுகளுடன் விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைப்பது நாலடியாராகும்.

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்ற பழமொழி

(நாலும் - நாலடியார், இரண்டும் -திருக்குறள்) மேற்கூறப்பட்ட நூல்களின் சிறப்பை உணர்த்துகின்றன.

நிலையற்ற தன்மையுடைய செல்வம், இளமை யாக்கை ஆகியவற்றின் நன்மைகளை உணர்ந்து, இம்மையிலும் மறுமையிலும் நிலையுடையதானதும் முத்திக்கு

வழிவகுப்பதுமான அறத்தின் உயர்வைக் கூறுகின்ற பகுதியே நாலடியாறில் காணப்படும் அறன் வலியுறுத்தலாகும். மேலும் இல்லற வாழ்வை இனிதே கொண்டு நடாத்துவதற்குப் பொருள் இன்றியமையாதது. நல்வழியில் பொருளை தேடி இல்லற வாழ்வை கொண்டு நடாத்துபவன் அறப் பணிகளில் ஈடுபட்டு நிலையான முத்தியின்பம் பெறும் வழி வகைகளை நாட, அது பற்றிய அறிவை தரும் கல்வியே வேண்டும் என்று கல்வியின் சிறப்பையும் மிகை இன்பமாக எடுத்து காட்டுவது நாலடியாராகும்.

''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு''

கற்பதன் சிறப்பை மேலும் வலியுறுத்தி கூறுகின்றார் திருக்குறள் மூலம் திருவள்ளுவர். மேலும் இது போன்றே தமிழ் மங்கையின் அணிகலன்களாக விளங்குகின்ற அரும்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி போன்றவையும் அறநூல்களின் வரிசையிலே நின்று துளிர் விட்டு கொண்டிருக்கின்றன.

எனவே நாம் இங்ஙனம் ஆராய்ந்து பார்க்கும் போது தன்னை விட மற்றவர்களையும், மற்ற உயிரினங்களையும் அண்டி ஆதரித்து தர்மம் போன்றவற்றில் ஈடுபட்டு, அவைகளுக்கு நோவினைகள் எம்மால் ஏற்படாமல் இருக்க இவ்வாறான அற நூல்களின் வழிகாட்டல்கள் துணைபுரிகின்றன. எம்மை புனிதனாக கூட இந்த அறநூல்கள் மாற்றும் என்பது உண்மையாகும். ஆகவே தான் இவற்றை ''கற்றது கையளவு கல்லாதது உலகளவு'' என்பதற்கு இணங்க மேலும் பூரணமாக கற்று கொண்டால் இதன் மூலம் ஈருலகிலும் ஈடேற்றம் பெறலாம் என்பது வெள்ளிடை மலை.

H.M.மஹ்முத் றாமி

ஆண்டு - 13 Sc -L

றோயல் கல்லூரி

*With Best Compliments*

*From*



# KALA TRADERS


**Importers & Exporters**

**NO. 151, DAM STREET,**
**COLOMBO 12**

**TEL : 435284 - 448747 - 435272 - 438448**
**343218 - 343219**
**RESIDENCE : 327694 - 448574**
**FAX : 448574**

*With Best Compliments*

*From*



# ABDULLA INDUSTRIES & PAPER BAG MFY

**MANUFACTURES OF**

**RUN RAT** **RUN BUG**

**& VARIOUS SIZE OF PAPER BAGS**

**72 BARBER STREET,**
**COLOMBO - 11**
**PHONE : 433952, 422995**
**FAX : 433952**

# உள்மனதின் யாத்திரைகள்



"நான் காதல் எனும் தீயில் வெந்துருகி வாடுகையில்
"என்னவள்" என யாருமில்லை என்ற என் துயர்போக்கி;
காதல் என்பது என்ன என்று உணர்த்திட எங்கிருந்தோ வந்தாய்;
முன்பிருந்த துயர்நீக்க வந்த துருவநட்சத்திரம் என நினைத்தேன் -உன்னை

அன்றொரு நாள் நிலை வொளியில்
"அண்ணாவின் நண்பரா நீர் அழகாக பேசுகிறீர்" என கூறி,
கண் கோள்ளா கற்பனைகள் எல்லாம் என் கண்களில் தேங்கவைத்தாய்;
அன்றுமுதல் உண்ணாமல் பசிதீர்ந்து, உறங்காமல் கனவுகண்டு
எத்தனை நாள் ஏங்கியே கழித்தேன்.
பேச்சால் என்னை பேச்சிழக்க பண்ணிய பெண்ணே -உனக்காக

ஆண் என்ற உயர்வுநீக்கி; மூத்தோன் என்ற மதிப்பை விட்டு -எந்நாளும்
உண்மையாய் உனக்காய் வாழ்வேன் என்று புலம்பினேன் உன்முன்னால்
பெண்மையின் இரக்கம் சிறிதும் பெறாத்தன்மையால்
அண்மையில் வந்தும் விலகியும் விளையாட்டு பொம்மை ஆக்கினாய் எனை
-நீயும்

இதயத்தின் உணர்ச்சியெல்லாம் எழுத்தில் வடித்து -என்னன்பு
உதயத்தின் கோடுகாட்டி கணக்கில்லா கடிதம் வரைந்தேன் -நான்
இதயத்தின் நிழலே படா சொற்கோவையால்
"உனதிதயத்தின் தன்மையறியேன் நண்பனே!"
என்று எழுதினாய் -நீ காதல் எதற்காக?

அலங்கார உடை உடுத்தி விழாவொன்றில்
தோழியுடன் வலம் வந்தாய் ஒருநாள் நானோ ஏழ்மையின் தோற்றத்தால்
வெட்கி நிலமே விழுங்காயோ என மனம் புழுங்கும் வேளை
என்னைப்பார்த்து சிரித்தாய், திகைத்தேன்; அன்புள்ளாய் என நினைத்தேன்
பின்னர்தான் புரிந்தது அது ஏளனச்சிரிப்பு என்று



என்னதானிருப்பினும் உனை மறவேன் என உன் வாயால்
சொன்ன சொல் காற்றில் கலந்ததோ
"அன்புடைய " என தொடங்கி முன்னொரு நாள் எழுதிய
எழுத்தெல்லாம் கரைந்ததுவோ – நீரில்
உன்னலம் தான் உசிதம் என நினைத்தயோ?
எனை மறந்தாயோ சொல்

இன்று என்வாழ்வு துன்பத்தில் குடிகொண்டு
துயருற்றும் ஏளனப் பேச்சு பலவாறாக சூழ்ந்திட்டும்
நான் வருந்தவில்லை என் பாவம் தீர்க்கவே
இப்பிறப்பில் உன் மீது ஆசை வைத்தேன்
அதுவன்றி என்வாழ்வுக்கு அழிவும் வைத்தேன்!!

பா.வசீகரன்
A/L 97
கணிதப்பிரிவு

- கடவுளின் மகத்தான சிருஷ்டி மனிதன். மனிதனின் மகத்தான சிருஷ்டி கடவுள்.

- கடவுளால் மாற்ற முடியாத கடந்த காலத்தை சரித்திராசிரியர் மாற்றிவிடுவர்.

- இன்றைய பிரச்சினைக்கு நேற்றைய பதில் அளிப்பது அரசியல்

- ஆடுகளை போன்ற ஒரு ஜனம் ஓநாய்களை போன்ற ஆட்சியாளர்களைதான் பெறும்.

*With Best Compliments*

*From*

# KUMARAVEL COY.

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**


**DEALERS IN : PROVISIONS**

**217, FIFTH CROSS STREET,**
**COLOMBO - 11.**

**PHONE : 421057**

*With Best Compliments*

*From*



# ARTLINE TRADERS

**Paper Merchants, Stationers, Agents for Avalon Brand Photocopy Paper & Paperline Brand Company Paper**

**61, 1ST CROSS STREET,**
**COLOMBO - 11.**

**TEL : 433815**

*With Best Compliments*

*From*

# A WELL WISHER

*With Best Compliments*

*From*

# MERCANTILE
# MERCHANT BANK LIMITED

**300, GALLE ROAD,**
**COLOMBO 03,**
**SRI LANKA.**

**Tel : 94-1-577431, 577432, 575467**
**Fax : 94-1-575440**

# நன்றிகள் கோடி...

* கால்நடை வளர்ப்புத்துறை, மலையக உள்ளகக் கட்டமைப்புத்துறை அமைச்சர் கௌரவ சௌ. தொண்டமான் (பா.உ) அவர்களுக்கும்
* எமது ஒத்துழைப்பு மிக்க அதிபர் திரு. S.H. குமாரசிங்க அவர்களுக்கும்
* எமது உதவி அதிபர்களுக்கும்,
* எமது பொன்மனம் படைத்த பொறுப்பாசிரியர்க்கும்,
* விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்,
* ஒளி வழங்கிய பராக்கிரம நிறுவனத்துக்கும்,
* ஒலி வழங்கிய Baseline Sounds நிறுவனத்துக்கும்,
* இசைக்கருவிகளை வழங்கிய Thiyagu'sக்கும்,
* அட்டை வடிவமைப்பினை அழகுறச்செய்த A.M. றஷ்மி அவர்களுக்கும்,
* மலர் தனையாக்கியளித்த Techno பதிப்பகத்தாருக்கும்,
* பலவழிகளிலும் உதவிய பெற்றோர்களுக்கும்,
* பழைய மாணவர்களுக்கும்,
* எமது போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவமாணவியருக்கும்,
* விழாவைக் காணவந்த ரசிகப் பெருமக்களுக்கும்,
* எப்.எம். 99 வானொலி நிலையத்தாருக்கும்,
* குறிப்பிட வேண்டிய குறிப்பிட மறந்த அனைவருக்கும்,

கோடானுகோடி நன்றிகள் பகர்கிறோம் இம்மலராலும் மனத்தாலும்

# Our Heartfelt Thanks are due to

* Minister Hon. S. Thondaman (M.P) who has been kind enough to honour the occasion with his presence as chief guest.
* Our Principal Mr. S.H. Kumarasinghe who has extended all support and encouragement for our venture,
* Our Vice principals and our Teacher-in charge Mr. S. Ratnasabapathy for standing by us always and giving us all the encouragement and support we needed.
* The Advertisers and well wishers who have contributed to the success of this souvenir
* Parakrama Electical for their excellent lighting and Baseline Sounds for the sound systems.
* Mr. Thiyagu's for having provided the musical instruments used in the programme " The Final CountDown"
* Mr. A.M. Rashmy whose art work adorns the cover of this souvenir.
* Techno Printers, for their undying effort to print the souvenir
* Teachers and Students of all schools who participated in the Kalai Vizha 97 to make it a success.
* The parents and old boys, who granted their support where it was necessary.
* All Patrons of the Tamil Language who have come to grace this occation with their presence.

**Tamil Literary Association**


**Royal College**

*With Best Compliments*

*From*

# O/L 94

WAFEE
IZMY
VIGNAHARAN
FAIZEEN
FAZLY
KRISHANTH
MUSTHALIE
SHANKER
JAHIR
KOPIKARAN



JEGATHEESH
KISHO
IRSHARD
SUTHA
WIGNESH
VENKATESH
GANATHEEPAN
GANESH
YUBENDRAN
SHABIR
KUMARAN
TRICKY
VARANGAN

**FRIENDSHIP IS SOMETHING SPOKEN BY THE HEART : TRUE FRIENDSHIP LAST FOREVER. THESE PEOPLE WILL BE FRIENDS FOR "ETERNITY".**

*With Best Compliments*

*From*

# SIEMENS NIXDORF

**SOLE REPRESENTATIVE IN SRI LANKA**

# Informatics

**Building Better Solutions Throught Integration**

**HEAD OFFICE:**
**65, WALUKARAMA ROAD,**
**COLOMBO 03.**